உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 117 பங்குனி 09ஆம் நாள் வெள்ளிக்கிழமை 23 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

அமெரிக்கா செல்ல நாமலுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, மார்ச் 23

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அமெரிக்கா செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதனால் அவர் அங்கு பயணம் செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் மொஸ்கோவில் இருந்து, அமெரிக்காவின் ஹொஸ்டன் நகருக்குச் செல்ல முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் » 25

4,500 ஆண்டுகள் பழைமையானது தமிழ்!

ஜேர்மனிய ஆய்வில் அறுதியாகத் தெரிவிப்பு

பெர்லின், மார்ச் 23

திராவிட மொழிக் குடும்பம் சுமார் 4 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமையானது என்று ஜேர்மனியப் பல்கலைக் கழகமொன்று தனது ஆய்வின் அடிப்படையில் குறிப்பிட்டது.

இது தொடர்பில் அந்தப் பல்கலைக் கழகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 'திராவிட மொழிக் குடும்பம் மிகவும் தொன்மையான தாக விளங்குகிறது. சுமார் 80 மொழி » 25

சங்கானை குருக்கள் கொலை;

கொலை, கொள்ளை, சூடு தூக்கு, ஆயுள், சிறை

ராணுவ கோப்ரல், முன்னாள் புலி உறுப்பினர் உள்ளிட்ட மூன்று பேருக்கு நேற்றுத் தண்டனை

யாழ்ப்பாணம், மார்ச் 23

சங்கானையில் இந்துமத குருக்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று, இருவரைப் படுகாயப்படுத்திக் கொள்ளையடித்த மூவருக்கும், தூக்குத் தண்டனையும், ஆயுள் தண் டனையும் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. யாழ்ப்பாண மேல்நீதிமன்று நேற்று இந்தத் தீர்ப்பை அறிவித்தது. ராணுவ கோப்ரல், முன்னாள் புலி உறுப்பினர் உட்பட மூன்று பேருக்கு இந்தத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. » 24

கூட்டணிக்குள் குழப்பம்

சங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது. இந்த நிலை » 06

புலிகள் அமைப்பில் இருந்ததால் ராணுவத்தினர் சிக்க வைத்தனர்

குற்றவாளிகளில் ஒருவரான முகுந்தன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 23

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த எம்மை இராணுவத்தினர் குருக்களின் கொலை வழக்கில் சிக்க வைத்துள்ளார்கள் என்று குருக்களின் கொலை வழக்கில் குற்றவாளிகளாக நீதிமன்றால் இனங்காணப்பட்டவர்களில் ஒருவரான முகுந்தன் மன்றில் தெரிவித்தார். அவர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தவர்.

சங்கானைப் பகுதியில் இந்து மத குரு ஒருவரைத் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்து நகைகளை கொள்ளையடித்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது: » 06

யார் சொல்வது பொய்?

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் வந்திருந்த அரச தலைவர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் அவர் சந்திக்கவில்லை என்று அருட்தந்தை தலைமையிலான குழுவினர் குற்றஞ் சாட்டினர்.

ஆனால் அவ்வாறான சந்திப்பு இடம் » 24

முறியடிப்புச் சமருக்கு தயாராகிறது ஐ.தே.க.

ரணிலுக்கு ஆதரவாக கையெழுத்துவேட்டை

கொழும்பு, மார்ச் 23

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தலைமை அமைச்சர் மீதான நம்பிக் » 23

ரணில் – சம்பந்தன் மந்திராலோசனை

கொழும்பு, மார்ச் 23

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் முக்கியத்துவம்மிக்க சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியி » 23

முல்லைத்தீவிலிருந்து

காணாமற்போயிருந்த மீனவர் மூவரும் தமிழகத்தில் உள்ளனர்

யாழ்ப்பாணம், மார்ச் 23

முல்லைத்தீவில் இருந்து மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன மீனவர்கள் தமிழகத்தின் கடலூர் மாவட்டத்தில் உள்ளனர். அவர்கள் தமது பொறுப்பில் தற்போது உள்ளனர் என்று கடலூர் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் இருந்து கடந்த 12ஆம் திகதி அதிகாலை மூன்று மீனவர்கள் படகில் தொழிலுக்குச் சென்றிருந்தனர். சிலாபத்தைச் சேர்ந்த மில்ராஜ் மிரண்டா (வயது - 51), இமானுவேல் மிரண்டா (வயது - 48), மிதுற தன் மிரண்டா (வயது » 25

ரணிலின் தலைவிதி ஏப். 4 இல் நிர்ணயம்

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது 12 மணி நேரம் சபையில் விவாதம்

கொழும்பு, மார்ச் 23

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் » 25

தோல்விக்கு அஞ்சியே மகிந்த பின்வாங்கல்

கொழும்பு, மார்ச் 23

அரச தலைவர் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றில் தோல்வியடைந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச » 23

ஆள்களைப் பாதுகாக்கும்

சிக்கலான சட்டமூலத்தில் சபாநாயகர் ஒப்பமிட்டார்

கொழும்பு, மார்ச் 23

நாடாளுமன்றத்தில் கடந்த 6ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகல ஆள்களையும் பாதுகாக்கும் பன்னாட்டுச் சமவாய சட்டமூலத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய கையொப்பமிட்டுள்ளார்.

இந்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய கையொப்பத்தை சபாநாயகர் வைக்கக்கூடாது என்று கூட்டு எதிரணியும், கடும்போக்கு » 25

உறுதியான வாழ்க்கைப் பயணத்திற்கு

DFCC நிலையான வைப்பை ஆரம்பியுங்கள்

ஒரு வருட நிலையான வைப்பிற்கு 11.5% அதிக வட்டி

சிரேஷ்ட பிரஜைகளுக்கு ஒரு வருட நிலையான வைப்பிற்கு 12% வட்டி

24 மணிநேர அழைப்பு சேவைக்கு: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

நீர் பற்றாக்குறையால் 20மில். பேர் பாதிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 23

தற்போது நீர் இன்றி 20 மில்லியன் மக்கள் பாதிப்புக் குள்ளாகியிருக்கின்றார்கள் 2050 ஆம் ஆண்டு ஆகும் போது 3 பில்லியன் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது 1.8 மில்லியன் மக்கள் குடிப்பதற்கு தகுந்த நீரைப் பயன்படுத்தாத நிலைமையே உள்ளது.

இவ்வாறு யுஸ்.எஸ்.எயிட் நிறுவனத்தின் பிரதிக் காரியாலய பணிப்பாளர் அலேனா தன்ஸே தெரிவித்தார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு யுஸ்.எயிட் நிறுவனத்தின் பங்களிப்புடன் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

நீர் தொடர்பில் உலகத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம், மற்றும் உலகத்தில் ஏற்படுள்ள சர்ச்சைகள் தொடர்பில் நாங்கள் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். நீர் உடலுக்கு மாத்திரமின்றி வாழ்வாதாரத்துக்கும் தேவையானது என்பது நாம் அனைவரும் அறிந்த விடையமாகும்.

வரட்சியும், நீர் மாசடைவதும் மிக முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது.

பல கிணறுகளில் நீர் இருந்தாலும் அங்குள்ள நீர் அருந்துவதற்கு ஏற்றதாகக் காணப்படவில்லை.

யு.எஸ்.எயிட் நிறுவனம் உலகம் முழுவதும் இருக்கக்கூடிய 15 மில்லியன் மக்களுக்கு நீர் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எமது நிறுவனத்தினூடாக மழை நீர் சேகரிப்பு, குழாய் மூலமான நீர் வழங்கள் போன்ற செயற்றிட்டங்களைமேற்கொள்கின்றோம்.

இந்தச் செயற்றிட்டத்தை அரசின் நிருவாக்க கட்டமைப்புக்களினூடாகவும், மக்களின் ஒத்துழைப்புக்களினூடாகவுமே மேற்கொள்ள முடிந்தது.என்றார்.

(ற-ரி4,46)

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயமாகத் தோல்வியடையும்

அடித்துக் கூறுகின்றார் அஜித் பெரேரா

கொழும்பு,மார்ச் 23

கூட்டு எதிர்க்கட்சியால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அச்சமடையப் போவதில்லை. அது தோற்கடிப்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரக் காரணம், மோசடிகளுக்கு எதிராக மேல்நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதைத் தடுப்பதே.

மோசடிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றம் நிறுவுவதைத் தடுப்பதன் மூலம் கூட்டு எதிர்க்கட்சியில் இருக்கின்ற தப்பானவர்களைச் சிறையில் அடைக்கும் நடவடிக்கையைத் தடுப்பதற்கான இறுதி முயற்சியே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை.

நாடாளுமன்றத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் மகிந்த ராஜபக்ச இருந்ததில்லை. அதேபோன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடக்கும் தினத்திலும் அவர் நிச்சயமாக நாடாளுமன்றத்துக்கு வரப் போவதில்லை-என்றார். (ற-ரி4)

இடமாற்றம் வழங்குமாறு தாதியர்கள் போராட்டம்

புத்தளம்,மார்ச் 23

இடமாற்றம் வழங்குமாறு கோரி உணவுதவிர்ப்புப் போராட்டம் ஒன்றை புத்தளம் ஆதார மருத்துவமனையில் தாதியர்கள் நேற்று முன்னெடுத்த னர்.

இந்தப் போராட்டத்தில் மருத்துவமனையில் கடமையாற்றும் 23 தாதிமார்கள் கலந்துகொண்டனர்.

பல வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமையும் இடமாற்றத்தைக் கோரி தாதியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

பள்ளிவாசல் உண்டியலை உடைத்தவர் மடக்கிப்பிடிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 23

நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்மா பள்ளிவாசலின் உண்டியலை உடைத்து பணத்தை திருட முற்பட்ட நபர் பள்ளிவாசல் நிர்வாகிகளால் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபர் பல்வேறு திருட்டுக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் அண்மையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்தவர் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-ரி4,48)

இரத்தினக்கற்களை கடத்த முயற்சித்தவருக்கு தண்டம்

கொழும்பு,மார்ச் 23

இரத்தினக்கற்களை மலேசியாவுக்குக் கொண்டு செல்ல முயற்சித்த ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திலிருந்து மலேசியாவுக்கு செல்லவிருந்த நபரின் உடைமைகளைப் பரிசோதித்த போதே அவர் 18 இரத்தினக்கற்களை மலேசியாவுக்குச் சட்டவிரோதமாகக் கொண்டு செல்ல முயற்சித்தமை கண்டறியப்பட்டது.

இரத்தினக்கற்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவற்றை அரசுட மையாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்தினக்கற்களின் பெறுமதி 20 இலட்சத்து 20 ஆயிரத்து 190 ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது. (ற-ரி4)

கலாசார மண்டபம் அமைக்க கோரிக்கை

மூதூர்,மார்ச் 23

திருகோணமலை கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மூவின மக்களுக்கும் உரிய வகையில் கலாசார மண்டபம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும் என்று அந்த பிரதேச இளைஞர்களும், பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இருபத்தி மூன்று கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய கந்தளாய் பிரதேசத்தில் ஒரு கலாசார மண்டபம் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

தற்போது ஏதாவது வைபவங்கள் நடத்துவதாக இருந்தால் கந்தளாய் பிரதேச செயலாளர் மண்டபத்துக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது என்று அந்தப் பிரதேச இளைஞர்கள் தெரிவித்தனர்.

(ற-ரி4,40)

சு.க. அமைப்பாளராக கொடித்துவக்கு நேற்று நியமனம்

கொழும்பு,மார்ச்.23

கெஸ்பேவ தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக சிறி ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி ரஜிக கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணியான ரஜிக கொடித்துவக்கு 1999 ஆம் ஆண்டு செயற்பாட்டு அரசியலில் பிரவேசித்ததுடன் தற்போது அரச தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இதற்கு முன்னர் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராகவும் செயற்பட்டு வந்தார். (ற-ரி2)

நுவரெலியா மாநகர சபைக்கு ஜக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 13 உறுப்பினர்கள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க முன்னிலையில் சத்தியபிரமானம் செய்து கொண்டனர்.

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு கோறளைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் வலுவான பெண் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கிறாள் எனும் தொனிப் பொருளிலான கண்காட்சி மற்றும் சுயதொழில் உதவி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மீளாய்வு மன்னாரில்

மன்னார், மார்ச் 23

வடக்கு மாகாண எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மீளாய்வுக் கூட்டம் நேற்று மன்னாரில் நடைபேற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஜீ.குணசீலன் தலைமையில் நடைபெற்றது.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கி நடைபெற்ற இந்த மீளாய்வுக் கூட்டத்தில் மாகாணப் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் தேசிய எய்ட்ஸ் மற்றும் எச்.ஐ.வி. கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள், வடக்கு மாகாணத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மருத்துவ மனை அத்தியட்சகர்கள், மருத்துவர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு மாகணத்தில் எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டுகள் தொடர்பில் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

எச்.ஐ.வி. பரிசோதனை முகாம்களை மாவட்ட ரீதியில் ஏற்பாடு செய்தல், கண்டு பிடிக்கப்படாத நோய் தொடர்பில் தொடர்ச்சியாக சிகிச்சை வழங்குதல் மற்றும் எச்.ஐ.வி.தொடர்பான விழிர்ப்புணர்வு களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அதில் ஆராயப்பட்டது. (ற-56)

ரணிலின் நிலைமையே மைத்திரிக்கும் வரும்

எதிர்வு கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு,மார்ச்.23

தலைமை அமைச்சருக்கு எதிராக தற்போது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர் காலத்தில் அரச தலைவருக்கு எதிரானதாக மாறலாம். தற்போதைய அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அவ்வாறு தான் உள்ளன. இவ்வாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பெற்றோலிய அமைச்சின் தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தத்தமது விருப்பத்தின்படியே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என தற்போது ஆரம்பித்துள்ள விடயம் எதிர்காலத்தில் சபாநாயகர் பின்னர் அரச தலைவர் என செல்ல வாய்ப்புக்கள் உண்டு.

இது பற்றி நம்மால் தனிப்பட்ட ரீதியில் முடிவை எடுக்க முடியாது. அது அரசில் அங்கம் வகிப்பவர்கள் மற்றும் அமைச்சரவையுடன் தொடர்புடைய விடயமாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்ட சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக எமக்குத் தெரியாது. பிரேரணையில் கையெழுத்திட்டவர்கள் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியது சுதந்திரக் கட்சி தலைவர் என்ற வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே ஆகும்.

ஊழல்வாதிகளை கைதுசெய்து தண்டனை வழங்கும் விடயத்தில் அரசு ஏற்படுத்திய காலதாமதமே உள்ளூராட்சித் தேர்தலில் அரசை மக்கள் புறக்கணித்தமைக்குக் காரணமாகும். மக்களின் தேவையை நாம் தற்போது நன்றாக உணர்ந்துள்ளோம். அரசுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் காலம் இருக்கின்றது. இவ்விரு வருடங்களில் நாம் விட்ட பிழைகளைத் திருத்தி மக்கள் எதிர்பார்ப்பவற்றை நிறைவேற்றுவோம்.

கடந்த தேர்தலில் பெற்ற வெற்றியை மாத்திரம் வைத்துக்கொண்டு மகிந்த தரப்பினர் அடுத்த தேர்தலிலும் பெரும் பான்மை பெறுவர் என தீர்மானித்து விட முடியாது என அவர் தெரிவித்தார்.

(ற.ரி2)

25 வர்த்தகர்களுக்கு சட்ட நடவடிக்கை

கொழும்பு,மார்ச்.23

பயன்பாட்டுக்கு உதவாத பொருள்கள் விற்பனை செய்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வெல்லவாய நகருக்குட்பட்ட பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு பரிசோதனை நடவடிக்கையின் போதுசுமார் 25 வர்த்தகர்கள் இனங்காணப்பட்டனர். வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

களஞ்சியப்படுத்தல், உற்பத்தி மற்றும் காலாவதிதிகதி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது எனத் தெரிவித்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுமார் 100 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி2)

மணல் ஏற்றியவர் கைது

துன்னாலை,மார்ச்.23

சட்ட விரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

துன்னாலையைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே வல்லிபுரப் பகுதியில் வைத்து சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்என்று தெரிவிக்கப்பட்டது.

மணல் ஏற்ற பயன்படுத்திய கன்ரர் மற்றும் சந்தேக நபரும் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(ரி-2,26)

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அமைச்சரவையில் தெரிவிப்பேன்

அமைச்சர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

தற்போதைய கட்டாய சூழ்நிலைகளின்போது தேசிய அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைகொடுத்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்று கூறப்படுவது தொடர்பில் அரசிடம் முறையிடுவதற்கு அந்தக்கட்சிக்கு அதிக வாய்ப்பு இருக்கின்றது. கூட்டமைப்பு வெளியிலிருந்து அழுத்தங்களைப் பிரயோகித்தால் நாங்கள் அரசுக்குள் இருந்துகொண்டு அவற்றை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுப்போம்."

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான அமைச்சர் மனோ கணேசன் நேற்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான க. கோடீஸ்வரனிடம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், "திருக்கோவில் ஆதார வைத்தியசாலையாக இருக்கின்றபோதிலும் அங்கு மூன்று வைத்தியர்கள் மாத்திரமே பணியாற்றுகின்றனர். தமிழர்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கப்படாமல் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்" என்று சுட்டிக்காட்டினார்.

அப்போது அமைச்சர் மனோ கணேசன் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"கிழக்கில் தமிழர்கள் புறக்கணிப்பு எனக் கூறப்படுவதில் உண்மை இருக்கலாம். கிழக்கில் உங்கள் கட்சியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும்தான் கூட்டாட்சி நடத்தினீர்கள்" என்று குறிப்பிட்டார்.

அப்போது கோடீஸ்வரன் குறுக்கிட்டார்.

"அமைச்சரே, மத்திய அமைச்சின் செயற்பாட்டின்கீழ்தான் மருத்துவனைகளுக்கு நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்படுகின்றது. சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பகுதிகளில் இவ்வாறு நடந்துள்ளது. எனவே, இது பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் நீங்கள் எடுத்துச்சொல்ல வேண்டும். அனைவருக்கும் இந்த நாட்டில் சம உரிமை வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால்தான் பிரச்சினைகள் உருவாகின்றன" என்று அவர் கூறினார்.

இதற்கு அமைச்சர் மனோ பதிலளித்தார்.

நீங்கள் கூறியவை தொடர்பில் அமைச்சரவையில் பேசுவோம். எங்கள் அரசுக்கு அவசர நேரங்களில் எல்லாம் உங்கள் கட்சி ஒத்துழைப்பு வழங்கியது. எனவே, பிரச்சினைகளை அரசிடம் எடுத்துரைப்பதற்கு அதிக வாய்ப்பு உங்கள் கட்சிக்கு இருக்கின்றது. உள்ளே இருந்து நாம் பேசுவோம். வெளியில் இருந்து நீங்கள் அழுத்தம் கொடுங்கள்" - என்றார்.

(ற)

தபால் பொதியில் கொக்கெய்ன்; சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு.மார்ச்.23

நெதர்லாந்திலிருந்து போதைப் பொருளை நாட்டுக்கு கொண்டு வந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

மத்திய தபால் நிலையத்தில் வைத்து சந்தேகநபர்கள்நேற்றுக்கைதுசெய்யப்பட்டதாகப்பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

கடந்த ஜனவரி மாதம் மத்திய தபால் நிலையத்துக்கு பொதி ஒன்று வந்திருந்தது என்றும், அப் பொதியானது நீண்ட நாள்கள் களஞ்சியத்தில் காணப்பட்டது.

அதனை இருவர் கப்பம் கொடுத்துப் பெற்றுக் கொள்ள முயற்சித்த வேளையில் அவை சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது, பொதியிலிருந்து 30 இலட்சம் பெறுமதியான 22 கிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வத்தளையைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ற.ரி2)

கஞ்சா விற்ற குற்றச்சாட்டில் இருவருக்கு விளக்கமறியல்

ஹற்றன்.மார்ச்.23

கஞ்சா போதைப்பொருளை விற்பனைக்காக எடுத்துச் சென்ற இருவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 28,38 வயதுடையவர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேநபர்களை கற்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்திய போதே நீதிவான் அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

விற்பனைக்காக முச்சக்கர வண்டியொன்றில் கஞ்சா எடுத்துச் சென்றபோதே இருவரும் நேற்று முன்தினம் நுரைச்சோலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற.ரி2)

சுற்றுச் சூழலை அழிக்கும் அதிகாரிகள்மீது நடவடிக்கை

அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

சுற்றாடல் அழிவு நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்கும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சம்பந்தப்பட்டதரப்பினர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முத்துராஜவல சரணாலய பிரதேசத்தில் நேற்றுக் காலை பிரதேச மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் அரச தலைவர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இக்கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

முத்துராஜவல சரணாலய பிரதேசத்தில் இடம்பெறும் கட்டுமானப்பணிகள் மண் நிரப்பும் பணிகள் உள்ளிட்ட சுற்றாடல் அழிவுக்குக் காரணமாக அமையக்கூடிய அனைத்துநடவடிக்கைகளையும் உடனடியாக தடைசெய்யுமாறு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன இதன்போது, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவித்தார்.

சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக இங்குள்ள அனைத்து காணிகளையும் வன ஜீவராசிகள் சுற்றாடல் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானி மூலம் அறிவிப்புச் செய்வதற்கான வாய்ப்புகள்குறித்து சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

காணி உறுதிகளைக் கொண்ட காணிகளாயினும் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தால் அந்தக் காணிகளில் மண் நிரப்புவதற்கோ அல்லது கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்கோ இடமளிக்க முடியாது. இந்தச் செயற்பாடுகளின் பின்னால் அரசியல் அழுத்தங்கள் இருக்குமானால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

முத்துராஜவல சரணாலய பகுதியில் மேற்கொள்ளப்படும் சுற்றாடல் அழிவுகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் சிறப்பு படையணியின் பாதுகாப்பை வழங்குமாறும் உட்பிரவேசிக்கின்ற வழிகளுக்கு வீதித் தடைகளை ஏற்படுத்துமாறும் அவர் பொலிஸ் மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இங்கு மேற்கொள்ளப்படும் மண்நிரப்பும் பணிகளுக்காக மண்ணை வழங்கும் இடங்களுக்கு புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்குமாயின் அவற்றையும் உடனடியாக இரத்துச் செய்யுமாறு தெரிவித்த அரச தலைவர்முத்துராஜவல பகுதி காணிகளை நிரப்புவதற்கு எந்தவொரு அரச நிறுவனத்தாலும் அனுமதி வழங்கப்பட்டிருக்குமாயின் அவை அனைத்தையும் இரத்துச் செய்ய வேண்டும். என்றும் தெரிவித்தார்.

(ற.ரி2)

இல்ல மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி, மார்ச் 22
அனலை தீவு அருணோதய முன்பள்ளி சிறார்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி முன்பள்ளி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (9)

மழலைகள் மகிழ்களம் நிகழ்வு

சாவகச்சேரி மார்ச் 23
மட்டுவில் மாதுமை மழலைகள் பூங்கா சிறார்களின் மழலைகள் மகிழ்களம் நிகழ்வு பூங்கா மைதானத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறும்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்பு கற்கைகள் பீடத் தலைவரும் மழலைகள் பூங்காவின் தலைவருமான கலாநிதி ச.க.கண்ணதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெயினோல்ட் கூரே கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் ஜெயா தம்பையா, தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு.எம்.எஸ்.பி.விக்கிரசிங்க, இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை உதவி முகாமையாளர் அ.தினீபன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் பிரிவு கிராம அலுவலர் உ.சுமன் ஆகியோரும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

நூல்கள் அன்பளிப்பு

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொண்டு அமைப்பொன்று சாவகச்சேரி பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை எதிர்வரும் 28ஆம் திகதி அன்பளிப்பாக வழங்கவுள்ளதென அறிவித்துள்ளது என நகரசபையினர் தெரிவித்தனர்.
கடந்த வருடம் கிழக்கு மாகாணத்திலிருந்து வருகைதந்த குழுவினர் நகரசபையின் 3 பொது நூலகங்களையும் பார்வையிட்டுச் சென்றனர் எனவும் தற்போது குறித்த நூலகங்களுக்கு வரும் வாசகர்களுக்கென ஒரு தொகுதி நூல்களை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

கந்தபுராணபடன உற்சவ இறுதி நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.மார்ச்.23
அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவிலில் தைப்பூச திருநாளில் கந்தபுராணபடன உற்சவம் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.
அதன் இறுதி நாள் சிறப்பு நிகழ்வுகளாக எதிர்வரும் திங்கட்கிழமை 26ஆம் திகதி வள்ளியம்மன் திருமணபடலமும் மறுநாள் செவ்வாய்கிழமை காலை வளந்துப்பூசையும் மதியம் அன்னதானமும் மறுநாள் 28ஆம் திகதி புதன்கிழமை வைரவர் சாந்தியும் அன்னதானமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

தீவுப் பகுதிகளுக்குச் செல்ல மருத்துவர்கள் பின்னடிப்பு

அவதியுறுகின்றனர் அங்குள்ள மக்கள் என வடக்கு சுகாதார அமைச்சர் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் சேவையில் உள்ள மருத்துவர்கள் பலரும் தீவகப்பகுதிகளுக்குச் சேவையாற்றச் செல்லப் பின்னடிப்பது காலாகாலமாக நடைபெறுகிறது. மருத்துவர்களுடைய இந்த நிலையால் அங்குள்ள மக்கள் தங்களுடைய நோயைப் போக்குவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார நிலைமைகள் மற்றும் அவற்றில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலனுக்கும், மாகாண மருத்துவர்கள் ஒன்றியத்தினருக்கும் இடையில் அண்மையில் இடம் பெற்றது.
இதில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அந்த கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மருத்துவமனைகளில் சேவையில் உள்ள மருத்துவர்கள் பலரும் தீவகப் பகுதிகளுக்குச் சேவையாற்றச் செல்லப் பின்னடிப்பது காலாகாலமாக நடைபெறுகிறது. இவற்றையும் தாண்டி சேவைக்குச் செல்லும் மருத்துவர்கள் சிலமாதங்களில் இடமாற்றம் கோருவதையும். சேவையில் இருந்து விலகுவதையும் காணக்கூடியதாக உள்ளது.
தீவகப்பகுதியில் உள்ள மக்கள் இவ்வாறான காரணங்களால் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். தங்களுடைய நோய்க்கு நகருக்கு வந்தே நிவாரணத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். இவற்றை உணர்ந்து மருத்துவர்கள் சேவையாற்றவேண்டியது அவசியமாகும்.
இவ்வாறான நடவடிக்கைகளுக்கு மாற்றுவழிகள் ஏற்படுத்தப்பட உரிய தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.
அந்தக் கலந்துரையாடலில் மருத்துவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு விரைவில் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்வது தொடர்பாக கொழும்பு அரசுடன் கலந்துரையாடி ஒரு தீர்வினைப் பெற்றுத் தருமாறு மருத்துவர்கள் சங்கத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.
வடக்கு கிழக்கு இடமாற்றக் கொள்கை மாற்றப்பட்டு மற்றைய இடமாற்றக் கொள்கைகள் போலவே வடக்கு கிழக்கு மருத்துவர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்றும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.
இது தொடர்பாக கொழும்பு அரசுடன் பேசியே முடிவெடுக்க வேண்டும் என்று அமைச்சர் பதிலளித்தார். (21-114)

அரியாலை இளைஞன் கொலை:

புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு யாழ்.மேல்நீதிமன்று நேற்றுப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணம் அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவரை சுட்டுப் படுகொலை செய்த குற்றச்சாட்டில், விளக்கமறியலில் இருந்த சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாண மேல்நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றுப் பிணை வழங்கினார்.
கடந்த ஒக்ரோபர் 22ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அரியாலையைச் சேர்ந்த டொன் பொஸ்கோ டினேசன் (வயது 24) உயிரிழந்தார்.
விசாரணையின் பின்னர் குற்றப்புலனாய்வு பிரிவினர் கடந்த நவம்பர் 3ஆம் திகதி யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படை புலனாய்வாளர்க ளான மல்லவ ஆராய்ச்சிகே பிரதீப் நிசாந்த மற்றும் ரத்நாயக்க முதியான்சலாகே இந்திக புஸ்பகுமார ஆகிய இருவரையும் கைது செய்தீருந்தனர்.
யாழ்ப்பாணம் நீதிவான் மன்றினால் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.
கண்கண்ட சாட்சி சந்தேக நபர்களை அடையாளங் காட்டவில்லை. சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கியிலிருந்துதான் சம்பவ இடத்தில் மீட்கப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் சென்றன என்பதனை அறுதியாகக் கூற முடியவில்லை என்று இரசாயன பகுப்பாய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மன்றுக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது.
இவற்றினடிப்படையில் சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்யப்பட்டது.
"வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்பட் டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவதானிப்புக்களை அறிய தந்துள்ளார்கள். அதன்படியும் சந்தேக நபர்கள் பிணையில் செல்வதற்கு ஆட்சேபனை இல்லை" என்று அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந் தெரிவித்தார்.
அதனை அடுத்து இருவரும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தலாஇரண்டு ஆள்பிணை களிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.
சந்தேகநபர்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு குற்றபுலனாய்வு திணைக்களத்தில் கையொப்பம் இட வேண்டும். கடவு சீட்டு இருந்தால் அதனை நீதிவான் மன்றில் ஒப்படைக்க வேண்டும். வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்படுகின்றது என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டது. (4-37)

கந்தபுராண விளக்கவுரை

யாழ்ப்பாணம், மார்ச்.23
யாழ் சின்மயாமிஷன், சுவாமி சிதாகாசானந்தாவில், "கந்தபுராணம்" வாராந்த விளக்கவுரை, "ஞானவேல்" ஆச்சிரமத்தில் (இல. 700, பருத்தித்துறை துறை வீதி, நல்லூர்) மாலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெற்று வருகின்றது.
இதில் நாளை வெள்ளிக்கிழமை "திருமுருகன் திருவிளையாடல்" எனும் தலைப்பில் விரிவுரை வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கணக்காளர் நியமனம்

அச்சுவேலி,மார்ச் 23
வலி. கிழக்கு பிரதேச செயலகக் கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த ஆனந்த கிருஷ்ணன் தர்மாம்பிகை நியமிக்கப்பட்டுள்ளார்.
வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றிவந்த கவிதாம்பிகை பிரதீபன் தென்மராட்சி பிரதேச செயலக கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார். (11)

துறைமுக வீதி காப்பெற் வீதியாக மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச்.23
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் கொழும்புத்துறை துறைமுக வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.
துறைமுக சந்தியில் இருந்து மணியம் தோட்ட சந்தி வரைக்குமான முதன்மை வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.
அதனைவிட இந்தப்பகுதியின் வீதியோரத்தில் பொது மக்களின் நலன் கருதி கடற்கரையோரமான பாதுகாப்பு அணைக்கட்டுக்கல் அமைக்கப்பட்டு இந்த அணைக்கட்டு ஊடாக நடைபாதையும் அமைக்கப்பட்டுள்ளன.
இதேசமயம் இந்த காப்பெற் வீதிக்கு வீதிகுறியீடுகள் வரையும் பணிகளும் நிறைவு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (17)

மாதாந்த உரை நிகழ்ச்சி

யாழ்ப்பாணப் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்ச்சி, நூலக குவிமாடக் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில் 'நவீன ஓவியங்கள் - ஒரு பார்வை' என்னும் தலைப்பில், ஓவியரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான (அழகியல்) கோ.கைலாசநாதன் உரையாற்றுவார். ஆர்வமுள்ளயாரும் இந்த நிகழ்ச்சி யில் பங்குபற்றலாம் என்று வாசகர் வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (எ)

பேருந்திலிருந்து இறங்கியவரிடம் கொள்ளையடித்தவர்கள் சிக்கினர்

மாங்குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
கொழும்பில் இருந்து வந்த பேரூந்திலிருந்து மாங்குளம் சந்தியில் இறங்கி நடந்தவரிடம் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் 4 பேர் கைது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது. பேருந்திலிருந்து இறங்கிக் கால்நடையாகப் பயணித்தவரிடமே கொள்ளையடிக்கப்பட்டது. அவர்கள் சங்கிலியுடன் தப்பியோடினர்.
அந்த நேரம் குறித்த வீதி வழியாகச் சென்ற போக்குவரத்துப் பொலிஸார் சம்பவத்தை அவதானித்து அவர்களை விரட்டிச் சென்றனர். ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரது தகவலின் அடிப்படையில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார். கொள்யைடிக்கப்பட்ட தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டது.
மாங்குளம் பொலிஸார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். (4-105)

கட்டுக்கோப்பில்லாது வளரும் பிள்ளைகள் மறியல் சாலையில் நல்வழிப்படுத்தப்படுவர்

மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23
'பெற்றவர்கள் பிள்ளையை கட்டுக்கோப்புடன் வளர்க்கத் தவறின் நீதிமன்றம் அவர்களை மறியல் சாலைக்கு அனுப்பி நல்வழிப்படுத்தும்' என யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பெற்றோருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஆவா குழுவைச் சேர்ந்தவர் என குற்றம் சாட்டப்பட்ட இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் கடை ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசினார் என சி.சி.ரி.வி. ஆதாரத்தை வைத்து யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்தனர்.
குறித்த இளைஞர் கடந்த 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் யாழ்ப்பாண நீதிவான் மன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்த நிலையில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் குறித்த இளைஞரை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் பிணை விண்ணப்பம் செய்தார்.
அதனையடுத்து அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் இளைஞர் பிணையில் செல்ல ஆட்சேபனை இல்லை என மன்றில் தெரிவித்ததையடுத்து, சந்தேகபர் 50 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும், 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதித்தார்.
சந்தேக நபர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் கையொப்பம் இட வேண்டும். கடவுச்சீட்டு இருந்தால் அதனை யாழ்ப்பாண நீதிவான் மன்றில் ஒப்படைக்க வேண்டும். வெளி நாட்டுப் பயணத் தடை விதிக்கப்படுகின்றது என தெரிவித்தார். அத்துடன் குறித்த கட்டளையை குழிவரவு குடிய கழ்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பதிவாளருக்கு பணிப் புரை விடுத்தார். (எ-37)

வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.மார்ச்.23
வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு கோப்பாய் அரசசேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 9ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கோப்பாய் மகாநாட்டு மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வை. குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோப்பாய், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் முதன்மை விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தள்ளனர்

மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்.மார்ச்.23
யாழ்ப்பாணம் சர்வமதப் பேரவை நடத்தும் மகளிர் தின நிகழ்வு நல்லை ஆதீனத்தில் நாளை 24ஆம் திகதி பி.ப 3மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற் துறைத்தலைவர் ஜெயலட்சுமி இராசநாயகம் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

நூல் வெளியீட்டு நிகழ்வு

எழுத்தாளரும் ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளருமாகிய மு.சிவநேசன் எழுதிய 'கம்பன் கடலமுதம்" எனும் நூல் வெளியீட்டு நிகழ் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வசந்த மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறைத்தலைவர் சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா, வடக்கு மாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் தனபாலசிங்கம் ஜெயசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

(173)

****

மருத்துவர் ஆர். வி சசிகரனின் 'குழந்தையும் நீங்களும் புதிய தோர் மாற்றம்" என்னும் நூல் வெயியீட்டு நிகழ்வு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
பருத்தித்துறை நகரசபை தமிழ்தேசிய முன்ணணி உறுப்பினரும் நெல்லியடி வட்ட லயன்கழக உறுப்பினருமான சுப்பிரமணிய கோகுலகுமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் மருத்துவரும் எழுத்தாளரும் கே.முருகானந்தன் எழுத்தாளர் எஸ் இராஜேஸ்கண்ணன் ஆகியோர் நூல் ஆய்வு உரையை நிகழ்த்துவார். (173)

வவுனியாவில்

அனுமதி பெறாது கட்டப்பட்ட இரு கட்டடங்களின் பணிகள் நிறுத்தம்

பொருள்கள் பறிமுதல்

வவுனியா மார்ச் 23
வவுனியா நகரப்பகுதியில் நகரசபையின் அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டடங்களின் பணிகள் நகர சபைச் செயலாளரின் நடவடிக்கையால் நேற்று இடை நிறுத்தப்பட்டன. வவுனியா கொரவப்பொத்தானை வீதி மற்றும் வவுனியா இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள இரு வர்த்தக நிலையங்களின் கட்டுமானப் பணிகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டு கட்டுமான பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக நகரசபை செயலாளரிடம் கேட்டபோது, 'அனுமதி இல்லாமல் இரு கட்டடங்கள் கட்டப்பட்டன.
இது தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தற்கு அமைய தொழில் நுட்ப உத்தியோகத்தரை அனுப்பி உரிய கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு அறிவித்தல் வழங்கியிருந்தோம். அறிவித்தல் வழங்கிய பின்னரும் அவர்கள் தமது பணிகளை நிறுத்தாமல் தொடர்ந்த வண்ணம் இருந்தனர்.
அதன் பின்னரும் நகரசபையால் குறித்த கட்டடங்களில் பணிகளை நிறுத்தும் படியும் அல்லாதுவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நோட்டீஸ் ஒட்டியிருந்தோம். நாம் ஒட்டிய நோட்டீசை உரித்துவிட்டு கட்டுமானப் பணிகளை குறித்த இரு வர்த்தக நிலையங்களும் மேற்கொண்டு வந்தன. எனவே அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கானசெயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் தற்காலிகமாக கட்டுமான பணிகளை நிறுத்துவதற்காக கட்டுமான பொருள்கள் மாத்திரம் எம்மால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
எம்மால் எடுக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அதற்கு பொறுப்பானவர்களுக்கு தெரியப்படுத்தி அடையாளப்படுத்தியே எடுக்கப்பட்டுள்ளன. குறித்த வர்த்தக நிலையங்களை சரியான அனுமதி எடுக்கும் வரையிலும் பூட்டிவிடுமாறு பணித்துள்ளோம்.
தொடர்ந்து இயங்கினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் மேற்குறித்த கட்டடங்களுக்கு சரியான அனுமதியை எடுத்து எமக்கு கட்ட வேண்டிய தண்டப் பணத்தை கட்டிய பிறகு எடுத்த பொருள்கள் அனைத்தையும் மீண்டும் வழங்குவோம் என்று கூறியுள்ளோம். இவ்வாறாக உரிய அனுமதி இல்லாமல் கட்டப்படும் கட்டடங்கள் மேல் நடவடிக்கைகள் தொடரும் என்று கூறினார்.
(எ-110)

சமூகத்தின் அத்திபாரம் பெண்களே

ஓய்வுபெற்ற மருத்துவத்துறை உதவி அலுவலர் சாவித்திரிதேவி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச்,22
இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளையினரின் ஏற்பாட்டில் மகளிர்தின நிகழ்வு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.
நிகழ்வின் முதன்மை விருந்தி னராக இலங்கை வங்கியின் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் ஜெ. பிரபாகரன் கலந்து கொண்டார்.
உதவி பொது முகாமையாளர் ஜெ.பிரபாகரன் உரையாற்றுகையில் "பெண்களின் தலைமைத்துவம் இல்லாத துறையோ தொகுதியோ இன்று இல்லை. முதன் முறையாக எமது நாடு தான் பெண் மந்திரியை தெரிவு செய்த நாடாகும்.
பெண்களாகிய நீங்கள் உங்களது திறமையை வெளிக்கொணர வேண்டும். பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வங்கித்துறை அனுசரணை வழங்கி வருகிறது. கடனை வழங்கினால் கூட ஆண்களை விட பெண்களே இந்த கடனை சீக்கிரமாக கட்டிமுடிக்கிறார்கள்" என்றார்.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் விமலாதேவி விமலநாதன், 'பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள் அவர்களுக்கு சார்பாக இடம் பெற்ற போராட்டங்களை அடிப்படை

யாக கொண்டு மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. எமது உரிமைகள் பொறுப்புகள் ஆண் - பெண் பேதமில்லாமல் மனிதன் என்ற ரீதியில் பாகுபடுத்தப்பட்டால் சமூகத்தில் எம்மால் முன்வரமுடியும்' என்று தெரிவித்தார்.
ஓய்வுபெற்ற மூத்த மருத்துவத்துறை உதவி அலுவலர் சாவித்திரி தேவி ரவிச்சந்திரன் உரையாற்றுகையில், "பெண்கள் சமூகத்தின் அத்திபாரம் ஆவார்கள், அந்த அத்திபாரம் செம்மையாக இல்லாவிடில் சமூகமானது தளர்ந்து விடும். பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினை எனும் போது வேலைத்தளங்களில் மேலதிகாரிகளின் கெடுபிடி மற்றும் வேலை முடிந்து நேரம் தவறிச் செல்லல் போன்ற பிரச்சினை காணப்படுகின்றது. பெண் என்பவள் மனைவியாக தாயாக சகோதாரியாக தனது பணியை செய்து முடிக்க வேண்டும்
தற்காலத்தில் ஏற்படும் பணப்பிரச்சினை காரணமாக பெண்ணும் வேலைக்கு செல்கின்றாள் வெளியே செல்லும் போதும் அவள் பெரிய சவால்களை எதிர் கொள்கின்றாள்.
இதனால் மன அழுத்தத்துக்கு பெண்கள் உள்ளாகின்றனர்.
வேலைக்குச் செல்லும் பெண்கள் அரசியலில் சாதித்தால் கூட தேவையற்ற கதைகளைக் கட்டி விடுகிறார்கள். இவ்வாறான சவால்களை பெண்கள் சந்தித்து வெற்றி பெற வேண்டும்.
தற்கொலை அறியாமையால் இடம்பெறுகிறது. உணர்ச்சிக்கு இடமளிக்க கூடாது அறிவை தீட்டினால் சமுதாயம் வளர்ச்சியடையும்" என்றார்
நிகழ்வில் பட்டிமன்றம், பாடல் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் ஓய்வு பெற்ற கல்வி பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், இலங்கை வங்கியின் வடக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஜி.சகாதேவன் வங்கி வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்த கொண்டனர். (எ-111)

புலிகள்...

சத்தம் போடாதே என்று மிரட்டி அப்பாவைச் சுட்டார்கள்

"இந்த வழக்கின் முக்கிய சாட்சியமான கண் கண்ட சாட்சியமாக உயிரிழந்த குருக்களின் மகனும் , துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படு காயமடைந்தவருமான முதலாம் சாட்சி, தனது சாட்சியத்தில்,

சம்பவ தினத்தன்று, வெளியில் இருந்து நான் வீட்டுக்குச் செல்லும்போது வீட்டுக்கு அருகில் நின்ற 2ஆம் மற்றும் 3ஆம் எதிரிகள் என்னை வழிமறித்து சத்தம் போட வேண்டாம் என்று மிரட்டினார்கள். நான் அதையும் மீறி சத்தம் எழுப்பியபோது, எனது சத்தத்தை கேட்டு ஓடி வந்த அப்பா மீது மூன்றாம் எதிரி துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

அப்பா மீது துப்பாக்கிச் சன்னங்கள் பட்டு அவர் கீழே விழுந்தபோது நான் அவரை தூக்க முற்பட்டேன். என் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். எனக்கு காயம் ஏற்பட்டு நான் அங்கிருந்து ஓடினேன்"

"இந்த சத்தம் கேட்டு அண்ணா ஓடி வந்த போது அண்ணா மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவற்றை நான் மறைந்திருந்து பார்த்தேன்"

சுட்டவர்களைக் கண்டுவிட்டேன்

"அவர்கள் வீட்டில் இருந்த எமது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போகும்போது தமது முகத்தில் கட்டி இருந்த கறுத்த துணியை கழட்டி வீசினார்கள். அதன்போது நான் அவர்கள் முகத்தை நன்றாக அடையாளம் கண்டு கொண்டேன்.

மூன்றாம் எதிரி தான் அப்பா மீதும் என் மீதும் அண்ணா மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தினார். தப்பிச் செல்லும் போது மூன்றாம் எதிரி மோட்டார் சைக்கிளில் பின் புறமாக திரும்பி உட்கார்ந்து துப்பாக்கியை நீட்டிக்கொண்டே சென்றார்" என்று மன்றில் சாட்சியம் அளித்திருந்தார்.

பொலிஸாருக்கு அறிவித்தோம்

வீட்டில் இருந்த மற்றையவர் சாட்சியம் அளிக்கும் போது , "வீட்டுக்கு வெளியில் சத்தம் கேட்டு ஓடி வந்த போது அப்பா மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. அண்ணா மீது துளசி மாடத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூடு நட்தப்பட்டது. நாங்கள் வீட்டுக்குள் ஓடிச் சென்று அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டோம். கதவை உடைக்க முயற்சித்தார்கள். நாங்கள் உள்ளே இருந்து தொலை பேசி ஊடாக மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தோம்.

மூவரும் வீட்டில் இருந்து செல்லும் போது நான் யன்னல் வழியாக பார்த்தேன். மூன்றாம் எதிரி துப்பாக்கியுடன் மோட்டர் சைக்கிளின் பின் புறமாக திரும்பி உட்கார்ந்து சென்றதை கண்டேன்" என்றார்.

இராணுவ கோப்ரலும் மற்றையோரும் நண்பர்கள்

வழக்கின் மற்றுமொரு முக்கிய சாட்சி, அளவெட்டி இராணுவ முகாமில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய். அவர் தனது சாட்சியத்தில், "முதலாம் இரண்டாம் எதிரிகள் சம்பவ தினத்தன்று தமது முகாமுக்கு முன் பாக மாலை 6 மணியளவில் மூன்றாம் எதிரியான இராணுவ கோப்ரலுடன் உரையாடியதை கண்டேன். பின்னர் அருகில் இருந்த தேநீர்க் கடைக்குள் மூவரும் சென்றனர். பின்னர் மூவரும் திரும்பி வந்ததை அவதானித்தேன்" என்று சாட்சியம் அளித்தார்.

அத்துடன் "இரவு 7 மணி -7.15 மணியளவில் மூன்றாம் எதிரியான இராணுவ கோப்ரல் தனது துப்பாக்கியுடன் முகாமின் பின் பக்கமாக வேலி ஊடாகச் சென்றார். அவர் தன்னை விட அதிகாரம் கூடியவர் என்பதால் தான் அவரைப் பின் தொடரவில்லை. அவ்வாறு வேலி ஊடாகச் சென்றவர் 8.45 அளவில் ஒருவித பதற்றத்துடன் வந்தார். அவர் தனக்கு களைப்பாக உள்ளதாகத் தெரிவித்துத் தான் ஓய்வெடுக்க போகிறேன் என்றுகூறி முகாமுக்குள் சென்று விட்டார்"

துப்பாக்கிகளை மேஜர் பரிசோதித்தார்

"சில நிமிடங்களில் சுன்னாகம் இராணுவ முகாமில் இருந்து மேஜர் ராமநாயக்க எமது முகாமுக்கு வந்து துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது. அது தொடர்பில் விசாரிக்க வேண்டும் என்று கூறி எமது முகாமில் உள்ள இராணுவத்தினரின் துப்பாக்கிகளைப் பரிசோதித்தார்"

கோப்ரல் கைது

"மூன்றாம் எதிரியின் துப்பாக்கியில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட மணம் வந்தது. அவருக்குக் கொடுக்கப்பட்ட துப்பாக்கிச் சன்னங்கள் மற்றும் கூடுகள் (மகசீன்) என்பவற்றைச் சோதனை செய்தபோது 4 துப்பாக்கிச் சன்னங்கள் குறைவாகக் காணப்பட்டன. அவரை மேஜர் அழைத்துச் சென்றார்" என்று சாட்சியம் அளித்தார்.

பொலிஸாரிடம் ஒப்படைப்பு

இராணுவ மேஜர் ராமநாயக்க சாட்சியம் அளிக்கையில், " தான் மூன்றாம் எதிரியான இராணுவ கோப்ரலைக் கைது செய்து சுன்னாகம் இராணுவ முகாமுக்கு அழைத்து சென்று விசாரணை செய்தேன். பின்னர் அவரையும் அவரது துப்பாக்கி மற்றும் துப்பாக்கி சன்னங்கள் என்பவற்றையும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தேன்" என்று சாட்சியம் அளித்தார்.

எதிரிகள் கைது நகைகள் மீட்பு

மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி சாட்சியம் அளிக்கையில், "இராணுவ மேஜர் ஒப்படைத்த இராணுவ கோப்ரலிடம் விசாரணை நடத்தினோம். 2ஆம் எதிரியின் வீட்டுச் சாமி அறையில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் என்ற சந்தேகத்தில் அவற்றை மீட்டேன். இரண்டாம் எதிரியின் மனைவியின் தாயாரிடம் இருந்து சில நகைகளை மீட்டேன். முதலாம் எதிரியிடம் இருந்தும் குருக்களுடையது என்று சந்தேகப்பட்ட உருத்திராட்ச கொட்டை உள்ளிட்ட சில நகைகளை மீட்டேன்" என்று சாட்சியம் அளித்திருந்தார்.

நகைகள்

பொலிஸ் பொறுப்பதிகாரியால் மீட்கப்பட்டதாக மன்றில் ஒப்படைக்கப்பட்ட நகைகளைச் சாட்சியாளர்கள் தங்களுடையவை என்றும் தமது தந்தையாருடையது என்றும் அடையாளம் காட்டினர்.

மேஜருக்கு பாராட்டு

இந்த வழக்கில் எதிரிகளைக் கைது செய்வதற்குக் காரணமாக இருந்த இராணுவ மேஜர் ராமநாயக்கவை நீதிமன்று பாராட்டுகின்றது.

சம்பவம் நடைபெற்று ஓரிரு மணித்தியாலங்களுக்குள் துப்பாக்கிச் சூடு நடத்தியவரை அடையாளம் கண்டு கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தமைக்குப் பாராட்டுக்கள். அதேவேளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்றாம் எதிரியை விசாரணைக்கு உட்படுத்தி மற்றைய இரண்டு எதிரிகளையும் விரைவாகக் கைது செய்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை மீட்டிருந்த மானிப்பாய் பொலிஸாரையும் மன்று பாராட்டுகிறது.

சூடு நடத்தியது கோப்ரலின் துப்பாக்கியே

சம்பவ இடத்தில் இருந்து தடயவியல் பொலிஸாரால் மீட்கப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தின் வெற்றுக்கோது, இராசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. அதனைப் பரிசோதித்த இரசாயனபகுப்பாய்வு திணைக்கள அதிகாரி மன்றில் சாட்சியம் அளிக்கையில் மூன்றாம் எதிரியின் துப்பாக்கியில் இருந்தே இந்தச் சன்னம் வெளியேறியுள்ளது என்று சாட்சியம் அளித்தார்.

சம்பவ இடத்துக்கு அருகில் இருந்து ஆண்கள் பயன்படுத்தும் துவிச்சக்கர வண்டி மீட்கப்பட்டது. அது எதிரிகள் வந்த துவிச்சக்கர வண்டியாக இருக்கலாம். அவர்கள் தப்பிச் செல்லும் போது குருக்களின் மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துச் சென்றனர். அந்த மோட்டார் சைக்கிள் பெற்றோல் தீர்ந்த நிலையில் இளவாலைப் பகுதியில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குற்றம் நிரூபணம்

சந்தர்ப்ப சூழ் நிலைச் சாட்சியங்கள் மற்றும் கண்கண்ட சாட்சியங்கள் என்பவற்றின் அடிப்படையில் 2ஆம் மற்றும் 3ஆம் எதிரிகள் குற்றச் செயலில் நேரடியாக தொடர்பு பட்டு உள்ளார்கள் என்பது நிரூபணம் ஆகின்றது.

பன்றியைச் சுடவே துப்பாக்கி

முதலாம் எதிரி தொடர்பில் மூன்றாம் எதிரி சாட்சிக் கூண்டில் ஏறிச் சாட்சியம் அளிக்கையில், "அன்றைய தினம் எனது பிறந்த நாள். அதனால் முதலாம் எதிரி மாலை 6.30 மணியளவில் என்னை முகாமில் சந்தித்தார். பின்னர் பன்றி ஒன்றைச் சுட வேண்டும். என்றுகூறி முதலாம் இரண்டாம் எதிரிகள் எனது துப்பாக்கியை வாங்கி சென்றனர். நான் அவர்களிடம் துப்பாக்கியை மாத்திரமே கொடுத்து விட்டேன். நான் அவர்களுடன் செல்லவில்லை. இரவு 8.30 மணியளவில் துப்பாக்கியை மீண்டும் என்னிடம் கொண்டு வந்து தந்தார்கள். அப்போது தாம் பன்றிக்கு சுட்டதாகவும், ஆனால் பன்றிக்கு துப்பாக்கி சூடு படவில்லை அதனால் அது தப்பி விட்டது என்று கூறி துப்பாக்கியைத் தந்தார்கள்" என்று சாட்சியம் அளித்தார்.

நேரடித் தொடர்பு

அவரது சாட்சியத்தின் பிரகாரம் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகள் இந்த வழக்கில் நேரடியாக தொடர்பு பட்டு உள்ளார்கள். துப்பாக்கி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளது என்பது நிரூபணம் ஆகுகின்றது. பன்றிக்குச் சுடத் தான் துப்பாக்கி கொடுத்தேன். என்பதில் நம்பகத்தன்மை இல்லை.

மூவரும் குற்றவாளிகள்

ஆகவே மூவரும் பொது எண்ணத்துடன் இக் குற்றத்தை புரிந்துள்ளார்கள். என்பது நிரூபணம் ஆகுகின்றது. எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகள் சாட்சியங்களை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திய போதிலும் , முறியடிக்கப்படவில்லை.

ஆகவே எதிரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபணம் ஆனதால் , எதிரிகள் மூவரையும் இந்த மன்று குற்றவாளியாக காண்கிறது. என்று நீதிபதி தீர்ப்பில் தெரிவித்தார்.

எதிரிகளிடம் மூவரும் மன்றுக்கு ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா? என்று நீதிபதி வினாவினார்.

புலிகள் அமைப்பில் இருந்ததால் இராணுவத்தினர் சிக்க வைத்தனர்

அதற்கு முதலாம் எதிரியான காசிநாதன் முகுந்தன் அல்லது சக்தி என்பவர் எதிரி கூண்டில் நின்று, "நான் இந்த குற்றத்தைச் செய்யவில்லை. நான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பின்னர் விலகி இருந்தேன். என்னை 2010ஆம் ஆண்டு சுன்னாகம் இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினர் கைது செய்திருந்தனர். என்னிடம் விடுதலைப்புலிகள் தொடர்பிலும் , அவர்களின் ஆயுதங்கள் எங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அடித்துத் துன்புறுத்திப் பல வாறாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

தேர்முட்டிக்குள் புலிகள் இருந்தனரா?

இராணுவத்தினரின் பிடியில் இருந்த போது ஒரு நாள் சங்கானை முருக மூர்த்தி ஆலய தேர்முட்டிக்குள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மறைந்து இருப்பதாகவும் , அவர்களுக்கு யார் உணவளிப்பதாகவும் கோரி விசாரணை நடாத்தினார்கள். நான் எதுவும் தெரியாது என பதில் அளித்தேன்.

பின்னர் ஒரு நாள் தேர்முட்டிக்கு அருகில் வெண்சாதமும் சம்பலும் பார்சலாக கிடந்தது. அது குருக்கள் வீட்டு சாப்பாடு தானே என என்னிடம் விசாரணை செய்தனர். நான் தெரியாது என கூறினேன்.

பின்னர் நான்கு மாதம் அளவில் என்னை சுன்னாகம் இராணுவ முகாமில் தடுத்து வைத்து விசாரணை செய்த பின்னர் விடுதலை செய்தனர்.

இராணுவமே கைது செய்தது. பொலிஸாருக்கு எதுவும் தெரியாது

பிறகொருநாள் நான் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது என்னை மீள இராணுவத்தினர் கைது செய்து பவள் கவச வாகனத்தில் ஏற்றிச் சென்று உடுவில் இராணுவ முகாமில் ஓரிரு நாள்கள் தடுத்து வைத்தனர். பின்னர் என்னை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் சக்தி என பெயர் கூட்டி இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

எனக்கு சக்தி என ஒரு பெயரில்லை. எனது பெயர் காசிநாதன் முகுந்தன். என்னை பொலிஸார் கைது செய்யவில்லை. எனது வீடு எங்கே இருக்கிறது எனக்கு திருமணம் முடிந்ததா என்பது முதல் எதுவும் என்னைப் பற்றிய எந்த தகவலும் பொலிஸாருக்குத் தெரியாது. இராணுவத்தினர் ஒப்படைக்க என் மீது பொய் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

வேறு வழக்கிலும் சிக்க வைத்தனர்

இதே போன்றே அளவெட்டியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றுடன் என்னை தொடர்பு படுத்தி மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அது தள்ளுபடியாகியுள்ளது.

இந்த வழக்கை பொலிஸார் மீளவும் விசாரித்தால் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும். எனக்கும் இந்த வழக்குக்கும் எந்த தொடர்பும் இல்லை.

சிங்களம் தெரியாது

நானும் மூன்றாம் எதிரியான இராணுவ கோப்ரலும் நண்பர்கள் என கூறுகின்றார்கள். ஆனால் எனக்குச் சிங்களம் தெரியாது. அவருக்கு தமிழ் தெரியாது. அப்படி இருக்கையில் நாங்கள் இருவரும் எவ்வாறு நண்பர்களாக இருக்க முடியும் ? எனவே இந்த வழக்கு தொடர்பில் மீள் விசாரணை செய்தால் பல உண்மைகள் வெளி வரும் - என்றார்.

புலிகள் அமைப்பில் சரியாக வளர்ந்தவன்

அதனை அடுத்து இரண்டாம் எதிரியான பால சுப்பிரமணியம் சிவரூபன் தெரிவிக்கையில், "நான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தேன். அதனால் என்னை திட்டமிட்டு இராணுவத்தினர் இந்த வழக்கில் மாட்டியுள்ளார்கள். எனக்கு குருக்கள் வீட்டில் படுகொலை செய்து கொள்ளையடிக்க வேண்டிய தேவை இல்லை. அப்படியான வளர்ப்பில் வளர்ந்தவன் இல்லை என்றார்.

இருவரும் நண்பர்கள்

அதனைத் தொடர்ந்து மூன்றாம் எதிரியான இராணுவ கோப்ரல் பேதுரு குணசேன தெரிவிக்கையில்,

இந்த கொலை சம்பவத்துடன் நான் தொடர்பு படவில்லை. முதலாம் எதிரி எனது நண்பர் அன்றைய தினம் எனது பிறந்தநாள் அதனால் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகள் என்னை முகாமில் வந்த சந்தித்து முகாமுக்கு முன்னால் இருந்த தேநீர் கடையில் தேநீர் அருந்தினோம். அப்போது எனது துப்பாக்கியை தருமாறும் பன்றி ஒன்றைச் சுட வேண்டும் என்றும் முதலாம் எதிரியான எனது நண்பர் என்னிடம் தமிழில் கேட்டார். அதனை இரண்டாம் எதிரி சிங்களத்தில் மொழி பெயர்த்து எனக்குக் கூறினார்.

அவர்கள் இருவரும் எனது நண்பர்கள் என்பதால் நான் அவர்களிடம் எனது துப்பாக்கியைக் கொடுத்தேன். நான் துப்பாக்கி கொடுத்த குற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கொலை நடைபெற்ற இடத்திற்கு நான் செல்லவும் இல்லை கொலை செய்வும் இல்லை" என்றார்.

தீர்ப்பு

அதனையடுத்து நீதிபதி தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். அதில் எதிரிகள் மூவர் மீதும் சுமத்தப்பட்ட ஐந்து குற்றசாட்டுகளும் கண் கண்ட சாட்சியங்கள் , சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள் என்பவற்றின் அடிப்படையில் சந்தேகத்துக்கு இடமின்றி வழக்கு தொடுனர் தரப்பால் நிரூபிக்கப்பட்டு உள்ளது என்று தீர்ப்பளித்தார். (4-37)

கூட்டணிக்குள்...

யில் தற்போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் உப தலைவர் இரா.துரைரட்ணம் தெரிவித்த கருத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் எதிர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூட்டமைப்புக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தயார் என்று மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்கு தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரின் சத்தியப்பிரமாண நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

என்ன நோக்கத்திற்காக உதய சூரியன் சின்னத்தில் ஓரணியாக நாம் இணைந்து தேர்தலில் போட்டியிட்டோமோ அதன் நோக்கத்துக்கு எதிராக அதுவும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் உப தலைவர் இவ்வாறு குறிப்பிடுவது, அவர் கிழக்கு மாகாணத்தில் யாருக்கோ விலைபோய்விட்டார் என்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது. அல்லது அவர் எதிர் காலத்தில் தனக்கு ஒரு பதவியை பெறுவதற்காக பிரதேச சபை உறுப்பினர்களை பகடைக் காய்களாக பயன்படுத்துகின்றார் என எண்ணத் தோன்றுகின்றது.

தேர்தலுக்கு முன்பு இதனை அவர் கூறியிருந்தால் மக்களின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதையும் ஒரு கணம் அவர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேர்தல் காலத்தில் ஒரு அறிக்கையும், தேர்தல் முடிந்த பின்னர் வேறு ஒரு அறிக்கையும் விடுத்து மக்களை வஞ்சித்து, ஏமாற்றுவது அவருக்கு வேண்டுமானால் கைவந்த கலையாக இருக்கலாம். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அது பொருந்தாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் அரசுக் கட்சியை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். மீறினால் அவர்கள் மீது கட்சி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதனையும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (5)

கேலிச்சித்திரம்

நன்றி: டெய்லிமிரர்

ஊவா முதல்வருக்கு தண்டனை அவசியம்

பெண் அதிபரை முழந்தாளிட வைத்த ஊவா மாகாண சபை முதலமைச் சருக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரான சுமிந்த விஜேசிறி. நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று நேரத்தின்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"பாடசாலை அதிபர் ஒருவருக்கு எதிராகச் செயற்பட்ட ஊவா மாகாண முதலமைச்சருக்குக் கடந்த தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை வழங்கினர். ஆனால், அவர் மீது வாள்வீச்சு இடம்பெறவில்லை. அரச தலைவர் மைத் திரி நடவடிக்கை எடுக்கவில்லை. அதிபருக்கு எதிராகச் செயற்பட்ட முதல மைச்சருக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார். (5)

குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பியசிறி மைத்திரியுடன் ஜப்பான் சென்றது எப்படி?

கேள்வி எழுப்புகிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 23

பெரிய ஊழல், மோசடி மற்றும் அதிகார முறைகேடு தொடர்பான அரச தலைவர் விசாரணை ஆணைக் குழுவில் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ள பியசிறி விஜய நாயக்க, அரச தலைவர் மைத்திரியுடன் இணைந்து ஜப்பான் சென்றமை தொடர்பில் அரசு விளக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன் னணியின் நாடாளுமன்ற உறுப் பினர் பிமல் ரத்நாயக்க வலியுறுத் தினார்.

"நாடாளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான கேள்வி நேரத் தின்போதே அவர் சபாநாயகரிடம் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பெரிய ஊழல், மோசடிகள் மற்றும் அதிகார முறைகேடுகள் தொடர் பான அரச தலைவர் ஆணைக் குழுவின் அறிக்கையில் 200 பேர் குற்றவாளிகளாகக் குறிப்பிடப்பட் டுள்ளனர்.

இந்தப் பட்டியலில் பியசிறி விஜே நாயக்கவின் பெயரும் இருக்கின் றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து அவர் ஜப்பானுக்குச் சென்றிருந்தார். குற்றவாளியாக இருக்கும் ஒரு வரை எப்படி அரசமுறைப் பய ணங்களில் இணைக்க முடியும்? ஜப்பான் தலைமை அமைச்சருட னான சந்திப்பிலும் அவர் பங்கேற் றிருந்தார்.

இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளின்போது எத்த கைய அரசியல் அழுத்தங்களும் இருக்காதா? இதை உறுதிப்படுத் தும் வகையில் சபாநாயகர் தலை யிடவேண்டும்" - என்றார் பிமல் ரத்நாயக்க.

இந்த விடயத்தைச் சட்டம், ஒழுங்கு அமைச்சரின் கவனத்துக் குக் கொண்டு வருவதாக அமைச் சர் கயந்த கருணாதிலக பதிளித் தார். (5)

நீதித்துறை மீதான விமர்சனத்தால் நாடாளுமன்றில் கூச்சல் குழப்பம்

கொழும்பு, மார்ச் 23

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிச்சேவை தொடர்பில் முன் வைத்த கருத்துக்களை விமர் சித்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கடும் வாதவிவாதம் நடைபெற்றது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் கூட்டு எதிர்க்கட்சியினரும் சபை யில் கூச்சலிட்ட போதிலும் பிரதிய மைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தனது கருத்துக்களை ஒருபோதும் மீளப்பெறப் பெறப்போவதில்லை என்று தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநா யக்க, நீதிச் சேவையின் பலவீன மும், நீதிபதிகள் மற்றும் அரசியல் வாதிகளின் பலவீனமுமே கள்ளர் கள் சுதந்திரமாகச் செயற்படக் காரணமாக அமைந்ததாக செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற அமர் வில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத் தில்நேற்றுமுன்தினம்புதன்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தில்ஒழுங்குப்பிரச்சினையை, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன எழுப்பினார்.

"பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநா யக நீதிமன்றத்தையும், நீதி யரசர் களையும் அவமதிக்கும் வகை யில் கருத்துக்களை முன்வைத் தார்.

எமது நாட்டில் நீதியரசர்களை பகி ரங்கமாக விமர்சிக்கும் அளவுக்கு இன்று அரசியற் செயற்பாடுகள் மாற்றம் பெற்றுள்ளது. சபாநாயகர் இதனைத் தடுத்திருக்க வேண் டும். பிரதி அமைச்சர் தெரிவித்த கருத்துக்களா அரசின் நிலைப் பாடு' என்று தினேஸ் குணவர்தன கேள்வி எழுப்பினார்.

முன்னாள் அரச தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச இதன்போது தெரி வித்ததாவது, நாடாளுமன்றத்தில் கருத்துக்களை முன்வைக்க நாடா ளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உள்ளது. ஆனால் அந்த சுதந்திரத்தை வைத்துச் சுயாதீன நீதிமன்ற சேவைகளை விமர் சிக்க முடியாது. அது தவறானது. அதனை தடுத்திருக்க முடியும். அப்போது சபைக்குத் தலைமை வகித்தவர் அதனை நிறுத்தியிருக்க முடியும். ஆனால் காலம் கடந்து

> கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்றால் சிறப்புத் தீர்மானத்தை முன்வைத்து நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதம் நடத்தியிருக்க முடியும். நாடாளுமன்றம் இதனை விடவும் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

விட்டது. எந்த நீதிமன்றமாக இருந் தாலும் சரி இவ்வாறு நீதிபதிகளை விமர்சிக்க முடியாது. கருத்துக்க ளைத் தெரிவிக்க வேண்டும் என் றால் சிறப்புத் தீர்மானத்தை முன் வைத்து நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதம் நடத்தியிருக்க முடியும். நாடாளுமன்றம் இதனை விடவும் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும். முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெனாண் டோப்பிள்ளை இவ்வாறு ஒரு முறை கருத்துக்களை முன் வைத்துப் பின்னர் 50 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தினார் என வும் குறிப்பிட்டார்.

சபை முதல்வர் லக்ஸ்மன் கிரி யல்ல கூறுகையில், முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெனாண் டோப்பிள்ளை தண்டப்பணம் செலுத்தவில்லை. அப்போது நானும் சபையில் இருந்தேன். முன்னைய ஆட்சியில் இவர்கள் தான் நீதியரசரை விரட்டி நீதித்துறையினையே அவமதித்த னர் என்று குறிப்பிட்டார். இதன் போது மகிந்த ராஜபக்சவும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சபையில் கூச்சலிட்டு அமைதி யின்மையை ஏற்படுத்தினர்.

பின்னர் சபைக்கு வந்த அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஒழுங்குப் பிரச்சினை பற்றிக் கேள்வி எழுப்பி பதில் கூறுகையில், நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறிச் சபையில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ள னர். நீதிமன்றத்தையோ உயர் நீதிமன்ற நீதியரசர் யாரையும் நான் அவமதிக்கும் வகையில் உரை நிகழ்த்த வில்லை.

இந்தியாவின் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டினேன். அதேபோல் ஒரு தேரரின் கருத்தான "இந்த நாட்டினை அழித்தது தேரர்களும் அரசியல்வாதிகளும்" என்பதைக் கூறினேன். அதைத் தவிர நான் நீதிமன்றத்தை அவமதிக்கும் எந்தக் கருத்தையும் முன்வைக்க வில்லை.

இன்று கள்ளர்கள் அனைவரும் வெளியில் உள்ளனர். இதற்கு அர சியல்வாதிகளும், தேரர்களும், மக்களும் பொறுப்புக் கூறாது செயற்பட்டமையே இதற்குக் கார ணமாகும். நீதிமன்றப் பலவீனம் மற்றும்நீதிவான்கள்கள்ளர்களைக் காப்பாற்றுவதே கள்ளர்கள் சுதந் திரமாகச் செயற்படக்காரணமாகும். இதற்கு அரசியல்வாதிகள், நீதிபதி கள், பொதுமக்கள் ஆகிய அனை வரும் பொறுப்புக்கூற வேண்டும். இந்தக் கருத்தினை நான் மீளப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை -என்றார். (5,31)

கூட்டு எதிரணியுடன் கைகோர்க்கத் தயார்

அத்துரலிய தேரர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

மக்களைக் காப்பாற்றும் தூய்மையான செயற்பாடு களைக் கூட்டு எதிரணியு டன் இணைந்து முன்னெ டுக்கவும் நான் தயாராக உள்ளேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

"சிறுநீரக நோய்க் கட்டுப்பா டுகள் குறித்து விமர்சனம் முன்வைக்கப் பட்டு வரு கின்றது. சிறுநீரக நோய்கள் வரும் உரங்களை நீக்க வேண்டும். இல்லையேல் அரசை வீழ்த்த முன்வரு வோம்'' என்று அத்துர லியே ரத்ன தேரர் கூறியுள் ளார்.

அப்படியாயின் அரசின் நிலைப் பாடு என்ன? என்று நாடாளு மன்றஉறுப்பினர் துசார கேள்வி எழுப்பினார்.

இதற்காக அரசைக் கவிழ்க்க முடியாது என்று அமைச்சர் எரான் விக்கிரமரட்ன பதிலளித்தி ருந்தார்.

இந்த நிலையில் சபைக்குள் பிர சன்னமான அத்துரலிய ரத்ன தேரர், ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியைச்சட்ட முறைப்படிநீக்க முடியாது என்பது உண்மையா கும். ஆட்சியைக் கவிழ்ப்பதா இல்லையா என்பதைத் தீர்மா னிப் பது அரசை உருவாக்கிய மக்களேயாகும்.

இன்று நாட்டில் 3 இலட்சம் சிறு நீரக நோயாளர்கள் உள்ளனர். ஆனால் விச உரம் பாவிக்கப்பட வேண்டும் என்று ஆய்வாளர் கள் கூறியதாக அரசு கூறு கின் றது.

ஒரு சிலரை மட்டுமே வைத்துத் தீர்மானம் எடுக்க வேண்டாம். இந்த உரப் பாவனையினை நிறுத்த வேண்டும் என்று பலர் தெரிவித்துள்ளனர். நான் முன் னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு இந்தக் காரணி களை எடுத்துரைத்து வந்துள் ளேன். அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன வுக்கும் இதனை நான் கூறியுள்ளேன்.

அவர் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக இவற்றை நிறுத்து வதாகக் கூறியிருந்தார். இந்த விவகாரம் குறித்து நாடாளு மன்றக் குழுவும் நியமிக்கப் பட்டது.

ஆனால் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இவர்கள் நினைத்த பெயரில் தீர்மானம் எடுத்து நடைமுறைபடுத்தி வரு கின்றனர். இதுவா நல்லாட்சி. ஒரு சில மேற்கத்தைய நிறுவ னங் களின் கோரிக்கைக்காக இவற்றினை நியாயப்படுத்த முடியாது. அவ்வாறு கூற எவருக் கும் அதிகாரம் இல்லை. இந்த விடயத்தில் எனக்கும் கூட்டு எதிர்க்கட்சியினருக்கும் இடை யில்இருக்கும்தொடர்பு கொள்கை அடிப்படையிலானதாகும். எனது இந்தக் கோரிக்கை யில் கூட்டு எதிர்க்கட்சியினர் என்னுடன் இணைந்தால் அவர்களுடன் நான் பயணிப்பேன் - என்றார். (5,61)

கண்டிக் கலவரம்

வன்முறைக்கு வித்திட்ட 4 சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு. மார்ச் 23
கண்டியில் பரவிய இனக்கலவரத்துக்கு, காரணமான சிங்களச் சாரதி ஒருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.
அன்றைய தினம் அணிவகுப்புக்கு உட்படுத்தவும் தெல்தெனிய நீதிவான் பரிக்தீன் உத்தரவிட்டார்.
இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.
சந்தேக நபர்கள் நால்வரும் கறுப்பு நிறக் கண்ணாடிகள் கொண்ட சிறப்பு வாகனத்தில் முகம் முழுமையாக மறைக்கப்பட்டுப்பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
நீதிமன்ற வளாகத்தில் கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.
(5,71)

ஜெனிவாவில்
இணை அனுசரணை நாடுகள் ஏமாற்றம்

கொழும்பு, மார்ச் 23

ஜெனிவாவில் இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், மெதுவான முன்னேற்றங்களே இருப்பது குறித்து, இணை அனுசரணை நாடுகள், ஏமாற்றம் வெளியிட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைதொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வாய்மூல அறிக்கையை அடுத்து, நடந்த விவாதத்திலேயே, ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் ஏமாற்றத்தை வெளிப்படுத்தின.
அமெரிக்கா, பிரிட்டன், மசிடோனியா, மொன்ரனிக்ரோ ஆகிய இணை அனுசரணை நாடுகள், இணைந்து இந்த அமர்வின் போது கூட்டு அறிக்கையை வெளியிட்டன.
அதில், இலங்கை பாதுகாப்புப் படை அதிகாரிகள் சிலர் அதிகார மீறல்களில் ஈடுபடுவதாக வரும் அறிக்கைகள் கவலையை ஏற்படுத்தியுள்ளது.
மதங்களுக்கிடையிலான வன்முறை, தாக்குதல்கள், சிறுபான்மையினருக்கு எதிரான இனவெறுப்புப் பேச்சு உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள், நல்லிணக்க முயற்சிகளின் தேவையை வலியுறுத்தியிருக்கின்றது.
30/1 தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கி ஒப்புக் கொண்டது போல, அரசமைப்பு மறுசீரமைப்பு மூலம், அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், நிலையான அமைதி, மற்றும் வன்முறைகள் மற்றும் மீறல்கள் மீள நிகழாமையுடன் இணைந்ததாக உள்ளது.
அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த காணாமற்போனவர்களின் குடும்பங்கள், பதில்களுக்காக நீண்ட காலம் காத்திருக்கிறனர். காலதாமதமின்றி, காணாமற் போனோர் பணியகம், முழுமையாகச் செயற்பட வேண்டும்.
30/1 தீர்மானத்துக்கு அமைய, ஏனைய நிலை மாறுகால பொறிமுறைகளை உருவாக்குதற்கான அர்த்தமுள்ள நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
காத்திரமான பாதுகாப்புத் துறை மறுசீரமைப்புக்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தல் என்பன, நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவும்.
உறுதியான தலைமைத்துவம் மற்றும் தெளிவான நடவடிக்கைக் காலவரம்புடன், அனைத்து இலங்கையர்களின் ஆதரவுடன் மறுசீரமைப்பு, நீதி நிகழ்ச்சி நிரல், மற்றும் நீண்டகால நல்லிணக்கத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசினால் எடுக்க முடியும்.
கடந்தகால பிளவுகளுக்குத் திரும்பாமல் தவிர்ப்பதற்கு இலங்கை இன்னமும் வரலாற்று வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது.
34/1 மற்றும் 30/1 தீர்மானங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம், அனைத்து இலங்கையர்களுக்கும் பாதுகாப்பான, அமைதியான, செழிப்பான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம், என்றும் இணை அனுசரணை நாடுகள் தெரிவித்துள்ளன. (5)

தேனீக்களால் தப்பிய கோழிகள்

கொழும்பு, மார்ச் 23
தும்புரப் பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் கோழிப்பண்ணையொன்றில், பெய்து கொண்டிருந்த கடும் மழையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட திருடன் கோழிகள் சிலவற்றைத் திருடிக் கொண்டு வெளியேற முயற்சித்துள்ளான்.
வீடொன்றின் பின்புற வளவில் அமைந்துள்ள கோழிப் பண்ணையில் பகல் முழுவதும் கோழிகள் பின்புற வளவிலே நடமாடி இரை தேடிய பின்னர் இரவிலே கூடுகளுக்குள் செல்வது வழக்கம். கதவை உடைத்துக்கொண்டு பண்ணைக்குள் புகுந்த திருடன், அங்கிருந்த நல்ல கொழுத்த கோழிகளைப் பிடித்துத் தன் கையுடன் கொண்டுவந்திருந்த பையில் கோழிகளைப் போட்டுக்கொண்டு இன்றைக்கு நல்ல வேட்டைதான் என மகிழ்ச்சியுடன் அவசரமாக வெளியேற முயற்சித்த போது தவறுதலாகத் தேனீக்கள் உள்ள ஒரு பெட்டி மீது மோதிவிட்டான்.
அந்தத் தேனீக்கள் கலைத்து அந்தத் திருடனைத் தாக்கத் தொடங்கிவிட்டன. அவைகளிடமிருந்து தப்புவதற்காக, திருடிய கோழிகளுடன் தன் இடுப்பிலிருந்த சாரத்தையும் அங்கேயே கைவிட்டு விட்டு நிர்வாணமாகத் தப்பிப் பிழைத்து ஓடிவிட்டான். தேனீக்களால் அந்தக் கோழிகள் தப்பித்தன. (5)

அறிக்கைகளை மொழிபெயர்க்க இன்னும் 2 மாதங்கள் தேவை
அமைச்சர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23
பிணைமுறி விவகாரம் அறிக்கை தேசிய அரச கரும மொழிகள் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெறவில்லை. பெரிய நிதி மோசடிகள் அறிக்கை கிடைத்துள்ளது. இதன் மொழிபெயர்ப்புப் பிரதிகளை வழங்க மே மாதம் வரையில் கால அவகாசம் தேவை. உடனடியாக அறிக்கையின் மொழிபெயர்ப்பு அவசியமெனில் நாடாளுமன்ற மொழி பெயர்ப்பாளர்களைப் பயன்படுத்துங்கள். இவ்வாறு தேசிய அரச கருமமொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
மத்திய வங்கி பிணைமுறி விவகாரம், பெரிய நிதி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய ஆணைக்குழு அறிக்கைகளை தமிழ் மொழி பெயர்ப்புக்காக எனது அமைச்சின் கீழ் இயங்கும் அரச கரும மொழிகள் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மத்திய வங்கிப் பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை மொழிபெயர்க்க எமக்கு வழங்கப்படவில்லை. நிதி மோசடி ஆணைக்குழு அறிக்கை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையினை மொழிபெயர்ப்புச் செய்வதை உடனடியாகப் பூர்த்திசெய்ய முடியாது. இது மிகவும் முக்கியமான அறிக்கை.
அதேபோல் சட்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையாக உள்ள நிலையில் இதனை நாம் உடனடியாக மொழிபெயர்ப்பு செய்து கொடுக்க முடியாது. உடனடியாக வழங்க வேண்டும் என்ற காரணத்துக்காக எனது அதிகாரிகளை சிரமத்தில் ஆழ்த்தவும் முடியாது. அவ்வாறு உடனடியாக வேண்டும் என்றால் சபாநாயகர் இதனைப் பொறுப்பேற்று நாடாளுமன்ற மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு அறிக்கையினை மொழிபெயர்ப்பு செய்துகொள்ள முடியும்.
எனது அமைச்சின் கீழ் அறிக்கையினை மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டும் என்றால் அதற்குக் கால அவகாசம் எனக்குத் தேவைப்படும். மே மாதம் வரையில் இந்த அறிக்கையின் மொழிபெயர்ப்புப் பிரதிகளை எம்மால் வழங்க முடியாது - என்றார். (5,31)

குண்டே துளைக்காத எண்ணெய் கண்டுபிடிப்பாம்

கொழும்பு, மார்ச் 23
இலங்கையைச் சேர்ந்த இளைஞர் குண்டு துளைக்காத எண்ணெய் ஒன்றை உருவாக்கியுள்ளதாகக் கொழும்பு ஊடகம்பரபரப்புத்தகவலை வெளியிட்டுள்ளது.
ஹொரணை உதுருதுடுவ என்னும் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு குண்டு துளைக்காத எண்ணெய்யை உருவாக்கியுள்ளார்.
நீண்ட நாள்களாக மேற்கொண்ட முயற்சியின் அடிப்படையில்இந்தத்தைலம்அல்லதுஎண்ணெய்வகையை உருவாக்கியதாகவும், பண்டைய குருக்களின் மந்திர தந்திரங்களைப் பயன்படுத்தி இந்த எண்ணெய் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இளைஞர் தெரிவித்துள்ளார்.
இந்த எண்ணெய் போத்தலுக்குத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போதிலும், அது எண்ணெய்ப் போத்தல் மீது பட வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
விஸ்ணு கிராந்தித் தைலம் என்று இந்த எண்ணெய்க்கு பெயரிடப்பட்டுள்ளது. இந்த எண்ணெய் போத்தலுக்கு எவரினாலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட முடியாது என்று கண்டுபிடிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.
எந்தவொரு லாப நோக்கிலும் இதனை உருவாக்க வில்லை எனவும், சட்ட ரீதியான தேவைகளின்போது இந்த எண்ணெய்யைப் பயன்படுத்தித் துப்பாக்கிச் சூட்டிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
இந்த எண்ணெய்யின் மகிமை தொடர்பில் எவ்வித விஞ்ஞானபூர்வமான நிரூபனங்களும் செய்யப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

புத்தாக்க மையம் திறந்து வைப்பு

கொழும்பு, மார்ச் 23
அமெரிக்கத் தூதரகம் மாத்தறை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் பங்களிப்புடன், அமெரிக்கப் புத்தாக்க மையத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைத்துள்ளது. அமெரிக்கத் தூதரகத்தின் பொது அலுவல்கள் அதிகாரி ஜேம்ஸ் ருஸ்ஸோ திறந்து வைத்தார்.
இந்த மையமானது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களையும் வழங்கவும் ஆங்கில மொழிக் கற்றலை ஊக்குவிக்கவும் அமெரிக்காவில் கற்பதைத் தூண்டவும் செயற்படும். (5)

அரசுக்குள் இருந்து விமர்சிப்பதை விடுத்து எதிரணியில் அமருங்கள்

அமைச்சர் ராஜித சேனாரத்ன காட்டம்

கொழும்பு, மார்ச் 23

நல்லாட்சி அரசை உருவாக்குகின்றபோது மேடைகளில் அதற்கு எதிராகப் பேசியவர்களும், மைத்திரிபால அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கியபோது அவரை மானபங்கப்படுத்தியவர்களும் இருக்கின்றனர். அனைத்துச் சவால்களையும் தாண்டி நாம் மக்கள் பலத்தோடு தேர்தலை வெற்றி கொண்டோம். இப்படிப்பட்டவர்கள் அரசை விமர்சிப்பதானது, கண்ணாடி வீட்டினுள் இருந்து கல் எறிவது போன்றது. இதனை விடவும் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வது யாவருக்கும் நல்லது. இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் செய்தியாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரைப் பாதுகாக்கும் நோக்கோடு செயற்படுகின்றேன். அரசைப் பாதுகாக்க வேண்டிய கடமை எம் மீதுள்ளது. தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய தேவை ராஜபக்ச குடும்பம் மற்றும் கூட்டு எதிரணியினருக்கே உள்ளது. தமக்கு எதிராகவுள்ள வழக்குகளை மறைக்க அவர்கள் பல விதமாகச் சிந்திக்கின்றனர். இதனை அறியாது எமது அரசுக்குள் இருக்கும் சில அமைச்சர்களும் உறுப்பினர்களும் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். தற்போது எமக்குள்ள வேலை தலைவரை மாற்றுவதல்ல. நாட்டை அபிவிருத்தி செய்து 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை வெற்றிகொள்ள முயற்சிக்க வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து தேர்தலில் களமிறங்கினால் வெற்றி கொள்ளலாம். இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். இந்த இணைப்பினை இல்லாமல் செய்வதற்கே கூட்டு எதிரணியினர் முயற்சிக்கின்றனர் - என்றார். (5)

அலோசியஸ், பலிசேன மீளாய்வு மனுத்தாக்கல்

பேர்பேச்சுவல்ட்ரெசரீஸ் லிமிட்டட் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், அந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மீளாய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தமக்குப் பிணை வழங்குமாறும் பிணை வழங்க மறுத்துக் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தள்ளுபடி செய்யுமாறும் கோரியே மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேனவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த மாதம் 4ஆம் திகதி கைது செய்யப்பட்ட இருவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தில் சுமார் 688 மில்லியன் ரூபா நீதி இழப்பு ஏற்பட்டமைக்கு அர்ஜுன் மஹேந்திரன் பொறுப்பாக உள்ளார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக மோசடி மற்றும் நம்பிக்கைக் கேடு ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றங்களைப் புரிவதற்கு அர்ஜுன மகேந்திரனுடன் இணைந்து சதி செய்தார் என்று அவருடைய மருமகனான அர்ஜுன் அலோசியஸுக்கு எதிராகவும், உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் கசுன் பலிசேனவுக்கு எதிராகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட அலோசியஸ் மற்றும் பலிசேனவின் பிணை கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் நிராகரிப்பட்ட நிலையில், பெப்ரவரி 28ஆம் திகதியன்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 9ஆம் திகதியன்று பிணை மனு நிராகரிக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த மீளாய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு மேல் நீதிமன்றம் மற்றும் கோட்டை நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றால் பிணை நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உத்தரவிடுமாறும் தமக்குப் பிணை வழங்குமாறும் கோரியுள்ளதுடன், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை பிறப்பிக்குமாறும் இருவரினாலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் குறிப்பிட்டப்பட்டுள்ளது. (5)

ஊழலில் இந்தியாவை முந்தியது இலங்கை

ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனலின் கணிப்பீட்டில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

உலகில் நாடுகளின் ஊழல் நிலை தொடர்பான பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடும் ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் அமைப்பு கடந்த ஆண்டுக்கான ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. உலகில் உள்ள 180 நாடுகளில் நடைபெறும் ஊழல்களை அலசி ஆராய்ந்து தரவரிசைப்படுத்தி இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசு வழங்கும் பொதுசேவை மற்றும் அரசு மட்டத்தில் நடைபெறும் ஊழல்கள் அதிகளவில் கவனத்தில் எடுத்து இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை 91 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையை விட மிகக் குறைவாக ஊழல் நடக்கும் நாடாக இந்தியா தரப்படுத்தப்பட்டுள்ளது.

முதலிடத்தில் நியூசிலாந்தும், இரண்டாவது இடத்தில் டென்மார்க்கும், மூன்றாவது இடத்தில் பின்லாந்து, நோர்வே, சுவிஸ் மூன்று நாடுகளும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டை விட 2017ஆம் ஆண்டு இலங்கையில் ஊழல் அதிகரித்துள்ளதாக, அந்தக் கணிப்பீட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

தண்டனைக் காலம் முடிந்தும் கைதிகளுக்கு விடுவிப்பு இல்லை

உறவினர்கள் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

மாலைதீவு கடற்பரப்பில் கைதாகி, இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்று தமிழ்க் கைதிகளின் தண்டனைக் காலம் முடிவடைந்துள்ளபோதும் அவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் 2007ஆம் ஆண்டு மாலைதீவு கடற்பரப்பில்வைத்துமாலைதீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மூவரையும் குற்றவாளி என்று மாலைதீவு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. தண்டனைக்காலத்தை இலங்கைச் சிறையில் அவர்கள் அனுபவிக்கலாம் என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருந்தது. இதனையடுத்து மூவரும் இலங்கைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

"அவர்களின் தண்டனைக் காலம் கடந்த ஆண்டு மே மாதமே நிறைவுக்கு வந்துள்ளது. அவர்களை விடுவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சாள்ஸ் நிர்மலநாதன் ஊடாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தை அணுகியிருந்தோம். மாலைதீவு நீதிமன்ற ஆவணங்களின் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டியுள்ளது என்று எமக்குப் பதில் வழங்கப்பட்டது. அப்படியாயின் அவர்களை எந்த அடிப்படையில் சிறையில் அடைத்து வைத்திருந்தீர்கள் என்று நாங்கள் கேள்வி எழுப்பியிருந்தோம்" என்று உறவினர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, மாலைதீவு நீதிமன்றினால்தண்டனை வழங்கப்பட்ட ஆவணம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் மூன்று கைதிகளையும் 2020ஆம் ஆண்டே விடுவிக்க முடியும் என்று சட்டமா அதிபர் தனக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக, அமைச்சர் சுவாமிநாதன் குறிப்பிட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

'மாலைதீவுநீதிமன்றினால் கைது செய்யப்பட்ட திகதியைக் கவனத்தில் எடுக்காமல், வழக்கு முடிவடைந்து தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளையே சட்டமா அதிபர் கணக்கில் எடுத்துள்ளார். கடந்த ஆண்டே தண்டனை முடிந்து விடுவிக்கப்பட வேண்டிய 3 அரசியல் கைதிகளையும், 2020ஆம் ஆண்டே விடுவிக்கலாம் என்று அதனால் தான் கூறியுள்ளார். இந்த விடயத்தை அமைச்சர் சுவாமிநாதனுக்கு எடுத்துக் கூறினோம். ஒரு வாரம் விடுமுறையில் மாத்திரம் விடுவதற்கு தற்போது அவர் சம்மதித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட திகதியிலிருந்து கணித்து, அவர்களின் தண்டனைக் காலம் முடிவுற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொண்டு மூன்று கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5,105)

பெண் மீது அவதூறுப்பேச்சு மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 23

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெண்ணொருவரைத் தகாத முறையில் தூற்றிய மூவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க நேற்றுமுன்தினம் இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

சந்தேகநபர்கள் மூவரும் உறவினர்கள் என்பதுடன், பெண்ணுடன்பணம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டுவந்தநிலையிலே வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். தகாத வார்த்தைகளினால் தூற்றியதையடுத்து குறித்த பெண் சந்தேகநபர்களுக்கெதிராகப் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு மேற்கொண்டார்.

பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போதே அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (5)

பொருளாதார இலாபத்தை அரசு இழக்கக்கூடாது

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

பொருளாதார இலாபத்தைத் தியாகம் செய்யக்கூடாது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டிலுள்ள அரசியற் சூழ்நிலை காரணமாக, எங்களுக்குக் கிடைத்த பொருளாதார இலாபத்தை அரசு தியாகம் செய்து விடக்கூடாது. அரசின் பொருளாதாரம் மெதுவாகவே வளர்ச்சியடைகின்றது. இப்பொழுதுநிலைமைசீராக்கப்பட்டுள்ளது. அதன் வளர்ச்சியை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்.

கடந்த ஆண்டு நாங்கள் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி வருமானம், ஆகக் குறைந்த அடி மட்டத்திலிருந்தே பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எங்களின் வெளிநாட்டு ஏற்றுமதி இதைப் பார்க்கிலும் அதிகமாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும்நாங்கள் எங்கள் இலக்கை நோக்கிய சரியான திசையிலேயே சென்று கொண்டிருக்கின்றோம். குறுகிய கால முதலீடுகளைப் பற்றி யோசிக்காமல் ஏற்றுமதிகளைப் பற்றியே அதிக கவனஞ்செலுத்த வேண்டும்.

பொருளாதாரம் தான் நாட்டுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் அவர்கள் உடம்பில் ஓடும் இரத்தம் போன்றது. அரசியல்தான் அதில் பெரிய பூதகரமாக எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டிருக்கிறது. அந்நிய செலவாணி 2016 ஆம் ஆண்டில் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து 2017 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் 8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக வளர்ச்சியுற்றுள்ளதுடன், குறைந்த காலப் பரிமாற்றங்கள் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்தமையை நாட்டின் பொருளாதார வளர்ச்சியாகக் குறிப்பிடமுடியும் - என்றார். (5)

HARI REAL ESTATE
A TRADITION OF TRUST

வீடு, காணி, வணிக மற்றும் அசையா சொத்துக்கள் விற்க வாங்க நம்பிக்கையான முகவர் நிறுவனம் இப்பொழுது யாழ்நகரின் கேந்திர அமைவிடத்தில் ...

"ஹரி றியல் எஸ்டேட்"

உங்களது அனைத்து நிலையான சொத்து பரிமாற்றங்களையும் இலகுவாக மேற்கொள்ள நாம் உதவுகின்றோம் ...

- காணி, வீடு, மனை விற்க வாங்க
- காணி அளவிடு மற்றும் பெறுமதி மதிப்பீடு
- நிலையான சொத்துக்கள் பராமரிப்பு இவற்றுடன் அனைத்து கட்டட
- நிர்மாண தீர்வுகளும் ஒரே கூரையின் கீழ்

- குறைந்த சேவைக்கட்டணம்
- தேவையற்ற அலைச்சல்களுக்கு முற்றுப்புள்ளி
- வெளிப்படைத்தன்மை மற்றும் நட்புறவான வாடிக்கையாளர் சேவை

"ஹரி றியல் எஸ்டேட்"

இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000 முகநூல் harirealestate.lk

POWERED BY HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD

MODERN City Inn
Wi-Fi Available

Comfortable Air Conditioned Rooms with Attached Toilets and Hot & Cold Water
Very Moderate Room Charges
Single or Double Occupancy
and Family Apartment
Wedding / Small Group Conferance
All Kind of Parties
10 minutes drive from Air Port.
You can contact in all Three language

Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
moderncityinn@yahoo.com
moderncityinn1@gmail.com
moderncityinn.com

For inquiries and Reservationes
Contact No:- 031-2233967
031-2231961
moderncityinn@yahoo.com

மரண அறிவித்தல்

தோற்றம்
07
.
05
.
1927

மறைவு
22
.
03
.
2018

திருமதி தங்கம்மா கந்தையா

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் நல்லூர் இல.05, வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தையா நேற்று (22.03.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமணபிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசு கந்தையாவின் (முன்னாள் வர்த்தகர் - நொச்சியாகம) அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் பேரம்பலம், விசாலாட்சி, மகேந்திரன், சிவஞானசுந்தரம், சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தாயும், ராணிதேவி, சிவயோகம், வேலுப்பிள்ளை (வர்த்தகர் - அப்புத்தளை), பூங்கோதை, புஸ்பராணி, காலஞ்சென்ற கோபாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், யசோதா, ரவிந்திரன், புனிதவதி, சிவதர்ஷினி, பிரியதர்ஷினி, சுதாகரன், சிவராணி, சிவரஞ்சினி, கிருபாகரன், ரிஷிகேசன், கீதா, அனுஷாராணி, அகிலாராணி, ததீகா, ஜெயவர்ணன், சுந்தரஆதவன், காந்தரூபன், பாலரூபன், குகரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிகரன், பவித்திரா, செயானி, திவ்வியகரிஷன், திவ்வியலச்ஷன், மித்திரா, கிஷான், சச்சின், சேயோன், பவித்திரா, அஷ்வின், காயத்திரி, கார்த்திகா, மயூகன், அக்சரா, அபிரா, ஆதீஸ், ஆரதிஆகியோரின் அன்புப்பூட்டியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசம்மா, தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சிதம்பரப்பிள்ளை, சரஸ்வதி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.05, வைமன் வீதி, நல்லூர் இல்லத்தில் இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.05, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்

(akn.397)(13,17)

துணுக்காய்ப்பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ - து)
துணுக்காய்
கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதி 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குமுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளுக்கு அமைய முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2015.10.12 ஆம் திகதிய 1936/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்கும் கிளைக்குழு தெரிவிற்கான கிளைக்பொதுச் சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி நடத்துவதற்கும் இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்குமாக கீழ்வரும் அலுவலர் களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

1. கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி - 2018.04.06 வெள்ளிக்கிழமை
2. நேரம் - முற்பகல் 10.00
3. கிளைப் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடங்கள்

தொடர் இல.	கிளையின் பெயர்	தவிசாளர்கள் பெயர்	கூட்டம் நடைபெறும் இடம்
01	துணுக்காய்	திரு. வ. கிருபாகரன்	தலைமைக் காரியாலயம்
02	கல்விளான்	திரு. பொ. கோகுலன்	கல்விளான் பொதுநோக்கு மண்டபம்
03	கொத்தம்பியாகுளம்	திரு. அ. தயாளன்	ஆலங்குளம் பொதுநோக்கு மண்டபம்
04	திருநகர் (யோகபுரம் 2-4)	செல்வி. அ. மோகனகுமாரி	திருநகர் பொதுநோக்கு மண்டபம்
05	பாரதிநகர் (யோகபுரம் 1-5)	திரு. வ. விபுலன்	பொதுநோக்கு மண்டபம் பாரதிநகர்
06	புத்துவெட்டுவான்	திரு. ந. நாவேந்தன்	புத்துவெட்டுவான் பொதுநோக்கு மண்டபம்
07	தென்னியன்குளம்	திரு. அ. சஞ்சயன்	தென்னியன்குளம் பொதுநோக்கு மண்டபம்
08	புகழேந்திநகர் 1-9	திருமதி சு. தர்சினி	புகழேந்திநகர் பொதுநோக்கு மண்டபம்
09	கோட்டைகட்டியகுளம்	திரு. ச. பாஸ்கர்	கோட்டைகட்டியகுளம் பொதுநோக்கு மண்டபம்
10	பழையமுறிகண்டி	திரு. கி. அ. டெனிசியஸ்	பழையமுறிகண்டி பொதுநோக்கு மண்டபம்
11	அமைதிபுரம்	திரு. இ. விஜயகுமார்	அமைதிபுரம் பொதுநோக்கு மண்டபம்
12	ஸ்ரீமுருகன்	திரு. ச. ரதிகுலன்	ஸ்ரீமுருகன் கிளைநிலையம்
13	அணிஞ்சயன்குளம்	திருமதி ஞா. மேரிகொன்சி	அணிஞ்சயன்குளம் பொதுநோக்கு மண்டபம்
14	தேறாங்கண்டல்	திரு. சி. பாலசுந்தரம்	தேறாங்கண்டல் பொதுநோக்கு மண்டபம்
15	ஜயன்கன்குளம்	திரு. பெ. பவள்ராஜ்	ஜயன்கன்குளம் பொதுநோக்கு மண்டபம்
16	அம்பலப்பெருமாள்குளம்	திரு. வி. முகுந்தன்	அம்பலப்பெருமாள்குளம் பொதுநோக்கு மண்டபம்
17	ஆரோக்கியபுரம்	ஜனாப். எஸ். எம். சாஜித்	ஆரோக்கியபுரம் பொதுநோக்கு மண்டபம்

கிளைப் பொதுச்சபைக்கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய கூட்ட அறிவித்தல் கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டங் கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொதுஇடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச் சபைக்கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்கள் குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப் பொதுச்சபைக்கூட்டங்களிற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆழுமை கொண்டதாக வெளிப்படுத்து மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.

உ. சுபசிங்க
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
கூட்டுறவு அலுவலகம், முல்லைத்தீவு.

(IN 6221/15/)

மரண அறிவித்தல்

சலேத்தம்மா பரமேஸ்வரன்

(யாழ். போதனா வைத்திய சாலை ஓய்வுநிலை பரிசாரகர்)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சலேத்தம்மா பரமேஸ்வரன் நேற்று (22.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆபிரகாம் - கிறிஸ்ரீனா தம்பதியரின் அன்பு மகளும், பர மேஸ்வரன் (சுகாதார பரிசோதகர் ஊர்காவற்துறை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பதுவைநாயகம் மற்றும் இம்மானுவேல் லூர்த்தம்மா ஆகியோரின் சகோதரியும், நதீஷ், வாகினி, வானதி, கலீஷ் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நவாலி சென்பீற்றேஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs 15014)(13)

தகவல் : குடும்பத்தினர் 077 910 3385

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி விலகல்

சுரேஸ் பிரேமச் சந்திரனின் சர்வாதிகாரப் போக்கே காரணம் என்கிறது

யாழ்ப்பாணம், மார்ச்.23

ஒற்றுமையின் பலமாக செயற்பட முன்வந்த முன்னாள் போராளிகளாகிய எங்களது நம்பிக்கையை உடைத்தெறிந்ததன் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சிளுடனான கூட்டினை முன்னெடுக்கமுடியாத நிலையில் கூட்டு நடவடிக்கையிலிருந்து வெளியேறுவதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள்கட்சி தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணியில் உள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்கட்சியின்சர்வாதிகாரப்போக்கினாலே இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் அந்தக் கட்சி அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் குறிப்படப்பட்டுள்ளது.

அதில்மேலும்உள்ளதாவது:

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒற்றுமையை வலுப்படுத்தி ஆறு கட்சிகள் இணைந்து தேர்தலைச் சந்தித்தோம். இதற்குஅமையகூட்டுக்கட்சிகளின் நடவடிக்கைகள் குறித்த ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டிருந்தோம். தேர்தல் நிறைவடைந்த மறுநாளே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ்கட்சி மீறியதன் தொடராக அந்தக் கட்சி தற்போது வரையில் தவறான முடிவுகளை சர்வாதிகாரப் போக்கில் முன்னெடுத்துவருகிறது. கூடுதல் வாக்குகளைப் பெற்றதன் அடிப்படையில் மேலதிக ஆசனங்களைபுனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழர் விடுதலைப்புலிகள் கட்சியினராகிய நாங்களே பெறுவதற்கான தகுதியினைப் பெற்றவர்களாக இருக்கிறோம். ஆனாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தன்னிச்சையாக முடிவெடுத்துமேலதிக ஆசனங்களைதமது விருப்பத்துக்கு ஏற்றவகையில் பங்கீடு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றமை எங்களை அதிருப்தி அடைய வைத்திருக்கிறது. இதனைக் கண்டும் காணாமல் இருக்கின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் சங்கரியின் நடவடிக்கையும் எங்களை விசனம் அடையச் செய்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் மற்றும் வெருகல் பிரதேச சபைகளில் போட்டியிட்ட எமது கட்சியானது ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியைவிட அதிகவாக்குகளைப் பெற்றிருந்தது. இரு பிரதேச சபைகளிலும் எமது கூட்டணிக்கு கிடைத்த மேலதிக ஆசனங்களைப்பங்கிடும்போதுகூடுதல் வாக்குகளைப் பெற்றகட்சி என்ற அடிப்படையில் எமது கட்சிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ்கட்சியின்தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தன்னிச்சையாக செயற்பட்டு மூதூரில் கிடைத்த மேலதிக ஆசனத்தை தேர்தலில்போட்டியிட்டுத் தோல்வியடைந்த தனது கட்சி அமைப்பாளருக்கு வழங்கியதுடன் வெருகல் பிரதேச சபையில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த எமது கட்சியைச் சேர்ந்த ஒருவரை எங்கள் அனுமதியில்லாமல் உள்வாங்கி அங்கு கிடைத்த மேலதிக ஆசனத்தை அவருக்கு வழங்கியுள்ளார். அத்துடன் திருகோணமலையில் எங்கள் கட்சியின் ஆலோசகராகச் செயற்பட்ட பிரகாஸ் என்பவரை தனதுகட்சிக்குள்உள்வாங்கி அவருக்கும் திருமலை நகரசபையில் கிடைத்த ஒரு மேலதிக ஆசனத்தை வழங்கியுள்ளார். கூட்டணியில்அங்கம்வகிக்கும் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு ஒருவர் இணையவிரும்பினால்அவர்அங்கம்வகித்த கட்சியின் தலைமையில் ஒப்புதல் இன்றி மற்றைய கட்சி உறுப்பினரை உள்வாங்க முடியாது என்பது தேர்தலுக்கு முன்பு நாம் கையொப்பமிட்ட உடன்படிக்கையில் ஒரு சரத்து. இச்சரத்தைமீறிபதவிகொடுத்து இருவரை எமது கட்சியிலிருந்து தனது கட்சியில் இணைத்துள்ளார் சுரேஸ் பிரேமச்சந்திரன். இந்த விடயங்கள் தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரியிடம் நேரில் சென்று தெளிவுபடுத்தியிருந்தோம். ஆனபோதிலும் ஒரு நாள் முன்பாகவே பட்டியல் அனுப்பப்பட்டுவிட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

இது குறித்து எங்களுக்கு தெரியப்படுத்தவில்லையே எனக் கேட்டபோது அலைபேசி இணைப்பு துண்டிக்கபட்டு விட்டது என்று காரணம் சொன்னார். அதேபோலவே சுரேஸ்பிரேமச்சந்திர னும் காரணம் சொன்னதுடன் கதைத்துக்கொண்டிருக்கும் போதே அலைபேசி இணைப்பைத்துண்டித்தார். இவ்வாறான மோசமான அரசியல்பண்பாளர்களாக அவர்கள் இருவரும் செயற்பட்டமை எங்களை அதிர்சியடைய வைத்துள்ளது தேர்தல் நடவடிக்கைகளுக்காக எந்தவித ஆக்கபூர்வமான முனைப்புக்களையும் மேற்கொள்ளாது எங்கள் உழைப்பின் மூலம் பெறப்பட்ட வெற்றியைக் கூட தட்டிப்பறிக்கும் மனோநிலையில் இருக்கும் இவர்களுடன் சேர்ந்த பயணிப்பது என்பது சாத்தியமில்லையென்பதால் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்கிற கூட்டு முயற்சியிலிருந்து நாங்கள் வெளியேறுகிறோம் என்பதை பகிரங்கமாக அறிவிக்கிறோம் என்றுள்ளது. (21)

தெற்கு மீனவரால் சுரண்டப்படுகிறது முல்லைத்தீவு மீனவரின் கடல் வளம்

விக்கிக்கு மீண்டும் கடிதம் அனுப்பினர் முல்லை மீனவர்கள்

முல்லைத்தீவு மார்ச் 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடல்வளம் சுறண்டப்படுகிறது. மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுடைய வளம் அது. தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவில் உள்ள அரச அதிகாரிகளின், அரசியல்வாதிகளின் அனுமதியுடன் எமது கடல்வளத்தைச் சுரண்டுகின்றனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பல வேறு கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. எனவே மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மீண்டும் ஒரு கடிதத்தினைஅனுப்பினர். அண்மையில்இடம் பெற்ற கரைதுறைப்பற்றுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னரே இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி அன்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் சார்பாக மாவட்ட கடற்றொழில் அமைப்பால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் மிக முக்கியமான விடயமாக தென்பகுதியில் இருந்து தொழிலுக்கு வரும் மீனவர்களின் வருகையினை தடைசெய்யுமாறுகோரப்பட்டது. அதற்கு குழுஒன்றினைதெரிவுசெய்துஇதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டது. ஆனால் இன்றுவரை ஒரு குழு தெரிவு செய்யப்படவுமில்லை நடவடிக்கைஎதுவும்எடுக்கப்படவும்இல்லை தற்போது தென்பகுதியில் இருந்து 50க்கு மேற்பட்ட படகுகள் வந்துள்ளன. மேலும் படகுகளின் வருகை தொடர்ந்தவண்ணமே உள்ளது. இன்னும் சில தினங்களில் நூற்றுக்கணக்கான படகுகள் வரும் சாத்தியம் உள்ளன.

கடந்த 12ஆம் திகதி அன்று கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எமது கோரிக்கைகள் பேச்சளவில் மட்டுமே தீர்க்கப்படுகின்றன. செயற்பாடுகள் மூலமோ நடவடிக்கைகள் மூலமோ எவையும் தீர்க்கப்படவில்லை. எமதுமீனவர்கள்நிம்மதியாக உழைத்து வாழவேண்டும். தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும். எமது கடல் வளத்தை சுரண்டிவேறு மாவட்டங்கள் அபிவிருத்தி அடைகின்றன. எமது சமூகம் பின்தள்ளப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளரிடம் அனுமதியற்ற படகுகளை வெளியேற்றுமாறு கூறியபோதும் அவர்கள் இந்த விடயக்கில் கவனம்செலுத்துவதாகதெரியவில்லை. முல்லைத்தீவு மாவட்ட மீனவ சமூகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகளை விரைந்து செயற்பட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. இந்த கடிதத்தின் பிரதிகள் மாவட்டச் செயலர், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (21)

மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையப் பணிகள் ஆமை வேகத்தில்

சாவ. நகரசபைக்குட்பட்ட பலரும் அதிருப்தி

சாவகச்சேரி, மார்ச் 23

ஆறு மாதங்களில் நிறைவுறும் என்று தெரிவிக்கப்பட்ட சாவகச்சேரி மலக்கழிவு சுத்திகரிப்பு இயந்திரத்துடன் கூடிய கட்டடப் பணிகள் இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதும் நிறைவு பெறவில்லை. இதனால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள், மருத்துவமனை உள்ளிட்ட அரசதிணைக்களநிறுவனங்கள் கடந்த மூன்று வருடங்களாகச் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களில் அகற்றப்படும் மலக்கழிவுகள் பொது இடங்களில்கொட்டப்படுவதால்பொது மக்களுக்குப் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படலாமென சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை செய்திருந்தனர். இதையடுத்து கடந்த 2016ஆம் அண்டு தென்மராட்சியில் சாவகச்சேரியிலும், வடமராட்சியில் கரவெட்டியிலும் மலக்கழிவுகளைச் சுத்திகரிப்பதற்கான இயந்திரத்தடன் கூடிய பெரும் கட்டடங்களின் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கட்டட வேலைகள் ஆறுமாத காலத்தில் முழுமையடையும் என்பதால் அதுவரையும் தற்காலிக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நகரசபை அறிவித்திருந்தது. கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன. இன்னமும் வேலைகள் முழுமை செய்யப்படவில்லை. இதனால் வரியிறுப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கட்டட வேலைகள் முழுமையடையாததால் பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட தமது காணியில் உள்ள மலகூடத்தைப் பயன்படுத்த அனுமதிப்பதில்லையெனவும், நகரசபைப் பகுதியில் இயற்கைக் கடன் கழிக்கக்கூடிய இடவசதிகள் இன்மையால் தமது பெண் பிள்ளைகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தினர் தெரிவித்தனர். சாவகச்சேரி பிரதேச சபையில் மலக்கழிவு சுத்திகரிப்புத் தாங்கி அமைக்கப்பட்டுள்ள போதிலும் அங்குள்ள இயந்திரம் பழுதடைந்தமையாலும் குறைந்தளவு கொள்ளளவு கொண்டதாங்கி என்பதால் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வந்த சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பிரதேச சபை மற்றும் நகரசபை ஆகியவற்றில் கழிவகற்றும் பவுசர்கள் உள்ள போதிலும் சேகரிக்கும் கழிவினைக் கொட்டுவதற்கான இடவசதியின்மையால் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மருத்துவமனைகள், படைமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றில் மாதம் ஒருதடவை கழிவகற்றல் செய்யப்படுகின்றது. எனினும் பொதுமக்களின் மலக்கூடக் கழிவுகளை அப்புறப்படுத்த சபைகள் பின்னடித்து வருகின்றனஎனபொதுமக்கள் குற்றஞ்சாட்டினர். 'கழிவகற்றல் தொடர்பாக சபையின் வரியிறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் எமக்கு முறைப்பாடுகள் தெரிவித்த வண்ணம் உள்ளனர். கட்டடப் பணிகள் முழுமை செய்யப்பட்டு கையளிக்கும் வரை திட்டத்தினை செயற்படுத்த முடியாமல் உள்ளது. இது தொடர்பாக பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து கடந்த வாரம் பொதுக் கணக்காய்வு அலுவலர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றனர்.

அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினரே முடிவு செய்வார்கள்" என்று சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (21-9)

வடக்கு ஆசிரிய ஆலோசகர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படக்கூடாது

கோரிக்கை முன்வைப்பு

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்களுக்கு வருடாந்த இடமாற்றம் கூடாது என்று மாகாண கல்வி அமைச்சருக்குவலியுறுத்தி உள்ளது வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் ஆனால் நேற்று வெளியான உதயன் செய்தியில் இடம்மாற்றம் வழங்க வேண்டும் என்பது தவறாக பிரசுரிக்கப்பட்டதாகசங்கம் சுட்டிக்காட்டியது. "ஆசிரியர் ஆலோசகர்களுக்கு சேவைப்பிராமாணக்குறிப்பு இல்லாத காரணத்தால் இடமாற்றத்தை வழங்க முடியாது. ஆனால் வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசியர் ஆலோசகர் ஒருவருக்கு சேவைப் பகிர்வு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதனை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி மாகாணக் கல்வி அமைச்சருக்கு கூறியுள்ளோம். இடம்மாற்றம் வழங்கப்பட வேண்டும் என்பது தவறாகும்" என்று சங்கம் தெரிவித்தது. (எ-7)

திருத்தம்

திருகோணமலை கோணேஸ்வரம் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நேற்றைய செய்தியில் தவறுதலாக இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றம் என்று பிரசுரமாகியுள்ளது.

புலிகளின் புதையல் உள்ளதாகக் கூறி

மீண்டும் மீண்டும் சிதைக்கப்படுகிறது மனிதப் படுகொலையின் அடையாளம்

முல்லைத்தீவு, மார்ச் 23

மனிதப் படுகொலையின் உச்சம் இடம்பெற்று பலரது உடலங்கள் புதைக்கப்பட்டு இன்று புதின இடமாகப் போற்றப்படும் முள்ளி வாய்க்கால் விடுதலைப் புலிகளுடைய தங்கம் புதைக்கப்பட்டுள்ளது என்ற பெயரில் மீண்டும் மீண்டும் கிழறித் தோண்டப்படுகிறது. நேற்றும் அங்கு பொலிஸாரால் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் உச்சம் முள்ளிவாய்க்காலிலேயே நிறைவு பெற்றிருந்தது. விடுதலைப்புலிகளுடைய இறுதிக்கட்டச் செயற்பாடுகள் அனைத்தும் அங்கேயே நிறைவு பெற்றிருந்தன.

ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும், விடுதலைப் புலிகளும் இறுதியில் முள்ளிவாய்க்கால் மண்ணி[illegible]னர். பலர் அங்கு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். படுகொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்களை உறவினர்கள் முள்ளி வாய்க்கால் மண்ணிலேயே புதைத்துவிட்டு படையிடம் சரணடைந்தனர். அப்போர்ப்பட்ட முள்ளி வாய்க்கால் போரின் பின்னர் புனித பிரதேசமாக உலகத் தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டது. இறந்தவர்களின் நினைவாக அங்கு நினைவுத் தூபிகளும் அமைக்கப்பட்டு நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளின் பயன்பாட்டில் இருந்தது என்று சந்தேகித்து தங்கம் புதைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டு முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம், அம்பலவான்பொக்கணை போன்ற பல பிரதேசங்களில் சிறப்பு அதிரடிப்படையினர், பொலிஸார், இராணுவத்தினர் தேடுதல்களை நடத்தியிருந்தனர்.

முதல் முறையாக கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முள்ளி வாய்க்காலில் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டது. முல்லைத்தீவு நீதிமன்ற அனுமதியுடன் அவர்கள் அங்கு அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். குறித்த பகுதியில் ஆழமாக குழி தோண்டப்பட்டு புதையல் தேடப்பட்டது. எனினும் குழியின் ஆழம் அதிகரிக்கவே அதில் நீர் வரத்து அதிகமானதால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

மீண்டும் பெப்ரவரி 5ஆம் திகதி இரண்டாவது தேடுதல் வேட்டை இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ். லெனின்குமார் முன்னிலையில் கனரக இயந்திரம் கொண்டு புதையல் தோண்டப்பட்டது. 4 மணி நேரத்துக்கு மேலாக தோண்டப்பட்டும் எதுவித பொருள்களும் கிடைக்கப் பெறவில்லை, சிறப்பு அதிரடிப்படையினருடைய முயற்சி தோல்வியில் முடிந்தது. எனினும் கடந்த புதன்கிழமை மூன்றாவது தடவையாக இடம்பெற்று நேற்று நான்காவது தடவையாகவும் அங்கு அகழ்வுகள் இடம்பெற்றன. முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதி குளம் போன்று வெட்டப்பட்டு தேடப்பட்டது. நேற்று மாலை வரை அங்கு எதுவும்

கிடைக்கப்படவில்லை. மண்ணின் கீழ் சுண்ணாம்புப் பாறைகளே உள்ளது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். (எ-21-26)



கொடி ஏறியது நேற்று மருதடி விநாயகருக்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 25 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.தமிழ் சிங்கள புத்தாண்டு தினமான ஏப்ரல் 14ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (எ-115)

வடமராட்சியில்

திருட்டு முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நால்வர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

வடமராட்சி, மார்ச் 23

பொதுமக்களால் பிடிக்கப் பட்ட ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தப்பியோடியவர்கள் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நேற்று பிடிக்கப்பட்டனர். இவர்கள் புத்தளம், வவுனியா மற்றும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களாவர்.

வடமராட்சி உடுப்பிட்டியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நால்வர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் வீடொன்றில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டபோது ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டார். மற்றைய மூவர் தப்பியோடினர்.

பொதுமக்களால் பிடிக்க ப்பட்ட ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஏனைய மூவரும் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் தப்பியோடியவர்கள் மூவரையும் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

நுணாவில் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து திருட்டு நடவடிக்கைக்குப் பயன்படுத்திய வடி ரக வாகனம் ஒன்றும், 12 சிறப்பு அலைபேசிகளும், 4சோடி கால் சலங்கைகள், வீட்டில் பணம் சேமிக்கும் உண்டியல்கள் நான்கு, ஒருதொகை கட்டார் நாட்டு பணம், மற்றும் 2 கமராக்களும் மீ ட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சாவகச்சேரியில் வைத்து கைது செய்யப்பட்டவர்கள் வல்லெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா வைத்திருந்தவர் கைது

பருத்தித்துறை,மார்ச்.23

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே பருத்தித்துறை பத்திரகாளியம்மன் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 100 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. பொலிஸ் உத்தியோகத்தர் ரமணனுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவர் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்னி லைப்படுத்தப் பட்டபோது சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ரி2-26)

வடக்கு மருத்துவமனைகளில் போதுமான விடுதி வசதிகள் இல்லாததால்

இடமாற்றலாகிச் செல்லும் தென்பகுதி தாதியர்கள்

சாவகச்சேரி, மார்ச் 23

வடக்குக்கு நியமனம் பெற்று வருகின்ற தென்பகுதியைச் சேர்ந்த மருத்துவர்கள், தாதியர்கள், துணை மருத்துவ சேவை அலுவலாகள் தமது கட்டாய சேவைக்காலத்தில் வடக்கு மாகாணத்தில் பணியாற்றக் கூடிய விருப்பம் இருந்தும் வதிவிடப் பிரச்சினையைக் காரணம் காட்டி இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

அவர்களுக்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் அதாவது உச்சக்கட்டப் போர்க் காலத்துக்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் உள்ள முதன்மை வைத்தியசாலைகளில் தாதிய அலுவலர்களுக்கு தனியான வதிவிட விடுதி வசதிகள் இருந்தன. எனினும் அப்போது மருத்துவமனையில் கடமையாற்றிய தாதிய அலுவலர்கள் அனைவரும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் வதிவிட விடுதிகளின் தேவை காணப்படவில்லை.

அந்தக் கட்டடங்களில் பலர் போரால் அழிவடைந்தனர். தற்போது தாதிய பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது தமிழ் மொழி தெரிந்தவர்கள் விண்ணப்பிக்காததால், தென்பகுதியில் தாதிய பயிற்சி பெற்றவர்கள் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மருத்துவமனைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு கடமையாற்றி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களுடன் சுகாதாரத்திணைக்களத்தில் உள்ள துணை நிலை மருத்துவ சேவையைச் சேர்ந்த அலுவலர்களும் தென்பகுதியைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

அவ்வாறு இங்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு இங்கு தங்கி நின்று சேவை செய்யக் கூடிய தனியான வதிவிட விடுதி வசதிகள் பெரும்பாலான இடங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனாலேயே அவர்கள் இங்கு பணிபுரிவதற்கு விருப்பம் இருந்தும் தவிர்க்க முடியாது இடமாற்றலாக்கிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பகுதி முதன்மை வைத்தியசாலையான சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் தாதிய அலுவலர்களுக்கான வதிவிட வசதிகள் இல்லாததால் தாதிய அலுவலர்கள் தனியான விடுதிகளில் தங்க வைக்கப்பட்டனர்.

அலுவலர்கள் வெளியில் தங்குவதற்குச் சுகாதாரத் திணைக்க எத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மொழி மற்றும் பாதுகாப்பு தொடர்பான அச்சம் காரணமாக அவர்கள் வெளியில் தங்காது விடுதிகளில் உள்ள அறைகளில் தங்கியுள்ளனர் என வும் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் கட்டடங்கள் அமைக்கக்கூடிய இடவசதி காணப்படுகின்ற போதிலும் அவற்றினை அமைப்பதற்கு நிதி கிடைப்பதில்லை என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கிறது. மருத்துவமனை வளாகத்தில் நோயாளர் சேவைக்கான விடுதிகள் மேலதிகமாக அமைக்கப்பட்டு வரும் நிலையில் தாதிய அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. அந்த வேளையில் தாதிய அலுவலர்களுக்கான வதிவிட வசதி கிடைக்காமல் போனால் நோயாளர்களுக்கான சேவைகளை வழங்க மருத்துவமனை நிர்வாகம் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வருமெனவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சாவகச்சேரி மருத்துவமனை நிர்வாகத்தினர் இணைத் தலைமைக்கு விரிவாக எடுத்துக் கூறியிருந்தனர். நடுவண் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி சிறப்பு நிதிகளைப் பெற்று அலுவலர்களுக்கான வதிவிட விடுதிகள் வசதிகள் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும் என்று இணைத்தலைவர்களால் தெரிவிக்கப் பட்டிருந்தது. (21-9)

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,மார்ச் 23
தலவாக்கலை பெரிய மட்டுக்கலை தோட்டத்தொழிலாளர்கள் தோட்ட தொழிற் சாலைக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.
தோட்ட நிர்வாகம் பாரபட்சமாக நடக்கிறது என்று தெரிவித்தே அவர்கள் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த மாதம் 16 ஆம் திகதி கள உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொழிலாளர் ஒருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இருவருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியதுடன் இருவருக்கும் மீண்டும் தொழில்வாய்ப்பை வழங்க வேண்டும் என்று தோட்ட நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியிருந்தனர்.
களஉத்தியோகத்தருக்கு மட்டும் தொழில் வாய்ப்பை வழங்கியுள்ள தோட்ட நிர்வாகம் தொழிலாளிக்கு தொழில்வாய்ப்பை வழங்க மறுத்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
தொழிலாளிக்கு உடன் தொழில் வாய்ப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ற-ரி4)

நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு,மார்ச் 23
பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் நேற்றுத் தொடக்கம் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.
கொடுப்பனவுகள் உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
தமது பிரச்சினை தொடர்பான அமைச்சர் உறுதியளித்ததை போன்று சாதகமான பதில் இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லையென பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார்.
15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி4)

முன்னர் விதைத்த இனவாதமே தற்போது அழிவைத் தருகிறது

அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 23
நாட்டில் தூவப்பட்ட இனவாத விதை வளர்ந்து விருட்சமாகி அழிவுக்கான விளைச்சலைத் தந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

சமகாலத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுவதன் அவசியம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இனவாத செயற்பாடுகளுக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று கூறி நல்லவர்களைப் போல நடிக்கும் பொது பல சேனா உறுப்பினர்களே நாட்டில் இனவாத நச்சு விதையை விதைத்தவர்கள்.
இந்த நாட்டிலே வாழ்கின்ற சகல மக்களுக்கும் நாடு சொந்தமானது என்பதை தெளிவாக கூறிக்கொள்கின்றேன். இந்த நாட்டிலே உள்ள சட்டம் அனைத்து இன மக்களுக்கும் சமமாக இருக்க வேண்டும்.
நாட்டில் சகல இனமக்களும் ஒற்றுமையோடு அச்சமின்றி வாழ முடியும் என்ற உறுதிமொழியை கூட்டரசு ஆட்சிக்கு வந்தபோது கூறியது.
ஆனால் கூட்டரசின் காலத்திலும் நாட்டில் பல்வேறு இடங்களில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.
நாட்டில் சிங்களவர்களைப் போன்றே தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏனைய சிறுபான்மை யினருக்கும் உரிமை உள்ளது. அந்த உரிமைகள் பாதுகாக்கப்பட்டு சகல இன மக்களும் சுதந்திர மாக வாழும் சூழலை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.
(ற-ரி4)

பிரசன்ன பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு,மார்ச் 23
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இவரை நேற்றுப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இவர் நபர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் (ற-ரி4)

குச்சவெளி பிரதேசங்களுக்கான குடி நீர் பௌசர் நேற்று வழங்கப்பட்டது. முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை தொகுதி அமைப்பாளருமான ஆர்.எம். அன்வரின் வேண்டுகோளின் அடிப்படையில் நீர் வழங்கல் நகர திட்டமிடல் அமைச்சர் ரவூப் ஹக்கீமால் இவை வழங்கப்பட்டன. (ற-ரி4,40)

மீன்பிடிப் படகு தீக்கிரை

கொழும்பு,மார்ச் 23
திக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மீன்பிடி படகு தீப்பற்றி எரிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.
வர்த்தகர் ஒருவரால் மீன்பிடி அமைச்சுக்கு மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட படகே முதலாவது பயணத்தை ஆரம்பித்த போது தீப்பற்றி எரிந்துள்ளது.
60 அடி நீளமான அந்தப் படகின் பெறுமதி 30 மில்லியன் ரூபா என்று கூறப்பட்டது. அதில் பயணித்த மீனவர்கள் மற்றுமொரு படகில் சென்ற மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர் எனக் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

கடமைகளைப் பொறுப்பேற்றார் முதல்வர் ரோஸி சேனாநாயக்க

கொழும்பு,மார்ச் 23
கொழும்பு மாநகர சபையின் முதலாவது பெண் முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்ட ரோஸி சேனாநாயக்க தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
மத வழிபாடுகளைத் தொடர்ந்து நேற்றுத் தனது கடமைகளை பொறுப்பேற்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ரோஸி சேனாநாயக்க கடந்த திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் கொழும்பு மாநகர சபை முதல்வராகச் சத்தியபிரமாணம் செய்துக் கொண்டார்.
(ற-ரி4)

பதுளை வானூர்தி நிலைய கட்டுமானம் தாமதமாகும்

அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

பதுளை,மார்ச் 23
பதுளையில் அமைக்கப்படவுள்ள உள்ளூர் வானூர்தி நிலையக் கட்டுமானங்கள் ஆரம்பிப்பதற்குக் காலதாமதமாகும் என்று விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.
பதுளை மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் பதுளை அஞ்சல் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
பண்டாரவளைப் பகுதியின் பிரொட்டன் தோட்டத்தின் தொழிலாளர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக அனுமதி கிடைக்கும் வரை அந்த வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.
பதுளை மாவட்டத்துக்கும் நுவரெலியா மாவட்டத்துக்குமான எல்லைகள் நிர்ணயம் செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளருக்கும் உத்தியோகப்பூர்வ கடிதமொன்றை அனுப்புவன் ஊடாக இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது என்றும் பதுளை மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.
இந்தக் கூட்டத்தில் பதுளை மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் தீர்ப்பது தொடர்பான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.
இதில் ஊவா மாகாண சபை அமைச்சர்கள் மாகாண அரசியல் தலைவர்கள் அரச திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் உயர் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
(ற-ரி4)

வாகன விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி,மார்ச் 23
நுணாவிலில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.
வாகனத்திலிருந்து இறங்கிய சாரதியை அதே திசையிலிருந்து வந்த மற்றொரு வாகனம் மோதியதியுள்ளது.
இதில் காயமடைந்த சாரதி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.
(ற-ரி4,9)

நுவரெலியா லயன்ஸ் கழகத்தின் 52 ஆவது வருட நிறைவை முன்னிட்டு நிகழ்வுகள் நேற்று நடைபெற்றது. இதில் நகர ஊர்வலம் ஒன்று கழகத்தின் தலைவர் ஆர். குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. (ற-ரி4)

பாலியல் தொழிலுக்கு கட்டாயப்படுத்தப்படும் ரொஹிங்ய சிறுமிகள்

நைபிட்டோ, மார்ச் 23

மியன்மாரில்இருந்துபங்களாதேஷ்க்குச்சென்றுஅங்கு தஞ்சமடைந்துள்ள ரொஹிங்யச் சிறுமிகள் வலுக்கட்டாயமாக பாலியல் தொழிலுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றுபன்னாட்டுச்செய்திநிறுவனமொன்றுதெரிவித்தது. மியன்மார் அரசின் இனச்சுத்திகரிப்பை அடுத்து சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷ்க்குள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களில் தமது பெற்றோரை இழந்து தனித்து வாழும் நூற்றுக் கணக்கான சிறுமிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அகதிகள் முகாமில் வெளிப்படையாகவே முகவர்கள் செயற்பட்டு வருகின்றனர். சிலசிறுமியர்கள் குடும்பத்தின் வறுமை காரணமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அந்தச் செய்தி நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

கவுட்டா பெருநகரில் இருந்து

சிரிய கிளர்ச்சிக்குழு வெளியேற ஒப்புதல்

டமஸ்கஸ், மார்ச் 23

சிரியாவின் கவுட்டா நகரில் இருந்து வெளியேறுவதற்கு சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழு ஒப்புதல் வழங்கியது.

சிரியாவில் ஷியா பிரிவைச் சேர்ந்த அதிபர் அசாத்தின் அரச படைக்கும் சன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே 6 ஆண்டுகளுக்கும்மேலாகஉள்நாட்டுப்போர் நடைபெறுகிறது. அதிபர் அசாத்துக்கு ரஷ்யாவும் ஈரானும் கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்காவும் துருக்கியும் ஆதரவு அளிக்கின்றன.

அசாத்துக்குஆதரவாகரஷ்யவானூர்திப் படை சிரியாவில் முகாமிட்டுப் போரில் ஈடுபட்டு வருகிறது. இதன் காரணமாக அண்மைக் காலமாக அசாத்தின் கை ஓங்கி வருகிறது. சுமார் 70 சதவீத பகுதி அரசகட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

தற்போது கிளர்ச்சிப்படையின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு கவுட்டா பகுதியில்அதிபர்அசாத்படைகள்கடந்தசில வாரங்களாகத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

தொடர்ந்து கவுட்டாவில் அரச படைகள் தாக்குதலில்முன்னேறிவருகின்றன. இதையடுத்துஉள்நாட்டுப்போர் நடக்கும் கவுட்டா பகுதியிலிருந்து வெளியேறக் கிளர்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். (ம)

பிரிட்டனின் நடவடிக்கைக்கு பதிலடி கட்டாயம் இருக்கு

ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சர் லாரெவ் இப்படிச் சொல்கிறார்

மொஸ்கோ, மார்ச் 23

"உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட விவகாரத்தில் பிரிட்டன் என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதற்குப் பதிலடி கொடுக்கப்படும்" என்று தெரிவித்தார் ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் லாரெவ்.

ரஷ்யாவின் இராணுவ உளவுப்பிரிவில்பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்போல். இவர் சில ரஷ்ய உளவாளிகளை பிரிட்டன் உளவுத்துறையிடம்காட்டிக்கொடுத்தார்என்று 2004ஆம் ஆண்டு ரஷ்யாவால் கைதுசெய்யப்பட்டு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். அவரை 2010ஆம் ஆண்டு மீட்டு அடைக்கலம் கொடுத்தது பிரிட்டன். கடந்த 4ஆம் திகதி 33 வயதான தனது மகள் யூலியானாவுடன் மயங்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டார். மருத்துவ பரிசோதனையில் ஸ்கிர்போலின் உடலிலும் அவரின் மகளது உடலிலும் விசம் செலுத்

தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன்பின்னணியில் ரஷ்யாவே உள்ளது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது பிரிட்டன். இதையடுத்துரஷ்யத்தூதரகத்தின்23 அதிகாரிகளை பிரிட்டனை விட்டு வெளியேற்றியது. பதிலுக்கு 23 பிரிட்டன்அதிகாரிகளையும்ரஷ்யாவெளியேற்றியது. இந்தப் பின்னணியில் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் லாரெவ். "உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்டவிவகாரத்தில் ரஷ்யாவுக்குஎதிராகபிரிட்டன் எடுக்கும் அத்தனை நகர்வுகளுக்கும்பதிலடிகொடுப்போம்" என்று லாரெவ் மேலும் தெரிவித்தார். (ம)

ஜெருசலேமில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த 'அவலத்தின் சுவர்' (அழுகையின் சுவர் என்றும் அழைக்கப்படுவதுண்டு) தற்போது மீண்டும்புனரமைக்கப்படுகிறது. ஜெருசலேம்செல்லும்மக்கள் இந்தச் சுவருக்கும் சென்று சுவரில் தமது கைகளை வைத்து தத்தமது மனப் பாரங்களைசொல்லிஅழுவார்கள். இதனால்இந்தச்சுவர்அழுகையின் சுவர் என்று அழைக்கபடுகிறது. தமது மன்றாட்டங்களை எழுதி சுவரின் இடைவெளிகளுக்குள்போட்டுவிட்டுச்செல்வார்கள். அவைஅவ்வபோது துப்புரவு செய்யப்படுவண்டு. (ம)

உலகின் கடைசி வெள்ளை ஆண் காண்டாமிருகம் நேற்று முன்தினம் உயிரிழந்த நிலையில், எஞ்சியிருக்கும் இரண்டு வெள்ளை பெண் காண்டாமிருகங்களின் ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

சிரிய அணுவுலையை நாங்களே தகர்த்தோம்

இஸ்ரேல் ஒப்புதல்

டெல்அவிவ், மார்ச் 23

சிரியாவின் அணுவுலையை கடந்த 2007ஆம் ஆண்டு குண்டு வீசி தகர்த்தது நாங்களே என்று இஸ்ரேல் நேற்று முன்தினம் ஒப்புக்கொண்டது.

சிரியாவின் டமஸ்கஸில் இருந்து 450 கிலோமீற்றர் தொலைவில் டெர் அஸோல் என்ற இடத்தில் அணுவுலையொன்றை அமைத்திருந்தது சிரியா. இந்த அணுவுலை பயன்பாட்டுக்கு வருவதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்னர் அதாவது 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி இரண்டு போர் வானூர்திகளின் குண்டு வீச்சை அடுத்து அந்த அணுவுலை தரைமட்டமானது. இதை இஸ்ரேலே செய்தது என்று சிரியா குற்றம் சுமத்தியது. இந்தத் தாக்குதல் தம்மால் நடத்தப்பட்டது என்று நேற்று முன்தினம் ஒப்புக்கொண்டது இஸ்ரேல். (ம)

கிம் ஜோங் உன் – ட்ரம்ப் சந்திப்பில் இடம்பெற தென்கொரியா விருப்பம்

அதிபர் மூன் ஜெ இன் கோரிக்கை

பியாங்யாங், மார்ச் 23

"அமெரிக்கா - வடகொரியா இடையில் நடைபெறவுள்ள இருதரப்புப் பேச்சில் எம்மையும் இணைத்து முத்தரப்புப் பேச்சாக அது இடம்பெற வேண்டும்" என்று விருப்பம் தெரிவித்தார் தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன்.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறிய ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை மேற்கொண்டு உலக நாடுகளின் எதிர்ப்பையும் பொருளாதாரத் தடைகளையும் வாங்கிக்குவித்திருந்தது வடகொரியா. எனினும் அந்த நாடு தனது பரம வைரியான தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டது. இதையடுத்து வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டது. முன்னைய பகைமைகளை மறந்து தென்கொரியாவுடன் இணைந்து செயற்படத் தயார் என்ற அறிவித்தார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். அமெரிக்காவுடன் இணைந்து செயற்படவும் அவர் சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான பேச்சு விரைவில் நடைபெறவுள்ளது. அமெரிக்காவிலோ அல்லது வடகொரியாவிலோ அல்லாமல் பொது இடத்தில் இந்தப் பேச்சு நடைபெறவுள்ளது.

இவ்வாறிருந்த அமெரிக்கா - வடகொரியா இடையிலான பேச்சில் தாமும் இணைக்கப்பட வேண்டும் என்று தென்கொரியா கோரிக்கை வைத்துள்ளது. ஜப்பானும் விரைவில் இவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

சிரியாவில் தாக்குதல்; 44 அப்பாவிகள் உயிரிழப்பு

டமஸ்கஸ், மார்ச் 23

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44ஆக அதிகரித்தது.

டமஸ்கஸில் உள்ள சந்தைப் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. சிரிய இராணுவச் சிப்பாய்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனினும் சிப்பாய்களை விடவும் பொதுமக்களே அதிகமானோர் உயிரிழந்தனர். இதன் படி 11 சிப்பாய்களும், 33 பொதுமக்களும் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களை விட மேலும் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

காப்புறுதி துறையில் உலகப் புகழ்பெற்ற
அலியான்ஸ்
காப்புறுதி நிறுவனம்

வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பொது காப்புறுதி நிறுவனத்தை
தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது

வாகன, சொத்து மற்றும் இடர் காப்புறுதிகளில் உலகின் முதல்தர நிறுவனமான அலியான்ஸ் காப்புறுதி நிறுவனம், 128 வருடகால பெருமைமிக்க வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ள நிறுவனமாகும். இந்நிறுவனம் உலகம் முழுவதுமுள்ள 70 நாடுகளில் 88 மில்லியனுக்கும் அதிகமான தனியார் மற்றும் நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களுக்கான சேவையினை வழங்கி வருகின்றது.

காப்புறுதி துறையில் மற்றுமோர் வரலாற்று சிறப்புமிக்க திருப்புமுனையாக 2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ம் திகதி வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பொது காப்புறுதி நிறுவனத்தை நாம் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

இத்தருணத்தில் அனைத்து ஜனசக்தி வாடிக்கையாளர்களையும் அலியான்ஸ் குடும்பத்திற்கு வரவேற்கின்றோம். வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பொது காப்புறுதி நிறுவத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படும் அனைத்து காப்பீடுகளும் கேள்விமனுக்களும் செல்லுபடியாகும். அதேபோல் காப்பீடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகள் குறித்த அனைத்து பொறுப்புக்களும் எம்மிடம் உள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

Allianz
Insurance Solutions from A-Z

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

தமிழ் மொழியால் பெருமை கொள்வோம்

தமிழ் 4,500 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தது என்று மிகப் பிந்திய ஆய்வில் உறுதியாகக் கண்டறியப் பட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவு தமிழை மட்டுமல்ல திராவிடக்குடும்ப மொழிகள் என்று சொல்லப்படும் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட 80 வகை மொழிகளும் அதேயளவுக்கு பழைமை மிக்கவை என்று கண்டறிந்துள்ளது.

இந்த ஆய்வு முடிவுகள் 'ரோயல் சொசைட்டி ஓபின் சயன்ஸ்' என்ற அறிவியல் சஞ்சிகையில் புதனன்று வெளியிடப்பட்டுள்ளன. புதிய வழிவகைகளில் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு முடிவுகள் ஏற்கனவே கணிக்கப்பட்ட முடிவுகளுடன் பெரிதும் ஒத்துப் போகின்றன. இதன் மூலம் தமிழின் தொன்மை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியிருக்கின்றது.

திராவிட மொழிக் குடும்பங்களின் ஏனைய மொழிகள் அனைத்துமே தமிழில் இருந்தே கிளைத்தெழுந்தன என்கிற எண்ணக்கருவும் ஏற்கனவே உள்ள நிலையில் தமிழின் தொன்மை இன்னும் அதிகமான காலமாக இருக்கலாம் என்பதும் வருங்காலங்களில் அறிவுபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படலாம். தமிழின் தொன்மை 13 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது என்கிற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டாலும் பல்வேறு வழிமுறை ஊடான ஆய்வுகள் ஊடாகத் தங்களால் இந்த 4,500 ஆண்டுகள் தொன்மையையே திராவிட மொழிக் குடும்பத்தில் இப்போதைக்குக் கண்டறிய முடிந்துள்ளதாக இந்த ஆய்வை நடத்திய ஜேர்மனி நாட்டிலுள்ள மக்ஸ் பிளங்கற்கை நிலைய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மனித வரலாற்றின் அறிவியல் தொடர்பில் ஆய்வுகளில் ஈடுபடுகின்றது இந்த நிறுவனம்.

ஆய்வாளர்களால் ஏற்கனவே திராவிட மொழிகள் என்று வகைப்படுத்தப்பட்டவற்றில் இருந்து பெறப்பட்ட முதல் தர தரவுகளில் இருந்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கில் ஆப்கானிஸ்தான் கிழக்கில் பங்களாதேஷ் நாடுகளின் எல்லைக்குள் வரும் தெற்காசிய நாடுகளில் சுமார் 600 மொழிகள் பேசப்படுகின்றன. இவை அனைத்தும் 6 முக்கிய மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தன என்று அறிவாளர்களால் வகுக்கப்பட்டுள்ளன. திராவிடம், இந்தோ ஆரியம், சீனோ திபெத்தியம் ஆகியன அவற்றுள் முக்கியமானவை. திராவிட மொழிகளை 22 கோடிப் பேர் பேசுகின்றார்கள்.

திராவிட மொழிகளைப் பற்றிய ஆய்வுகள் யுரோ ஏசியாவின் (ஐரோப்பா மற்றும் ஆசியக் கண்டங்களை ஒன்றிணைத்த பகுதி) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை ஆய்வு செய்வதற்கு முக்கியமானது என்று இந்த ஆய்வை நடத்திய அறிவாளர்கள் கூறுகின்றனர். திராவிட மொழிகள் இப்போது உள்ளதைவிட பரந்துபட்ட பகுதிகளிலும் பரந்துபட்ட அளவிலும் பேசப்பட்டதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்தனை பெருமைக்கும் பழைமைக்கும் உரிய தமிழைப் பேசும் தமிழர்களாகிய நாம் ஆங்கில மோகத்துக்குள் மூழ்கிப் போயிருப்பதும் அந்த மோகத்தில் நம்மையும் தமிழமையும் தொலைப்பதும் எவ்வளவு பெரிய சோகம்?

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று முழக்கமிட்ட முன்னோர்களின் வழியில் வந்தவர்களாக இருந்தாலும் வீழ்வது தமிழாக இருந்தாலும் வாழ்ந்தது நாமாக இருந்தால் போதும் என்கிற மாதிரி வாழத் தலைப்பட்டுள்ளோம் நாம். பெயர்ப் பலகைகளில் இருந்து எதிலும் தமிழை மறந்து ஆங்கிலத்தின் பின்னால் செல்லும் மோகம் இனியாவது மறைந்து போகட்டும்.

பெருமை மிகு தமிழைப் பேசுவதுடன் தமிழர்களாக வாழ்வதிலும் பெருமை கொள்வோம். அதற்காக உழைப்போம்.

இந்துமதி

நிராகரிக்கப்பட முடியாதவை சம்பந்தனின் கருத்துக்கள்

ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள், தமக்கான உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கு உரித்துடையவர்கள். அவர்களது அத்தகைய கோரிக்கை நிராகரிக்கப்படுமாயின், வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரும் உரித்து அவர்களுக்கு உண்டு என்று கருத்து வெளியிட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன். பழுத்த அரசியல்வாதி என்றவகையில் அவரது மேற்குறித்த கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கை தனது 70 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடியிருக்கின்றது. அந்நியர்கள் சுமார் 443 ஆண்டுகள் இங்கு தங்கியிருந்து தமது ஆட்சியை நிலை நிறுத்தியிருந்தனர். இவர்கள் தமது மதமான கிறிஸ்தவமதத்தை இங்குள்ள மக்களிடம் திணிப்பதில் அக்கறை காட்டியுள்ளனர். இதனால் இங்குள்ள ஏராளமான மக்கள் தாம் பாரம்பரியமாகப் பின்பற்றி வந்த தமது மதங்களைத் துறந்து, மாற்று மதத்தைத் தழுவிக் கொண்டனர். அந்நியர்கள் நாட்டின் பொது மக்களது கல்விக்கும், சுகாதாரத்துக்கும் முக்கியத்துவம் வழங்கினர். பெரும் பொருள் செலவில் மருத்துவமனைகளும், கல்விக்கூடங்களும் அவர்களால் அமைக்கப்பட்டன.

தனித்து இயங்கிய தமிழினம் அந்நியர்களால் ஒன்றிணைக்கப்பட்டது

அந்நியரின் வருகைக்கு முன்னர் தமிழர்களுக்கெனத் தனியான அரசுகள் அமைந்திருந்தன. தமக்கெனத் தனியான பிரதேசங்களையும் தமிழர்கள் கொண்டிருந்தனர். ஆனால் அந்நியர்கள் தாம் ஆட்சி செய்வதற்கு வசதியாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் ஒன்றிணைத்துக் கொண்டனர். இதுவே தமிழர்கள் பேரினவாதிகளிடம் அடிமைப்படுவதற்குக் காரணமாகிவிட்டது. அந்நியரின் ஆட்சிக்காலத்தில் பெரும் பான்மை, சிறுபான்மை என்ற பேதங்கள் காண்பிக்கப்படவில்லை. எந்த இனமாக இருந்தாலும் திறமைசாலிகளையே அவர்கள் தமது நிர்வாகப் பணிகளில் இணைத்துக்கொண்டனர். அந்தவகையில் தமிழர்கள் முன்னிலை பெற்றுத் திகழ்ந்தனர். பெரும் பான்மையித்தவர்களுக்கு இதுஎரிச்சலை ஏற்படுத்தியது. சந்தர்ப்பம் கிடைக்கும்வரையில் அவர்கள் காத்திருக்கவும் செய்தனர்.

சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் புறக்கணிப்பு

நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர், நடந்த அரசியல் செயற்பாடுகள தமிழருக்கு எதிரானவையாகவே இருந்தன. அவர்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. அவர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த அவர்களது பூர்வீக நிலங்கள் திட்டமிடப் பட்டவகையில் பறித்தெடுக்கப் பட்டன. மொழி உரிமையும் பறிக்கப்பட்டது. அதற்காக நீண்ட போராட்டங்கள் இடம் பெற்றன. வன்செயல்களால் தமிழர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். அடுத்தடுத்து இடம்பெற்ற இன வன்செயல்களும், நீண்டகாலமாகத் தொடர்ந்த போரும் அவர்களைச் சின்னாபின்னமாக்கிவிட்டன. இன்று அனைவராலும் கைவிடப்பட்ட நிலையிலேயே ஈழத் தமிழ் மக்கள் வாழநேர்ந்துள்ளது. பன்னாட்டுச் சமூகமும் கூட அவர்களைக் கைவிட்டுள்ளதாகவே கருத முடிகின்றது.

இந்த நிலையில், சம்பந்தனின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தந்தை செல்வாசுயநிர்ணய உரிமையுடன் கூடியகூட்டாட்சி எனப்படுகின்ற சமஷ்டி ஆட்சி முறை என்ற நிலைப்பாட்டிலேயே தமது இறுதிக் காலம்வரை உறுதியாக நின்றார். அவர் தனிநாட்டுக் கோரிக்கையை ஒருபோதுமே முன்வைத்ததில்லை.

புதிய அரச்மைப்பு முயற்சி கூட கிடப்பில் போடப்பட்டுவிட்டது

ஆனால் தந்தை செல்வா இன்று உயிருடன் இருந்திருந்தால், தமிழர்களுக்கெனத் தனியான தொரு நாட்டை கோரியிருக்கவும் வாய்ப்புள்ளது. அந்த அளவுக்கு தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றனர். புதிய அரசமைப்பின் ஊடாகவேனும் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமெனத் தமிழ் மக்கள் நம்பிக்கொண்டிருந்தனர். அரசும் இந்த விடயத்தில் தான் அக்கறை காட்டுவதாகக் காட்டிக் கொண்டது. ஆனால் மகாசங்கத்தினர் உட்பட சிங்கள இனவாதிகள் அரசமைப்பின் புதிய உருவாக்கத்தை மூர்க்கத்தனமான முறையில் எதிர்த்தனர். புதிய அரசமைப்பின் உருவாக்கம் தமிழர்கள் தனிநாடு அமைப்பதற்கான ஒரு திறவுகோல் என மகிந்த தரப்பினர் கூறிப் பெரும்பான்மையின மக்களின் மனங்களைக் குழப்பினர். இதனால் புதிய அரசமைப்பின் உருவாக்கம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. அதன் உருவாக்கம் தொடர்பாகப் பேசுவதால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என ஒரு காலத்தில் கூறப்பட்டது.



ஆனால் இன்றோ தமிழர்களின் தாயக பூமி துண்டாடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. தமிழர் பிரதேசங்களில் குடியேற்றங்கள் இடம்பெறுகின்ற வேகத்தைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் தமிழர் தாயகமென ஒன்று இருக்குமா? என்ற சந்தேகமே எழுந்து நிற்கின்றது. மொழியும் நிலமும் ஒரு இனத்தின் இரு கண்களாகும். இவற்றைப் பறித்தெடுத்துவிட்டால் அந்த இனம் ஊனமாக்கப்பட்டுவிடும். இதுதான் இன்று இந்த நாட்டில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

எந்த அரசு இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களின் தலைவிதியில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. அவர்களின் துயரங்கள் தொடரத் தான்போகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது சம்பந்தனிக்கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்தாகவும் அதனைக் கொள்ள வேண்டியுள்ளது.

மக்களின் நலன்களைப் பேணுமா புதிய உள்ளூராட்சி நிர்வாகங்கள்?

சேரலாதன்

உள்ளூராட்சிமன்றங்களின்நிர்வாகம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படும் போதுதான், பல்வேறு எதிர்பார்ப்புகளுடன்வாக்களித்தமக்களுக்கு அவர்களால் சிறந்த சேவையை வழங்கமுடியும்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் சுமார் 60 வீதமான மக்களே வாக்களித்துள்ளனர். 40 வீதமானவர்கள் வாக்களிக்கவில்லை. தேர்தல்களில் மக்கள் கடும் அக்கறை காட்டுவதில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இதற்காக வாக்களிப்பதன் முக்கியத்தவம் தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும். அரசின்சார்பில்இதற்கானவேலைத்திட்டங்களை ஆரம்பிக்க முடியும். அத்துடன் தேர்தல் நடைமுறைகளில் அடிக்கடி மாற்றத்தை ஏற்படுத்தக்கூடாது

அதிகூடிய விகித வாக்களிப்பு, ஜனநாயக நடைமுறையைப் பலப்படுத்தும்

தேர்தல்களில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்கும் போதுதான் அவற்றுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கின்றது. ஜனநாயகமும் நிலைநாட்டப்படுகின்றது. தேர்தல்கள்நீதியாகவும், அமைதியாகவும் இடம் பெறுவது அவசியமானது.

எமதுநாட்டைப்பொறுத்தவரையில், தேர்தல் முறைகளில் அடிக்கடி மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றன. ஆரம்பத்தில் தொகுதி மற்றும் வட்டார அடிப்படையில் தேர்தல்கள் இடம் பெற்றன. இதனால்தாம்விரும்பியஒருவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு வாக்காளர்களுக்கு கிட்டியது. இந்த முறைமையால்சிறியகட்சிகளுக்குப்பாதிப்புஏற்பட்டது. பெரிய கட்சிகளுடன் நேரடியாக மோதி வெற்றியோ முடியாத நிலைக்கு இவை தள்ளப்பட்டன. இதைப்போக்கும்வகையிலேயே விகிதாசாரத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் விருப்பு வாக்கைச் செலுத்துகின்ற முறைமை வாக்காளரிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது. அதனால் வாக்களிப்பின் போது அதிக தவறுகளும் ஏற்பட்டன. இதனால்வாக்களிக்கப்பட்டவாக்குச்சீட்டுக்களில் பல செல்லுபடியற்றதாகின. அதுமட்டு மல்லாது ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், வாக்காளர்களது ஆதரவைத் தமக்காக பெறும் பொருட்டுத்தமக்குள் மோதிக்கொண்டனர்.

இறுதியாக இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் கலப்புத், தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதில்60வீதமான உறுப்பினர்கள்வட்டாரஅடிப்படையிலும், 40 வீதமானவர்கள்விகிதாசாரஅடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டனர். இதிலும்குழறுபடிகள் இருக்கத்தான் செய்தன. இதன் காரணமாகவேஅநேகமானஉள்ளூராட்சிச்சபைகளில் எந்தவொருகட்சியினாலும்தனித்துஆட்சியமைக்க முடியாத நிலையொன்று உருவானது.

இதனால்மக்கள்பெரும்ஏமாற்றத்துக்குஉள்ளாக நேர்ந்தது. அரசியல் கட்சிகள் செய்வதறியாத நிலைக்கு உள்ளானதைக் காணமுடிந்தது. இதன் காரணமாகவே, அடுத்து இடம் பெறப்போகும் மாகாணசபைத் தேர்தலைபழையமுறையின்கீழ்நடத்துமாறான கோரிக்கைகள் எழுந்துள்ளன.

தேர்தலில் தெரிவான உறுப்பினர்கள் பொறுப்புணர்ந்து சேவையாற்ற வேண்டும்

இதேவேளைமக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும் போதுதான், அவர்களால் தமது மக்களுக்கான சேவையைத்திறம்பட ஆற்றமுடியும். அத்துடன் புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள உள்ளூராட்சிமன்றநிர்வாகங்கள், பலமுக்கியமான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டிலும் உள்ளன. மகிந்த ஆட்சியில் கட்டாக்காலிகளாகஅலைந்துதிரிகின்றநாய்களைப்பிடித்துஅழிப்பதற்குத்தடைவிதிக்கப்பட்டது. இதனால் கட்டாக்காலிகளாகத் திரிகின்றநாய்கள்பல்கிப்பெருகிவிட்டன. இவை மக்களுக்குசிரமங்களையும்கெடுதல்களையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்தக் கட்டாக்காலி நாய்களில் பல விசர்த் தொற்று நோய்க்கு உள்ளாகி பொதுமக்களைக்கடித்துக்காயப்படுத்தி பலரது உயிரிழப்புக்கும் காரணமாகியுள்ளன. வீதிகள், சந்தைகள் மற்றும் பொது இடங்களை இவை அசிங்கப்படுத்தி வருகின்றன. இவை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கு ஒரே வழி இந்த நாய்களைப் பிடித்து அழித்து விடுவதுதான். ஏனைய பிரதேசங்களுடன்ஒப்பிடும்போது யாழ். குடாநாடு வித்தியாசமான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. மலக்கழிவுகளால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளமை இவற்றுள் முக்கியமானது. இதனால் சுத்தமான குடிதண்ணீரைப் பெற முடியவில்லை. மலக் கழிவுகளை தற்போதுள்ளதைப்போன்று சேமித்து வைப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு மிகவும் மோசமாக மாறிவிடும் ஆகவே இந்தக்கழிவுகளை நிலத்தின் கீழ்சேமித்துவைக்காமல்பெருநகரங்களில் இடம் பெறுவதைப்போன்று நவீன முறைகளின் மூலமாக அகற்றி விடவதே சிறந்தது. இதற்கானசெயல்திட்டங்களைஉரியவர்கள் மூலம்வகுப்பித்து, உள்ளூராட்சிமன்றங்கள் செயற்படுத்தவேண்டும்.

பொதுமக்களது வாழ்வியல் சிரமங்களைப் போக்க உள்ளூராட்சி மன்றங்கள் முயல வேண்டும்

தீவகத்திலும்குடாநாட்டின்ஏனையபகுதிகளிலும்நிலவுகின்றகுடிதண்ணீர்த்தட்டுப்பாட்டை நிறுத்தச் செய்வதில் உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய பொறுப்பை வகிக்க வேண்டும். கழிவகற்றல்இன்றுமுக்கியமானபிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கும் உரிய தீர்வு காணப்படல்வேண்டும். உள்ளூராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட வீதிகள் முன்னிலை அடிப்படையில் புனரமைக்கப்படல் வேண்டும். இதைத்தவிரவீதிவிளக்குகளைப்பராமரிப்பதில்அதிககவனம்செலுத்தப்படல்வேண்டும். கொல்களங்களைப் பராமரித்து சுத்தமாகவைத்திருப்பதும் முறையாகப் பேணுவதும் உள்ளூராட்சிமன்றங்களின்பிரதானகடமையாகும். உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்றுஆட்சியமைப்பதுமட்டுமேமுக்கிமானதல்ல, ஆட்சியில் அமர்ந்து கொள்பவர்கள் மக்களுக்குச் சேவையாற்றுவதையே தமது பிரதானநோக்கமாகக்கொள்ளல்வேண்டும்.

ஆசிரியருக்கான கடிதம்

மனிதம் எம் மத்தியில் மரித்துவிட்டதா?

"செல்வத்துள் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம்" என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. ஆனால், அண்மைக்காலமாககுழந்தைகள்குறித்துநெஞ்சைநெகிழவைக்கும்சம்பவங்களும்இடம்பெறுகின்றனவே? பத்திரிகைகளில்வரும்செய்திகளைவாசிக்கும்போதுஇவர்களும்மனிதர்கள்தானா? என்றுஎண்ணத்தோன்றுகிறது. மலசலகூடக் குழியிலிருந்துசிசுவின் சடலம்மீட்பு; பெற்றபிள்ளையைவிற்பது, பெற்றோரால்கைவிடப்பட்ட குழந்தைகள் என்று இத்தகைய சமூக விரோதச் செயற்பாடுகளும் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

குழந்தைப்பாக்கியம்வேண்டிகாவடி, கரகம்என ஆரம்பித்து பலர் குழந்தைபாக்கியம் வேண்டி பல்வேறு நேர்த்தி வைக்கும் நடைமுறையும் வழக்கில் உண்டு. இவற்றை ஏன் எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. பத்து மாதம் சுமந்து பெற்ற பச்சிளம் சிசுக்களை இவ்விதம்அநீதிகளுக்குஉட்படுத்தலாமா? இப்படிப்பட்டசிசுக்கொலை, குழந்தைகள்விற்பனை, உரியபராமரிப்பின்மைபோன்றவற்றுடன்தொடர்புபடுவோரே, நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அன்பான மானிடப் பிறவிகளே, அற்ப சொற்ப தேவைகளுக்காகவும், பணத்துக்காகவும்பச்சிளம்குழந்தைகளைவிற்பது, கொலைசெய்வது நியாயமானதுதானா?

அ. புவனவதி, வரணி.

தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க மாற்று வழிதான் என்ன?

கடந்த காலங்களில் துறைசார் அதிகாரிகள், சமூக நலன் விரும்பிகள், ஊடகத்துறையினர் போன்ற பல தரப்பினர்களாலும் யாழ்.குடாநாட்டில் அருகிவரும் நன்னீர் வளமும் தண்ணீர்த் தேவை குறித்தும் பேசப்பட்டு வந்தாலும், மக்கள் பிரதிநிதிகள், மற்றும் அரசுகளால் இந்தப் பிரச்சினைக்கான ஆரோக்கிய எதிர்காலத் திட்டங்கள் பற்றிய செயற்பாடுகள் முழுமைப்படுத்தப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம் ஆகும். குடாநாட்டில் கிடைக்கும் மழை நீரோடு, மிகக் குறுகிய தூரத்தில் கடலோடு கலக்கும் ஆறுகளில் கிடைக்கும் நீரைத்தேக்கிஎமதுபிரதேசத்துக்கானநீர்த்தேவையைமுழுமைப்படுத்தமுடியாமல்இருப்பதற்கான அடிப்படைக் காரணங்கள் குறித்து ஆராயப்படல் வேண்டும். எமது சமூகத்தில்முறையான திட்டமிடல்பொறியியலாளர்கள் இல்லையா? நிதித் தேவைக்கான மூலகங்கள் இல்லையா? திறந்த மனமும் தீர்க்க தரிசனமும் சமூகப்பற்றும் கொண்ட அரசியல் பிரதிநிதிகள் இல்லையா? என்பவை போன்ற பலகசப்பான வினாக்களுக்கு விடைகாண வேண்டியவர்களாக உள்ளோம்.

தண்ணீர் பெற இயலாத நிலை, அதன் கொடுமை பற்றி தீவக மக்கள் நன்கறிவார்கள். தீவக பிரதேசங்கள் தண்ணீர்த் தேவைக்காகத் தினமும் செலவு செய்யும் பணம், நேரம், உடல் உழைப்புப் பற்றி தீவகத்தில் வாழ்பவர்களால் மட்டுமே உணர முடியும். இதேநிலை வடபுலத்தை வெகுவிரைவில் சூழ்ந்து வரப் போவதை சகலரும் உணர்ந்து திறந்த மனதோடு செயற்பட முன்வர வேண்டும்.

முல்லை யோகா, காரைநகர்.

பரசுராமர்

அவதார மகிமை பொருந்திய தெய்வீகக் கதாபாத்திரம்

இரா.நிசாந்தன்

இந்த உலகின் நன்மையின் பொருட்டு, பகவான் விஸ்ணு யுகம் தோறும் அவதாரங்கள் செய்தருளுகின்றான். அத்தகைய அவதாரங்களில் பரசுராம அவதாரம் சிறப்பு வாய்ந்ததும், பெருமையுடையதுமாக விளங்குகின்றது. இராமாயணம் மற்றும் மகாபாரதம் முதலிய இதிகாசங்களில் மேன்மையுறும் கதாபாத்திரமாக பரசுராமர் விளங்குகின்றார். அது மட்டுமன்றி சாவை வென்று சிரஞ்சீவியாக வாழ்ந்து வரும் சிறப்பினையும் அவர் பெறுகின்றார்.

பரசுராமரின் அவதாரம்

ஜமதக்னி முனிவருக்கும், ரேணுகா தேவிக்கும் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தவர் பரசுராமர். தன் தந்தையான ஜமதக்னி முனிவரிடம் தன் ஆரம்ப கல்வி மற்றும் கலைகளைக் கற்ற பரசுராமர் அதன் பின் சிவபெருமானைக் குறித்து தவம் புரியலானார். பரசுராமரின் தவம்கண்டு மனம் மகிழ்ந்த எம் பெருமானும், பரசுராமருக்கு பரசு எனும் கோடரி ஒன்றினை அளித்து, பரசுராமருக்கு ஏனைய வில்வித்தை முதலிய கலைகள் பலவற்றைக் கற்றுக் கொடுக்கவும் செய்தார். இவ்வாறு சிறப்புப் பெற்ற பரசுராமர் தாய், தந்தையர் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அதிலும் தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என தன் வாழ்வில் வாழ்ந்து காட்டியவர்.

தந்தை சொல்லை நிறைவேற்றிய பரசுராமர்

ஒரு முறை பரசுராமரின் தாயான, ரோணுகாதேவி செய்த தவறிற்கு தண்டனையாக அவளது தலையை வெட்டி அவளைக் கொல்லும் படி, தன் பிள்ளைகளை அழைத்து அவர்களுக்கு ஆணையிட்டார் ஜமதக்னி பரசுராமரைத் தவிர மற்றைய நால்வரும் தாயைக் கொல்வது பெரும் பாவம் எனக் கூறி தந்தைய கூறிய வார்த்தையினை மறுத்து விட்டனர். ஆனால் பரசுராமரோ, தன் தந்தை கூறிய வார்த்தைகளை வேத வாக்காகக் கருதி அக்கணமே தன் பரசு எனும் கோடரியால் தன் தாயின் தலையினை வெட்டி வீழ்த்தினார். அந்தச் செயலைக் கண்ட ஜமதக்னி முனிவர் பரசுராமரிடம், மகனே, நீ என் ஆணையினை ஏற்று உன் கடமையினை ஆற்றிவிட்டாய். என் மனம் மகிழ்ந்தது. நீ விரும்பும் வரத்தினை என்னிடம் கேள் எனக் கூறினார். பரசுராமரும், தந்தையே, தாம் எனக்கு வரம் அளிக்க விருப்பம் எனில் இறந்து கிடக்கும் என் தாய் மீண்டும் உயிர் பெற்றெழ வேண்டும் என வரம் வேண்டினார்.

பரசுராமரின் கோபமும் சபதமும்

ஒரு முறை, பரசுராமர் வெளியில் சென்றிருந்த வேளைதனில், ஜமதக்னி முனிவரின் ஆசிரமத்திற்கு கார்த்தவீரியார்ச்சுனன் எனும் மன்னன் வருகை தந்தான். அப்போது ஆசிரமத்தில் நின்றிருந்த அழகிய பசுவினையும் கண்ணுற்றான். அது ஒரு தெய்வீகப் பசு, கேட்டதை கொடுக்கும் தன்மை கொண்டது. அரசன் அந்தப் பசுவை வலுகட்டாயமாக தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினான். அதனைத் தடுத்த ஜமதக்னி மற்றும் அவரின் நான்கு பிள்ளைகளையும் வெட்டிக் கொன்று விட்டான். வெளியில் சென்ற பரசுராமர் ஆசிரமம் திரும்பினர். தனது தந்தை மற்றும் சகோதரர்கள் இறந்து கிடப்பதையும், தன் தாய் வயிற்றில் அடித்து அழுது புலம்புவதையும் கண்டு துடிதுடித்தார். கோபம் பிறிட்டது. இந்தச் செயலைச் செய்தது யாரென அறிந்து கொண்டார். உடன் தன் தாயிடத்தில், தாயே தாம் இருபத்தொரு தடவை தங்கள் வயிற்றில் அடித்து அழுதீர்கள், ஆகவே நான் இன்றிலிருந்து இருபத்தொரு தலைமுறை அதர்ம வழி செல்லும் அரசர்களை கொன்று குவிப்பேன் எனச் சபதம் செய்து தன் கோடரியை எடுத்துக் கொண்டு கோபக் கனல் பறக்க கார்த்தவீரியார்ச்சுனனைத் தேடிச் சென்றார். தன்னை எதிர்த்த கார்த்தவீரியர்ச்சுனனின் சேனைகள் முழுவதையும் கொன்று குவித்தார் பரசுராமன். பின் தன்னை எதிர்த்த கார்த்தவீரியர்ச்சுனன் ஆயிரம் கரங்களையும் அவன் தலையையும் தன் கோடரியால் வெட்டி வீழ்த்தினார். இவ்வாறு அவன் வழியில் வந்த சத்திரிய குல அரசர்களை ஒருவர் பின் ஒருவராக வெட்டிக் குவித்தார் பரசுராமர். இதன் பின் தான் செய்த செயல்களுக்காக பிரயாச்சித்தம் வேண்டி பல தீர்த்தத் தலங்களுக்கு சென்று தன் பாவங்களைப் போக்கிக் கொண்டார்.

இராமாயணத்தில் பரசுராமர்

பரசுராமர் இராமாயண காலத்தில் இடம்பெறும் காட்சியினை நோக்குவோமாயின், ஜனகரின் மிதிலையில் சீதையின் சுயம்வரம் நடக்கின்றது. அங்கு சுயம்வரத்தில் வைக்கப்பட்ட சிவனது வில்லினை ஸ்ரீ இராமன் மிக சாதுர்யமாக வளைத்து நாண் ஏற்றி அதனை உடைக்கவும் செய்து விட்டார். இதை அறிந்த பரசுராமர் கோபம் பொங்க மிதிலைக்கு வந்து, தன் கையில் இருந்த விஸ்ணுவின் வில்லினை இராமனிடம் கொடுத்து இதனை நாண் ஏற்றுமாறு வேண்டினார். இராமன்தானே விஸ்ணு. உடன் அந்த வில்லில் நாண் ஏற்றி அம்பையும் தொடுத்தார். இதைக் கண்டு ஆச்சரியம் அடைந்த பரசுராமர் இராமபிரான் யாரென்பதை அறிந்து தன் தவ வலிமை அனைத்தையும் அந்த அம்புக்கு இலக்காக்கி விட்டு இமயமலைச் சாரல் நோக்கிச் சென்றார்.

மகாபாரதத்தில் பரசுராமர்

இவ்வாறே, பரசுராமர், இராமாயண காலம் கடந்து மகாபாரத காலத்திலும், இடம்பெற்றுள்ளார். மகாபாரதத்தில் பீஸ்மர், மற்றும் கர்ணன் ஆகியோருக்கு கல்வி, வித்தைகளை குருவாக இருந்து கற்றுக் கொடுத்துள்ளார். கர்ணன் பரசுராமரிடம் தன்னை பிராமணன் எனப் பொய் கூறி அவரிடம் கல்வியினை கற்றுக் கொண்டான். இதனை பின் கண்டறிந்த பரசுராமர், கர்ணனுக்கு சாபமும் அளிந்து விடுகின்றார். அதுமட்டுமன்றி, அம்பை எனும் பெண்ணுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு தன் சீடனாகிய பீஸ்மருடன் போர் செய்தார். பின் சிவபெருமானின் தலையீட்டினால் அது முடிவுற்றது. இத்தகைய சிறப்புக்களால் பொலிவுறும் பரசுராமர் தன் நற்குணங்கள் வாயிலாக இன்றும் சாவை வென்று சிரஞ்சீவிகளில் ஒருவராக புகழ்பெற்று வாழ்கின்றார். மேலும், விஸ்ணுவின் தசாவதார வகுப்பிலும் அமைவுறுகின்றார். அதர்மம் தனை கழைந்து தர்மத்தை நிலைநாட்டுவதில் பெரும் பங்கினை ஆற்றியவர் பரசுராமர். ஆகவே தான், புராண, இதிகாசங்களில் வெளிப்படும் கதையாடல்களில் பரசுராமர் பெருமை பெற்று விளங்குகின்றார் என்றால் மிகையல்லை.

> ஜமதக்னி முனிவருக்கும், ரேணுகா தேவிக்கும் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தவர் பரசுராமர். தன் தந்தையான ஜமதக்னி முனிவரிடம் தன் ஆரம்ப கல்வி மற்றும் கலைகளைக் கற்ற பரசுராமர் அதன்பின் சிவபெருமானைக் குறித்து தவம் புரியலானார். பரசுராமரின் தவம்கண்டு மனம் மகிழ்ந்த எம் பெருமானும், பரசுராமருக்கு பரசு எனும் கோடரி ஒன்றினை அளித்து, பரசுராமருக்கு ஏனைய வில்வித்தை முதலிய கலைகள் பலவற்றைக் கற்றுக் கொடுக்கவும் செய்தார். இவ்வாறு சிறப்புப் பெற்ற பரசுராமர் தாய், தந்தையர் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அதிலும் தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என தன் வாழ்வில் வாழ்ந்து காட்டியவர்.

வரலாற்றில் இன்றைய தினம் 23.03.2018

1919 - இத்தாலியின் மிலான் நகரில் பெனிற்றோ முசோலினி தனது பாசிச அரசியல் இயக்கத்தைத் தொடங்கினார்.

1956 - உலகின் முதலாவது இஸ்லாமியக் குடியரசானது பாகிஸ்தான்

1983 - எதிரியின் ஏவுகணையை இடைமறிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் தீர்மானத்தை அமெரிக்க அரச தலைவரான றொனால்ட் றீகன் கொண்டு வந்தார்.

1996 - தாய்வான் தனது முதலாவது நேரடித் தேர்தலை நடத்தி, லீ டெங் - கியூவை அதிபராகத் தேர்ந்தெடுத்தது.

2003 - ஈராக் ஆக்கிரமிப்பின் முதலாவது மிகப்பெரிய தாக்குதலான நஸ்ரியாப் போர் தொடங்கியது.

2007 - பெரிய தம்பனையில் மோதல்; புலிகளின் பிரதேசத்துள் படையினர் முன்நகர்வு. 10 ஆயிரம் வரையான மக்கள் மடுத்தேவாலயத்தில் தஞ்சம்.

2016 - நல்லாட்சியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பலம்பெற்றுள்ளதாக கெஹலிய ரம்புக்வல தெரிவிப்பு.

2017 - இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசத்தை வழங்கும் தீர்மானம் ஐ.நாவில் நிறைவேற்றம்.

நாளை

24.03.2018

சனிக்கிழமை

பங்குனி 10

திதி:ஸப்தமி மு.ப. 10.12 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப 03.39 வரை
சுபநேரம்: 03.16–04.46 வரை
ராகுகாலம்: 09.16–10.46 வரை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா / அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி

க.பொ.த. உயர்தரப் பரீட்சை - 2017

சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களை பாராட்டுகின்றோம்

செல்வன் ஸ்ரீகந்தராசா சாருசன்
வணிகப்பிரிவு - 3A
மாவட்ட நிலை - 17

செல்வி வளர்மதி தெய்வேந்திரன்
கலைப்பிரிவு - 3A
மாவட்ட நிலை - 78

பாராட்டுபெறும் மாணவர்கள்

வர்த்தகப்பிரிவு		கலைப்பிரிவு	
1. பமிலா சிவராசா	- 2 AC	1. டினோயா கிருஸ்ணதாசன்	- 2 AB
2. கம்சா ரவீந்திரன்	- ABC	2. விருபா தேவராசா	- ABC
3. பாக்கியராசா கஜலக்சன்	- A2C	3. நிசாந்தினி குணேசன்	- ACS
4. கிந்துசா யோகராசா	- 2 BC	4. சாதனி சண்முகலிங்கம்	- 2 BC
		5. நிசாந்தினி ஜெயக்கொடி	- 2 BC
		6. சிவலிங்கம் ஜெகதீசன்	- 2 BC

அனுசரணை வழங்குவோர்:

திரு.க.கிருபாகரன்

ஹரன் ஜுவல்லர்ஸ்

217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

11 TO ELEVEN

HOTEL & FAMILY RESTURANT

PIZZA



Party Pack Mini	Party Pack Medium	Party Pack Large
1 Large Pizza, 2 Fried Rice, 1 Kottu, 1 Noodles, 1 2L Mega (6-8 பேர் பகிரக் கூடியது) Rs. 2,450/=	2 Large Pizza, 3 Fried Rice, 2 Kottu, 2 Noodles, 2 2L Mega (15-18 பேர் பகிரக் கூடியது) Rs. 4,800/=	4 Large Pizza,6 Fried Rice, 4 Kottu, 4 Noodles, 4 2L Mega, (30-35 பேர் பகிரக் கூடியது) Rs. 9,400/=

★ சிக்கன் அல்லது மரக்கறி வகைகள் மட்டுமே

நண்பர்கள், உறவினர்கள் மற்றும் குடும்பத்தினருடன் ஒன்றாக இருந்து உண்டு மகிழ விசாலமான இருக்கைகளுடன் நாகரிகமான சூழலில், வாய்க்கு ருசியான பல்வேறுபட்ட உணவுவகைகளை உண்டு மகிழுங்கள்.!



- Jaffna Style Masala Pizza விசேடமாக எமக்கு பொருத்தமான சுவையில் தயாரிக்கப்படுகிறது.
- Italian / Chinese Choice Pizza வெளிநாட்டவர்களுக்குப் பொருத்தமான சுவையில் தயாரிக்கப்படுகிறது.
- Fresh Juice, Milkshake மற்றும் மென்பானங்கள்
- Sea Food, Mutton உணவு வகைகள்
- திருமண, பிறந்தநாள் விசேட ஒடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

>>> 021 221 6700

யாழ் நகரில் இருந்து 5 Km வரையான தூரங்களில் உள்ள இடங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.

128, Palaly Road (Next to Parameswara Junction), Jaffna.
Tel: 021 221 6700 / 0777 444 225

மரண அறிவித்தல்

திருமதி எலிசபெத் பத்மாமணி குணநாதன்

(ஓய்வு பெற்ற மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

நவாலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எலிசபெத் பத்மாமணி குணநாதன் (ஓய்வு பெற்ற மருந்தாளர் யாழ். போதனா வைத்திய சாலை) நேற்று (22.03.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைஅன்னம் யேசுசகாயம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான ஜோக்குணநாயகம் அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ் சென்ற ஜோசப்குணநாதனின் (ஓய்வு பெற்ற மருந்தாளர்) அன்புமனைவியும் Dr.ஜோசப் பிரதீபன் (பொது வைத்திய நிபுணர், யாழ் .போதனா வைத்தியசாலை), அன்று சஜீவன் (கணக்காளர்), பிரியந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் அமலினி பிரதீபன், றொசானி சஜீபன் ஆகியோரின் அன்புமாமியும் மரிய திவ்வியன், அனனியா ஆகியோரின் அன்புப்பாட்டியும் காலஞ்சென்றவர்களான செபமணி யேசுசகாயம், அல்பிறட் அருளானந்தம், எட்வின், டேவிட் சந்திரசேகரம், லீலா யேசுசகாயம், கிருபைமணி தம்பிநாயகம் மற்றும் புஸ்பமணி மரியதாசன், Dr.சீவரட்ணம், விக்டோரியா யேசுசகாயம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருமதி தவமணி அருளானந்தம், திருமதி றூத்பத்மினிதேவி எட்வின், திருமதி யோய்ஸ் டேவிட், தம்பிநாயகம், மரியதாசன், திருமதி குணமணி அடைக்கலம் மற்றும் திருமதி வனிதா சீவரட்ணம், கிருபைநாதன், அருட்சகோதரி றீற்றா ஆகியோரின் அன்பு மைத்துனியும் Dr.வதனி அருட்சந்திரன், தவரஞ்சித் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), பிரபாகரன், Dr.சந்திரகரன், ஞானகரன் காலஞ்சென்ற ஆஷா விறாச், Dr. பிரியதர்சன், திருமதி டிவினியா யோகேந்திரன், திருமதி ஜினா அருள்நாயகம், ஜீன் அடைக்கலம், திருமதி ஜேன்நிமால் ஆகியோரின் அன்புமாமியும் திருமதி தர்மினி றோச், நிமால் (பொறியியலாளர்), தயாளர் (R.DA), அகிலன் (உடுவில் மகளிர் கல்லூரி), லதா, வசந்தன், ஜெயச்சந்திரன் (பொறியியலாளர்), Dr ஜெயரூபன், ஜெயமனோகரன், Dr. லேகா, திருமதி கீதா மனோ, திருமதி வினித்தா ஜீவானந்தன் (கட்டடங்கள் திணைக்களம்), திருமதி அஜயந்தா தேவானந்தன் (ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஞானோதயனின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி ஆராதனைக்காக 27/ 3, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் எனும் அவரது மகனின் இல்லத்தில் வைக்கப்பட்டு (24.03.2018) சனிக்கிழமை நவாலி புனித பேதுரு ஆலயத்தில் பி.ப. 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நவாலி புனித பேதுரு பாவுலு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

Dr.பிரதீபன் (மகன்)

மரண அறிவித்தல்



பிறப்பு
15 . 10 . 1937

இறப்பு
20 . 03 . 2018

குமாரு பத்மநாதன் (பப்பர்)

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.115, வியாசர் வீதி, தோணிக்கல் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட குமாரு பத்மநாதன் 20.03.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரி (பட்டம்மா) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிங்கராசா, தற்பரானந்தன் (அப்பு), ஆகியோரின் அன்புச்சகோதரனும், தவச்செல்வம் (சுவிஸ்), அருட்சோதி (சுவிஸ்), சொர்ணரூபி, சிவரூபி, சிவரூபன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் C.E.B. சுன்னாகம்), ரூபன் (கந்தன் திருமணசேவை), கேமாரூபி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி (சுவிஸ்), தவமலர் (சுவிஸ்), இராஜலிங்கம் (வவா ரேடஸ் வவுனியா), சர்வேஸ்வரன், தர்சினி, சித்திரவேல் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், தவலக்ஷ்மன், லவினா, தவினா (சுவிஸ்), அகல்யா, அஜிபன் (சுவிஸ்), தர்சிகா, செல்வகுமரன், சுலக்ஷன் (பிரான்ஸ்), சுமணன், துர்ஷிகா, தீபிகா, லோஜிதா, லாவன்யா, சங்கீர்த்தன், கிருஷாந், மதுஷா, சஞ்சயன், கவினாஷ், ஜஸ்வினி, சிந்துஜா, கிரிசாந்த் (சுவிஸ்), ஆகியோரின் அன்புப் பேரனும், அகஷியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.115, வியாசர் வீதி,
தோணிக்கல் வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
077 906 3631

(akn.397)(13,17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ராசாத்தி ஜெயம்

தோற்றம்
09.02.1948

மறைவு
03.04.2017

திதி: வளர்பிறை சப்தமி
23.03.2018

ஒரு ஆண்டு என்ன ஒரு நூறு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு விட்டகலாது எங்கள் குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/14969)13,17)

118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

5 ஆம் ஆண்டு துயர் சுமந்து

தாயில் மடியில்
06 . 03 . 1973

இறைவன் அடியில்
23 . 03 . 2013

அமரர் கமல சேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)

பல்லாண்டு மகிழ்ந்திருப்போம் என்று நினைத்திருந்தோமே
ஐந்தாண்டு உமைப்பிரிந்து ஆறாத்துயரில் தவிக்கின்றோமே

- ஜயா சதீசா

காலங்கள் பல கடந்து போனாலும்
கடைசிவரை உம் நினைவு மங்காது ஜயா சதீசா
வலிகளை நீர் சுமந்து வழிகளை காட்டினீரே
துன்ப வேளையில் தாணாய் நின்றவரே
இருளில் எமக்கு ஒளியாய் எரிந்தவரே
நாம் மீண்டெழும் வேளையில் நீர் மண்ணில் விழுந்ததேனோ
உம்மை எம்முன் இருந்து இல்லாமல் ஆகிகயவர் யாரோ ஆனால்
உள்ளும். வெளியுமாய் எம்முடன் இருப்பதை உணர்கின்றோம்
சதீஸ் என்றும் வாழ்வார் செயல் வடிவாய்
விண்ணக வீட்டில் நீர் நிலையான வாழ்வு பெற
இறைவனிடம் மன்றாட்டுடன் நிற்கும்

AKN/403)(13,17)

இல.6, 155 ஆம் கட்டை, A 9 வீதி, கிளிநொச்சி. பெற்றோர், சகோதரர், பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 . 09 . 1971

மறைவு
02 . 04 . 2017

அமரர் சிவபுண்ணியம் செல்வநாதன்

(முன்னாள் ப.நோ.கூ.ச. களஞ்சியப்பொறுப்பாளர்)

திதி: வளர்பிறை ஷஷ்டி

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா - உந்தன்
பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கிறோம்
தொலைபேசியில் உந்தன் செய்திவந்த கணம்முதல்
உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடிய விழி மலர்ந்திட நின்றாலும் நாதனே
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ் நாள் தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்
ஓம் சாந்தி.....ஓம் சாந்தி..... ஓம் சாந்தி.....

நெல்லியோடை அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. குடும்பத்தினர்

பணி நிலை வெற்றிடம்

கட்டட நிர்மாணத்துறையிலும். பொறியியல் ஆலோசனைகள் வழங்கு வதிலும் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றி டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. Technical Officer (Civil) - NDT / HNDE / NCT with 5 years Experience or Equivalent)
2. Technical Officer (Electrical) - HNDE /NCT with 3 years or Equivalent)
3. Quantity Surveyor - HND (QS) with 3 years experiemce

தகுதியானவர்கள் 24.03.2018 அன்று 9.00 Am - 11.00 Am மணிக் கிடையில் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

No.09, Nanthavil Lane, Thavady.
Email: vacancynsc@gmail.com
Fax : 021 221 3663 (cs.15005) (13)

C.C.A கதிரேசு வீதி, வவுனியா. 077 220 5126

யாழின் பிரபல ஆசிரயர்களால் போட்டிப்பரீட்சைக்கான வகுப்புக்கள்

★ திட்டமிடல் சேவை திறந்த போட்டிப்பரீட்சை
★ திட்டமிடல் சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை
★ வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் முன்பள்ளி ஆசிரியர் வாகன சாரதி போன்ற பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்.

பிரதி சனி. ஞாயிறு 9.30 - 3.00 மணி

C.C.A கல்வி நிலையம். கதிரேசு வீதி, வவுனியா. 077 220 5126

ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-11, வைரவர் கோயில் வீதி, ஆதன இலக்கம் 17 என்ற இலக்கமுடைய ஆதனம் யாழ் மாநகர சபையின் ஆதனவரிப் பதிவேட்டில் வைரவன் கணபதி எனப் பதியப்பட்டுள்ளது.

ஆலடிவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முக வரியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின் டென்சிங் என்பவர் 2007.11.01 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 4361 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட உறுதிப்படுத்தல் உறுதியில் யாழ்ப்பாணம் நீதிமன்றம் 9539 ஆம் இலக்க வழக்கில் சித்தரித்து விற்க்கப்பட்டதும், 1935.12.02 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.ரி.குக் முகதாவில் நிறை வேறிய 878 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய விற்பனை நிருவாகங் களில் சுட்டப் பெற்றதும் தனது பூட்டி காலஞ் சென்ற தம்பன் பெண் மதியினால் கொள்முதல் செய்யப்பட்டதுமான ஆதனம் அவர் பாரதீனப்படுத்தாது விட்டிறக்க பிள்ளைகளான தம்பன் பொன்னர், தம்பன் யேசுதாசன் ஆகியோரிற்கு வந்தடைந்தது என் றும் குறித்த ஆதனத்தில் அரைப்பங்கிற்கு உரித்தாளரான தம்பன் ஜேசுதாசன் என்பவர் அதைப் பாரதீனப் படுத்தாது விட்டிறக்க அவரது ஏகவாரிசும் தனது தந்தையுமான யேசுதாசன் அந்தோனிப் பிள்ளையை பிதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும் அவர் விருப்பாவணமின்றி இறக்க அவரது மகனும் ஏகவாரிசுமான தன்னை வந்தடைந்ததென்றும் வெளிப் படுத்தியுள்ளார். அதன் பின்னர் யாழ்ப்பாணம், கோண்டாவில், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை கைம்பெண் கனகம்மா உம் இதே முகவரி ஆலடி வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின் ஜோய் உம் அதே இடம் தற்போது Germany Sulzbech, 66280, SulzbachtalStr 90 என்னும் இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின் கிட்லர் உம் தாங்கள் முதலாம் பகுதியாகவும், உடுவில், இணுவில் மேற்கு கற்பகப்பிள்ளை கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த பிலேந்திரன் தேவறொபின் உம் பெண் லூஜி உம் 2ஆம் பகுதியாகவும், 2007.11.01 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 4361 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப் படுத்திய உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றி அதில் அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின் டென்சிங் என்பவர் தனது தந்தை விருப்பாவணம் இன்றி இறக்க குறித்த ஆதனம் தனது தாயாரான அந்தோனிப்பிள்ளை கைம்பெண் கனகம்மாவையும், தன்னையும், தனது சகோதரர்களான அந்தோனிப்பிள்ளை யஸ்ரின் ஜோய், அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின் கிட்லர், ஆகியோரையும் பிதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும், குறித்த ஆதனத்தை தாங்கள் பிலேந்திரன் தேவறொபின் பெண் சுதர்சனா லூஜிக்கு 2010/02/19 திகதியிட்டு மு.ஞானசேகரம் முகதாவில் 682 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய சீதன உறுதி மூலம் சீதனமாக கொடுத்த தாகவும் திருத்தியும், வெளிப்படுத்தியும் உள்ளார்.

ஆதனடாப்பு:- யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக் குளி கோவிற்பற்று, சிவியா தெரு இறை, கறுத்த நீலன் வளவு நிலப்பரப்பு 3 குளி 1 ¾. இதில் சொரியலாய் ½ பங்கு, ஆனால் மறுபங்காளருடன் இணங்கி மேற்குப் பக்கமாக நிந்தப்படுத்தி ஆட்சி செய்ததன்படி நிலப்பரப்பு 1 குளி 9 ¾ இது 2008.02.19 ஆம் திகதி நில அளவையாளர் ரி.தங்கராஜா தயாரித்த 1380 ஆம் இலக்கபடத்தின் படிநிலப்பரப்பு 1 குளி 12.45 ஆகும். இதன் எல்லை

கிழக்கு :- பூவேந்திரன் பெண் சுபாளினியின் ஆதனம்.
வடக்கும் மேற்கும்:- ஒழுங்கை
தெற்கு:- நந்தபாலா பெண் யசோதரா, மாசஸ் பெண் தவமணி ஆகியோரது ஆதனம்.

தற்போது பிலேந்திரன் தேவறொபின் பெண் சுதர்சனா லூஜி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத் திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும் உரிமைகோரா விடத்து குறித்த ஆதனமானது பிலேந்திரன் தேவறொபின் பெண் சுதர்சனாலூஜி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக் கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.
22.03.2018

(IN623)(10)

விற்பனைக்கு

சிற்றுண்டி தயாரிப்பவர்களுக்கு உகந்த 10 Kg மா குழைக் கும் இயந்திரம். ஜஸ்கிரீம் வாகனத்தில் கொண்டுசெல்லக் கூடிய அடிபெட்டி குளிர்சாதனப் பெட்டி ஜஸ்கிரீம் ஆட்டோ மேல் பெட்டி என்பன விற்பனைக்குண்டு.

(cs.15005) (13) **076 635 7694**

வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)

077 187 7754 (CS/14776)(11)

சிறுநீரகம் தேவை

34 வயதுடைய சிறுநீரகம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு A or O இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

077 562 1613 / 076 304 7716

தவறிவிட்டது

13 ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த கதிரவேலு புண்ணியபாலன் என்பவரின் தே.அ.அ.(673594190V). அக்கரகார காப்புறுதி பத்திரம், தொழிலாளர் அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் நாச்சிமார் கோயில் அரசடிச் சந்திக்கும், யாழ்நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 076 0878

வேலையாள்கள் தேவை

இணுவில் கந்தசுவாமி கோயிலடியிலுள்ள **மிக்சர் கடைக்கு பெண்** வேலையாள்களும் **ரொட்டி றோல் தயாரிக்க ஆண்** வேலையாள்களும் தேவை.

077 601 0039

மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சைவ கௌரவ குடும்பத்தில் 1982 இல் பிறந்த உத்தராடம் 2 ஆம் பாதம். 2இல் செவ்வாய். (க.பொ.த. உயர்தரம்) சித்தி. பொலிஸ் உத்தியோகத்தராக கடமைபுரியும் 5 அடி 8 அங்குலம் உயரமுடைய பொது நிறமான மணமகனுக்கு மணமகள் தேவை. (மொத்த பாவம் - 35 ½)

077 991 4754 / 077 888 4801

யாழ். பிரபல ஆசிரியர் குழாமால் இலவச போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர்
வடமாகாண சாரதி
ஆசிரியர் போட்டி

ஆரம்பம் 23.03.2018 பி.ப.4.00
தொடர்ச்சியாக வெள்ளி - 4.00 பி.ப
சனி - 8.00 - 1.00 ஞாயிறு 8.30-3.00 வரையும் நடைபெறும்

இடம்:- நெல்லியடி மத்திய கல்லூரி
அனுசரணை:-
தங்கவேலாயுதம் அறக்கட்டளை.

தொடர்புகளுக்கு:
0775002283/ 0777446069/ 0774076069

MAJESTIC CINEPLEX

Jaffna Silver
10.45AM | 1.45PM | 4.45PM | 7.45PM

Jaffna Platinum
1.30PM | 7.30PM

Jaffna Platinum
10.30AM | 4.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் 021 2227712

CEYLON THEATRES Since 1912
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

Jaffna Bronze - 3D
10.00AM | 1.30PM | 4.30PM | 7.30PM

சிவாஜி கணேசனாக நடிக்கும் விக்ரம் பிரபு

அஸ்வின் இயக்கத்தில் கீர்த்தி சுரேஷ் நடிப்பில் தமிழில் உருவாகி வரும் 'நடிகையர் திலகம்' படத்தில் சிவாஜி கணேசனாக அவரது பேரன் விக்ரம் பிரபு நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மறைந்த முன்னாள் நடிகை சாவித்திரியின் வாழ்க்கையைப் பற்றிய படம் தெலுங்கில் 'மகாநதி' என்ற பெயரிலும், தமிழில் 'நடிகையர் திலகம்' என்ற பெயரிலும் உருவாகி வருகிறது.

இந்த படத்தில் சாவித்திரி வேடத்தில் கீர்த்தி சுரேஷும், ஜெமினி கணேசனாக துல்கர் சல்மானும் நடிக்கின்றனர்.

சமந்தா செய்தியாளர் கதாபாத்திரத்தில் நடிக்கின்றார். சாவித்திரியைப் பிரபல நடிகையாக உயர்த்திய பல வெற்றிப் படங்களுக்கு கதாசிரியராகப் பணியாற்றிய அலுரி சக்ரபாணி கதாபாத்திரத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கின்றார்.

மறைந்த பழம்பெரும் நடிகை பானுமதி வேடத்தில் அனுஷ்காவும், நாகேஷ்வரராவ் கதாபாத்திரத்தில் நாகசைதன்யாவும், எஸ்.வி.ரங்காராவ் வேடத்தில் மோகன்பாபுவும் நடிக்கின்றனர். இந்த நிலையில், இந்த படத்தில் சிவாஜி கணேசன் கதாபாத்திரத்தில் விக்ரம் பிரபு நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: சுயநலம் கருதி சிலர் உதவ முன்வருவர். தொழில் வியாபாரத்தில் அதிகம் பணிபுரிந்தால் மட்டுமே எதிர்பார்த்த லாபம் வரும். உடல்நலனில் கவனம் தேவை.

இடபம்: புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள்.

மிதுனம்: மனதில் குழப்பம் வந்து விலகும். குடும்பத்தினருடன் வாக்குவாதம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

கடகம்: உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டி மறையும். பணவரவு திருப்திகரமாகும். நண்பர்களுடன் பழைய நினைவுகளைப் பேசி மகிழ்வீர்கள்.

சிங்கம்: சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி நிலை உருவாகும். பிறருக்கு உதவுக்கரம் நீட்டுவீர்கள்.

கன்னி: செயல்களில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் குறைபாடுகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

துலாம்: உங்கள் கருத்துக்களை மற்றவர் தவறாக உணர்ந்து கொள்ளலாம். குடும்ப விஷயங்களை பிறரிடம் பேசவேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

விருச்சிகம்: குடும்ப ஒற்றுமையை பாதுகாக்க முயல்வீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

தனுசு: உங்கள் பேச்சில் வசீகரம் உருவாகும். சமூகத்தில் மதிப்பு பெறுவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும்.

மகரம்: எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

கும்பம்: நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வீர்கள். இலாபம் உயரும். ஆரோக்கியம் பலம் பெறும்

மீனம்: சவால்களை ஏற்று செயல்படுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

பிளாக் லைட்@BlackLightOfl

"எங்க தாத்தா 60 வயது வரை உயிர் வாழ்ந்தார்" என வருங்காலம் பெருமைப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை.!!

ஆயுள்

நெசவாளியின் மகன் @prem_twittz

கண்ணீரைப் போல் சிக்கனமாய் தண்ணீரையும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்

மாயோன்@sThivagaran

வெற்றிகள் பெருமளவு இறந்தகாலத்திற்கே சொந்தமானவை. தோல்விகள் தான் எதிர்காலத்திற்குச் சொந்தமானவை!

'ஐ போன்' வாங்கிட்டேன்னு சொல்றவன் பணக்காரன்.... ஐ..... போன் வாங்கிட்டேன்னு சொல்றவன் ஏழை....!!

twitter

'டா' போடும் பெண்கள் அனைவரும் ஆண்களையே 'டி' போட அனுப்புகிறார்கள்...

இன்றைய 'டா' நாளைய 'டி' இதுவே காலப்போக்கில் 'டாடி' என குழந்தைகளால் அன்போடு அழைக்கப்படுகிறது

குட்டிக் கதை

ஒரு நாள் சாவியைப் பார்த்து சுத்தியல் கேட்டது. "உன்னைவிட நான் வலிமையானவனாக இருக்கிறேன். ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன். நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே அதெப்படி?"

அதற்கு சாவி சொன்னது. "நீ என்னை விட பல சாலிதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய். ஆனால் நான் பூட்டின் இதயத்தைத் தொடுகிறேன்" என்றதாம்.

அன்பு உலகை ஆளும்



- அதிகம் அன்போடு நடந்து கொள்ளாதே அடிமையாக்கி விடுவார்கள்..
- அதிகம் பொறுமையுடன் நடக்காதே பைத்தியம் ஆகும் வரை விட மாட்டார்கள்..
- எல்லாம் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று நினைக்காதே பலர் உன்னை வெறுக்க நேரிடும்....
- எல்லோரையும் நம்பி விடாதே ஏமாற்ற பலர் இருக்கிறார்கள்.
- கோபப்படாமல் இருந்து விடாதே கோமாளியாக்கி விடுவார்கள்..

சுடோக்கு

எண் விளையாட்டு

			4	7		8		
	7	1			6		2	
				5		7		
	4						7	3
	8		2	4	7		5	
6	5	7					8	
		6		2				
	9		7			3	1	
		5		3	9			

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய விடை

9	3	2	4	7	1	6	5	8
7	4	6	9	5	8	1	3	2
8	5	1	2	3	6	9	4	7
5	1	9	6	2	7	4	8	3
3	7	4	8	9	5	2	6	1
2	6	8	1	4	3	5	7	9
4	8	3	5	1	2	7	9	6
1	9	7	3	6	4	8	2	5
6	2	5	7	8	9	3	1	4

அன்னப்பறவை சிறகடித்து...

வாத்து முட்டைகளுடன் அன்னப்பறவை ஒன்றின் முட்டை ஒன்றும் கலந்து விட்டது. இதை அறியாத வாத்து எல்லா முட்டைகளையும் அடை காத்தது. முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளிவந்தன.

ஒரு குஞ்சு மட்டும் வெள்ளை வெளிரென்று இருப்பதையும் அழகாக நடப்பதையும் கண்டு தாய் வாத்தும் மற்றக் குஞ்சுகளும் பொறாமை கொண்டன. எப்பொழுதும் அதைக் குறை சொல்லிக்கொண்டே இருந்தன. அவற்றின் தொல்லைகள் தாங்காமல் தவித்தது அன்னப்பறவையின் குஞ்சு. என்மீது எந்தத் தவறும் இல்லையே!ஏன் என்னிடம் எல்லோரும் வெறுப்புக் காட்டுகின்றனர்? என்று வருந்தியது அது. இந்த நிலையில் அன்னப் பறவையின் கூட்டம் ஒன்று அந்தப் பக்கமாகப் பறந்து வந்தது. வாத்துக் கூட்டத்தினுள்ளே அன்னப் பறவை ஒன்று இருப்பதைக் கண்டது.

தன் கூட்டத்தை விட்டு சற்று ஒதுங்கி நின்ற அன்னக்குஞ்சை ஒரு அன்னப் பறவை அணுகியது. "நீ ஏன் இங்கே இருக்கிறாய்? எங்களுடன் வந்து விடு" என்று அழைத்தது. "நான் எங்கள் கூட்டத்துடன் இருக்கிறேன். எதற்காக என்னை உங்களுடன் அழைக்கிறீர்கள்? நீங்கள் யார்?" என்று கேட்டது அன்னப்பறவையின் குஞ்சு.

"நீ வாத்து அல்ல. எங்களைப் போன்ற அன்னப் பறவை. வானத்தில் நீண்ட தூரம் பறக்கும் ஆற்றல் உனக்கு உண்டு. உன் வடிவத்தை அதோ அந்த நீர் நிலையில் பார். நீ எங்களைப் போல இருப்பது தெரியும்"என்றது மற்றொரு அன்னப்பறவை.

அங்கிருந்த நீர் நிலையில் தன் அழகிய வடிவத்தைப் பார்த்தது அன்னக் குஞ்சு. வாத்துக்கூட்டம் தன்னை வெறுப்பதன் காரணமும் புரிந்தது. இப்பொழுது அது அந்த அன்னப் பறவைகளின் கூட்டத்துடன் சிறகடித்துப் பறந்து செல்லத் தொடங்கியது.

பழமொழிகளும் கருத்துக்களும்

1. பேராசை பெருநட்டம் - அதிக ஆசை தீமைவிளைவிக்கும்.
2. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - ஊக்கம் உள்ளவர் உயர்வு பெறுவார்.
3. சிறு துரும்பும் பல்குத்த உதவும் - எதனையும் இகழ்ந்து பேசலாகாது.
4. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் - சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது.
5. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது - அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.
6. ஆனைக்கும் அடி சறுக்கும் - பெரியோரும் சில நேரங்களில் தவறு செய்வர்.
7. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? - சிறுவர்களை ஆரம்பத்திலிருந்தே சீராக வளர்க்க வேண்டும்
8. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் - சிறுவயதுப் பழக்கம் விட முடியாத படி இறுதிவரை தொடரும்.
9. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது - அனுபவம் இல்லாக் கல்வியால் பயனில்லை.
10. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் - திறமையுள்ளவன் எதையும் வைத்து முன்னேறுவான்.
11. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் - பயந்தனுக்கு எதைக் கண்டாலும் பயம் ஏற்படும்.
12. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து - இளவயதுப் பருவமே கல்வி கற்கச் சிறந்த காலமாகும்.
13. மனமுண்டானால் இடமுண்டு - மனம் விரும்பினால் எவருக்கும் உதவி செய்.
14. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து - உள்ளதைக் கொண்டு திருப்திப்படுவதே நன்மைதரும்.
15. இளங்கன்று பயமறியாது - இளமைப்பருவம் துணிவு கொண்டது.

சேமிப்பு

சிந்தும் அனைத்துமே எங்கோ ஓரிடத்தில் சேமிக்கப்படுகின்றன. மழைத் துளியைப் பாருங்கள் அது கடலில் சேமிக்கப்படுகிறது. வார்த்தைகள் ஒரு படைப்பில் (இலக்கியத்தில்) சேமிக்கப்படுகின்றன. மாணவர்களாகிய நாமும் முயற்சியை விதைத்து நேரத்தை, காலத்தை, அனுபவத்தை திறமையைச் சேமித்தால் பணத்தைச் சேமிக்கலாம். கல்வியைச் சேமிக்கலாம். இவ்வாறான சேமிப்புகள் எம்மை இந்த உலகில் நிலை நிறுத்தும்.

கல்வி

தப்பாமல் கல்வியை ஓது – கல்வி
தரும் புகழுக்கு ஈடிந்த உலகினில் ஏது?
மப்பில்லா வாகனம் போல் ஆகும் – கல்வி
வளமில்லா வாழ்க்கை பயனற்றுப்போகும்

அன்போடு ஆசானைப் போற்று – பற்றி
அறிவுரை வாழ்க்கையில் இருளுக்கு மாற்று
என்றென்றும் கற்றிட்டாலாகும் அறிவு
இல்லாமை என்கின்ற செயலற்றுப்போகும்

கற்றுத் தெளிவதே மேன்மை – கல்வி
கல்லாத மக்களால் வருவதே தீமை
பெற்றவர் காதுக்குத் தேனாம் – பிள்ளை
பெரும் அறிவாளி என்பது தானாம்

பின்வரும் சொற்களைக்கொண்டு 'க'வரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுவோம்

கொழும்பு,கானகம், கோடை, குலைகள், கடிதம், கேள்வி, கீரை, கூடு, கெட்டிக்காரன், கிழங்கு, கைக்கடிகாரம், கௌரவம்.

1. ..... 2. .....
3. ..... 4. .....
5. ..... 6. .....
7. ..... 8. .....
9. ..... 10. .....
11. ..... 12. .....

ஒத்த கருத்து சொற்களை எழுதுவோம்

1. மகிழ்ச்சி -.....
2. தகவல் -.....
3. மனை -.....
4. புலவன் -.....
5. பணிவு -.....
6. சத்தம் -.....
7. வயல் -.....
8. ஊண் -.....
9. கலம் -.....
10. தரை -.....

இரு படங்களுக்கும் இடையே 05 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்

கணினி கற்போம்

- இன்று உலக மக்களால் பெரிதும் உச்சரிக்கப்படும் ஒரு சொல் கணினி என்பதாகும்.
- கணினியை முதன் முதலில் வடிவமைத்தவர் சார்ளஸ் பாப்பேஜ் என்பவராவர்.
- இங்கிலாந்தைச் சேர்ந்த இவர் கணிதச் செயற்பாடுகளைச் செய்யும் பொருட்டே இந்தக் கருவியை கி.பி 1834ஆம் ஆண்டு வடிவமைத்தார்.
- இவரது கணினி உருவாக்கமே இன்றைய பல நவீன கணினி உருவாக்கங்களுக்கு வழிகாட்டியது.
- இதனால் இவரை கணினியின் தந்தை என உலகம் போற்றுகிறது.
- கணினி இன்று பொறியியல், மருத்துவம், வணிகம், வங்கி, வேளாண்மை, கல்வி, வானியல் போன்ற பல துறைகளிலும் வியத்தகு வகையில் விந்தைச் செயல்களைச் செய்கிறது.
- வானூர்தி, ஏவுகணை, உந்துகணை போன்ற பல சாதனங்களைக் கணினி இயங்குகிறது.
- வானவெளியில் பவனி வரும் செயற்கைக் கோள்களைக் கட்டுப்படுத்துவதும் இயக்குவதும் கணினிகளே.
- உலகத் தோரை அதிசயத்தில் ஆழ்த்திடும் இயந்திர மனிதர்களை ரோபோக்களை இயக்குவதும் கணினியே.
- அச்சுத்துறையிலும் பத்திரிகை புத்தக வெளியீட்டுத் துறையிலும் கணினியால் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
- அறிவியல் கண்டுபிடிப்புக்கள் யாவும் மனிதனில் உடல் வன்மைக்கு வலுச் சேர்ப்பன. ஆனால் கணினியின் தோற்றம் மனித மூளைக்கு வலுவூட்டும் வகையில் அமைந்தது எனலாம்.
- கணினித்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் வேறு எத்துறையிலும் ஏற்பட வில்லை என்றால் அது மிகையில்லை.
- இத்தகைய ஆற்றல் தரும் கணினிக் கல்வியை மாணவர்கள் அனைவரும் கற்றிடல் வேண்டும்.

முறியடிப்புச்...

கையை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கியதேசியமுன்னணிலுள்ளநாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று கையொப்பம் திரட்டப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகியன ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கின்றன. இந்த முன்னணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுப்பகல் நடைபெற்றது.

இதன்போது தலைமை அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் சம்பந்தமாகப் பேசப்பட்டுள்ளதுடன், அதைத் தோற்கடிப்பதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியில் திரளவேண்டும் என்று யோசனை முன்வைக்கப் பட்டு, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைமை அமைச்சர் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் கையொப்பம் திரட்டப்பட்டு அது சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், சம்பிக்க ரணவக்க உட்பட முக்கிய உறுப்பினர்கள் தலைமை அமைச்சருக்கு ஆதரவான தீர்மானத்தில் கையொப்பமிட்டுள்ளனர். (5)

தோல்விக்கு...

மூன்றாவது தடவையும் தோல்வியடைந்து விடுமோ என்ற அச்சத்தாலேயே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்பமிடவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி குருணாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்துனில் அமரசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 4ஆம் திகதியே தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வரவுள்ளது. கிராமங்களில் ஏப்ரல் மாதம் என்றாலேயே தூய்மைப்படுத்தல் நடவடிக்கை இடம்பெறும். வீடுகளை மக்கள் சுத்தம் செய்வார்கள். இவ்வாறு அரசுக்கு எதிரான அனைத்து அழுக்குகளையும், சதிகளையும் ஏப்ரலில் சுத்தப்படுத்தி, முறியடித்துவிட்டு புதிய பயணத்தை அரசு ஆரம்பிக்கும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுவிடும் என்பது அவருக்குத் தெரியும். இதன் காரணமாகவே தீர்மானத்தில் மகிந்த கையொப்பமிடவில்லை - என்றார். (5)

ரணில்...

லுள்ள தலைமை அமைச்சரின் அலுவலகத்திலேயே மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு கூட்டமைப்பின் ஆதரவை தலைமை அமைச்சர் ரணில் கோரியுள்ளார் என்று அறியமுடிகின்றது. (5)

தேவை (ஆண் / பெண்)

முழுநேர /பகுதிநேர வேலையாள்கள்

1. வெயிட்டர் 2. சுத்திகரிப்பாளர்
3. உதவிசமையலாளர்

கோல்டன் எஸ்ரார், ரெஸ்ரோரண்ட்
(ஆரியகுளம் சந்தி அருகில்) 077 7404 883

வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்குகின்ற பிரபல்ய எலக்ரோனிக் கடைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு - 077 160 7757, 077 6913 299

கண்ணீர் அஞ்சலி

அன்னைமடியில் 21.05.1930
இறைவன் அடியில் 20.03.2018

கைதடி சாவகச்சேரி கமநல சேவை நிலையங்களில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமைபுரியும்

குலசேகரம்பிள்ளை முரளிதரன்

அவர்களின் அன்புத்தந்தை

இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாநதி

அன்னாரின் பிரிவால் துயருறும் :
உத்தியோகத்தர்கள் கைதடி கமநல சேவைகள் நிலையம்,
சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையம்.

மரண அறிவித்தல்



பிறப்பு 31 • 12 • 1949

இறப்பு 18 • 03 • 2018

சிதம்பரப்பிள்ளை லோகநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிராஸ்சை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை லோகநாதன் கடந்த 18.03.3018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடேசர் மற்றும் குணவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கதிர்காமநாதன், சவுந்தராதேவி, காலஞ்சென்றவர்களான உபயசவுந்தராதேவி, கனகரட்ணம் ஆகியோரின் சகோதரனும், பிரசாந்தினி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அந்தோனியோஸ் இன் மாமனும், கியாராவின் பேரனும் ஆவார்.

அன்னாரினது இறுதிக்கிரியைகள் பிராஸ்சில் நடைபெறும்.

740, நாவலர் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
க.ஸ்ரீகாந்தி

(cs15009)(13)

வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை
ஆதனவரி மீள் மதிப்பீடு தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட மல்லாகம் உப அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள சகல ஆதனங்களையும் மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை 23.03.2018 ஆம் திகதி முதல் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே இவ் எல்லைக்குள் வதியும் ஆதனங்களின் உரிமையாளர்கள் விலைமதிப்பீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைக்கு சமூகமளிக்கும்போது தங்கள் ஆதனங்களுக்குரிய ஆவணங்களை பார்வைக்கு சமர்ப்பிக்குமாறும், தங்களது ஆதனத்திற்குள் நுழைந்து ஆதனங்களினை பார்வையிட்டு மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 139 (1) இன் பிரகாரம் மீள் மதிப்பீட்டாளர் தங்கள் ஆதனங்களுக்குள் பிரவேசிக்கவும், ஆதனங்கள், ஆவணங்களை பரிசீலிக்கவும் ஆதன மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் உரித்துடையவர்கள் என்பதோடு உரிய விவரங்களை அவர்களிற்கு வழங்கி தங்களது ஆதனங்களின் உரிமையினை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இராமலிங்கம் பகீரதன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

23.03.2018

(IN 6222)(10)

JAFFNA MUNICIPAL COUNCIL
REQUEST FOR EXPRESSION OF INTEREST FOR RECREATIONAL BOATING SERVICE FOR TOURIST AT JAFFNA LAGOON

1. The Commissioner now invites eligible service providers to indicate their interest in providing the Recreational Boating Service for Tourist to implement at **Jaffna Lagoon**.
2. Interested Service Providers must provide information indicating that, they are qualified to perform the services (brochures, description of similar assignments, experience in similar conditions, availability of appropriate skills among staff, etc). Service Providers may associate documents to enhance their qualifications.
3. Interested Service Providers may obtain further information at the address below from 23.03.2018 to 06.04.2018 between 9.00am to 3.00pm.Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.
   Tel: 021-22228874, 021-2222019, Fax: 021-2222334, E-mail:mcjaffnamailt@yahoo.com
4. A complete set of Expression of interest (EOI) Documents in English language may be purchased by interested Service Providers on the submission of a written application to the **Works Engineer's Office, Jaffna Municipal Council from 23.03.2018 until06.04.2018 from 9.00 hrs to 15.00 hrs upon payment of a non-refundable fees of Rs.1,000.00 + Taxes.** The method of payment should be by cash.
5. Expression of interest shall be delivered or sent by registered post to the **above address on or before 07.04.2018 at 14.00 hrs.** Late EOI will be rejected. EOI will be opened soon after closing in the presence of the Service Providers representatives who choose to attend.
6. The commissioner of Jaffna Municipal Council reserves the right to accept or reject any EOI.
7. Basic Requirements

- The Service Provider should ensure that he should have a good business culture in Jaffna.
- The Service Provider should ensure that their boating activities and operation cannot affect the Jaffna's culture and Traditions.
- The Service Provider should ensure that they should have fully insurance arrangement for both boating assets and passengers.
- The Service Provider should ensure that their boating activities should be feasible for environment.(Should be done with environmental friendly manner)

Mr.R.T.Jeyaseelan
Chairman,
Regional Procurement Committee,
Jaffna Municipal Council,
Point Pedro Road,
Nallur,
Jaffna.
22.03.2018

(IN 6224) (10)

இணைப்பாளருக்கான விண்ணப்பம்

யாழ். மாவட்ட சர்வமத பேரவையின் இணைப்பாளருக்கான பதவி வெற்றிடம் காணப்படுவதால் கீழ்காணும் தகைமையையுடைய ஆண் விண்ணப்பதாரிகள் கீழ்காணும் முகவரிக்கு 31.03.2018 திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

தகைமைகள்

- க.பொ.த. உயர்தரம் 3 பாடசித்தி.
- மும்மொழி அறிவு
- கணினி அறிவு
- முழுநேர கடமையாற்றக் கூடியவர்
- சமூகத்தில் நன்மதிப்புடைய ஆண் விண்ணப்பதாரி விரும்பத்தக்கது.
- வயதெல்லை 18 - 30.

(CS 15022/15)

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி. பாஸ்டர் க.ராஜா 99/6, புனித செபஸ்ரியர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

திருமதி பரமேஸ்வரி வல்லிபுரம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி வல்லிபுரம் நேற்று (22.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - ரோசாம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் செல்வவீரசிங்கம் வனிதாதேவி, காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் சதீஸ்குமார், வாசுகி, சிவகுமார், கவிதா, காலஞ்சென்ற ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும் விமலாதேவி, காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் நந்தினி, மதிவதனி, தயாளன், பத்மபிரியா, ஸ்ரீமோகன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 585/15)

மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 09 . 1928



மறைவு
22 . 03 . 2018

குருசுப்பிள்ளை சாமிநாதர்

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், முனை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட குருசுப்பிள்ளை சாமிநாதர் நேற்று (22.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுப்பிள்ளை மரியம்மா தம்பதியரின் அன்புமகனும் டோமினிக் மாக்கிறட் தம்பதியரின் அன்புமருமகனும் மேரிமெற்றில்டாவின் (ராணி) அன்புக்கணவரும் யூலியஸ் றூபேந்திரன், கவிதா (ஆசிரியை, யா/ நாகர்கோயில் அ.மி.த.க.பாடசாலை), சுஜாதா (யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிபொன்றோஸ், செல்வக்குமார், முரளிதரன் ஆகியோரின் அன்புமாமனாரும் பூங்கோதை (யாழ். பல்கலைக்கழக மாணவி), கிறிஸ்னிக்கா, அட்சயன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கொலை...

2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி சங்கானை முருகமூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றைக் கொள்ளையடித்திருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் சிவானந்தக் குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் கொல்லப்பட்டார். அவரது மகன்கள் இருவரும் படுகாயமடைந்தனர். இது தொடர்பான விசாரணைகளில் காசிநாதன் முகுந்தன் அல்லது சக்தி, பாலசுப்பிரமணியம் சிவரூபன் மற்றும் இராணுவச் சிப்பாய் பேதுறு குணசேன ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர்.

மல்லாகம் நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. வழக்கேடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் மூவருக்கும் எதிராக வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமை, துப்பாக்கி சூடு நடத்தியமை, குருக்களைக் கொலை செய்தமை மற்றும் மூவரைப் படுகாயப்படுத்தியமை ஆகிய 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் குற்றப்பகிர்வு பத்திரம் விசாரணைக்காக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. 3 பேரும் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கொலைக் குற்றத்துக்காக மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. தானியங்கி துப்பாக்கியைப் பயன்படுத்திக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றத்துக்கு மூவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. இருவர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்திப் படுகாயம் ஏற்படுத்திய குற்றத்துக்காக மூவருக்கும் 20 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. 20 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதங்கள் கடுழியச் சிறை அனுபவிக்க வேண்டும்.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்காக மூன்று மாதங்கள் கடுழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். தண்டமாக 10 ஆயிரம் ரூபா விதிக்கப்படுகிறது. செலுத்தத் தவறின் 6 மாதங்கள் கடுழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

படுகாயமடைந்தவர்களுக்கு இழப்பீடாக 2 இலட்சம் ரூபா வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 2 வருடங்கள் கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் - என்று நீதிபதி தீர்ப்பளித்தார். (4-37)

யார்....

பெற்றதாக சந்திப்புத் தொடர்பான புகைப்படம் ஒன்றையும் செய்தி குறிப்பையும் அரச தலைவர் ஊடகப் பிரிவு ஊடகங்களுக்கு நேற்று அனுப்பியுள்ளது. இரண்டு தரப்பிலும் யார் சொல்வது பொய் என்பதில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

அன்றைய நிகழ்வு முடிவடைந்த தன் பின்னர் தம்மை சந்திப்பதற்காக முன்னறிவித்தலின்றி புனித பத்திரிசியார் கல்லூரியின் வளாகத்துக்குள் வருகை தந்திருந்த அருட்தந்தை எம். சக்திவேல் உள்ளிட்ட காணாமல் போனோரின் உறவினர்களின் பிரதிநிதிகளை அரச தலைவர் சந்தித்ததோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சட்டதிட்டங்களுக்கமைய காணாமற்போனோரைக் கண்டறியும் அலுவலகத்தினூடாக நியாயமான தீர்வுகள் அவர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதன்போது தெரிவித்தார்.

அரச தலைவரைச் சந்திப்பதற்கு தமக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் ஏற்கனவே வேண்டுகோள் எதுவும் விடுக்கப்பட்டிராத நிலையிலேயே இந்தச் சந்திப்புக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

ஆயினும் அரச தலைவர் காணாமற்போனோரின் உறவினரை சந்திப்பதற்காக நேரத்தை ஒதுக்கிவிட்டு அவர்களை சந்திக்காமலே சென்றுவிட்டார் என்று ஊடகங்களில் வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை - என்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அருட்தந்தை எம்.சக்திவேலை தொடர்புகொண்டு கேட்ட போது, "அன்றையதினம் அரச தலைவரை சந்திக்க வைப்பதாக எம்மை பொலிஸார் அழைத்து சென்றனர். நாங்கள் மூன்று பேர் அங்கு சென்றோம். அரச தலைவர் நிகழ்வை முடித்துக்கொண்டு வாகனத்தில் ஏறுவதற்கு நடந்து வந்தார். அப்போது என்னுடன் வந்தவர்கள் காணாமல் ஆக்கபட்டவர்களுக்கு நீதியை பெற்றுத்தாருங்கள் என்று கோரினோம். அதனை அவதானித்த அரச தலைவர் நாம் கையில் வைத்திருந்த காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தையின் புகைப்படத்தை வாங்கிப் பார்த்தார். நாம் கதைக்க முற்பட்டபோது அரச தலைவர் பாதுகாப்பு பிரிவினர் எம்மை அங்கிருந்து அகற்றி விட்டனர். மைத்திரியும் அங்கிருந்து சென்று விட்டார். இதனைவிட அரச தலைவர் எம்முடன் எந்தவிதமான கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை" என்றார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர் திலீசனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"அரச தலைவர் நிகழவில் கலந்து விட்டு அங்கிருந்து புறப்படும் வழியில் எம்மை காத்திருக்க வைத்தனர். அப்போது நாம் கையில் வைத்திருந்த காணமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் எங்கே என்று அவரது புகைப்படம் பொறிக்கப்பட்ட பதாகையை அவர் வாங்கிப் பார்க்கும் போது காணாமல் ஆக்கப்படவர்களுக்கான விடயம் தொடர்பில் நீதி வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அவர் செவி சாய்க்காது அங்கிருந்து சென்றுவிட்டார். நாம் அங்கிருந்தபோது அரச தலைவர் பாதுகாப்பு பிரிவினர் எம்மை மைத்திரியுடன் கதைக்க விடாது எம்மை இழுத்து அப்புறப்படுத்தினர்" என்றார்.

இதேவேளை போராட்டம் நடைபெற்ற தினத்தன்று அரச தலைவர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைச் சந்திப்பதாகக் கூறிவிட்டு ஏமாற்றி விட்டதாகக் குற்றஞ் சாட்டிய அருட்தந்தையும், குறித்த அரசியல்வாதியும் அரச தலைவருக்கு அருகில் சென்றமை, புகைப்படத்தை அரச தலைவர் வாங்கிப் பார்த்தமை அங்கு நடந்த சம்பவம் போன்றவற்றை அன்றையதினம் ஊடகங்களுக்கு கருத்துகளை வழங்கியபோது தெரிவித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4-8)

மரண அறிவித்தல்

சலேத்தம்மா பரமேஸ்வரன்

(யாழ். போதனா வைத்திய சாலை ஓய்வுநிலை பரிசாரகர்)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சலேத்தம்மா பரமேஸ்வரன் நேற்று (22.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆபிரகாம் - கிறிஸ்ரீனா தம்பதியரின் அன்பு மகளும், பரமேஸ்வரன் (சுகாதார பரிசோதகர் ஊர்காவற்துறை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பதுவைநாயகம் மற்றும் இம்மானுவேல் லூர்த்தம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நதீஷ், வாகினி, வானதி, கலீஷ் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நவாலி சென்பீற்றேஸ் தேவாலயத்தில் நடைபெற்று நவாலி சென்பீற்றேஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs 15014)(13)

தகவல்: குடும்பத்தினர் 077 910 3385

கர்ப்பிணிகள் பீற்றூட் சாப்பிடுவது சிசுவுக்கு நல்லது



கர்ப்பிணிகள்பீற்றூட் சாப்பிடுவதன் மூலம் குருதிச் சோகை ஏற்படுவது தடுக்கப்படுவதோடு ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்கும் என்கின்றனர் மகப்பேறு மருத்துவர்கள். இதில் உள்ள நார்ச்சத்து உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைத்து நல்ல கொழுப்பை அதிகரிக்கிறது.

இதனால் குருதி நாளங்களில் கொழுப்பு படிவது தடுக்கப்படுகிறது. பீற்றூட்டில் உள்ள போலிக் அமிலம் கர்ப்பிணிகளுக்கு ஏற்றது. கருவில் வளரும் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு அவசியமானது. கர்ப்பினிகள் பீற்றூட் ஜூஸ் சாப்பிடுவதன் மூலம் குழந்தையின் முது கெலும்பு நன்றாக வளர்ச்சியடையும், குழந்தைக்கு நரம்பு தொடர்பான நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படும்.

கர்ப்ப காலத்தில் ஹீமோகுளோ பின் பற்றாக்குறை ஏற்படுவது இயல்பு. இதனால் குருதிச் சோகை ஏற்பட்டு பிரசவ காலத்தில் சிக்கலாகிவிடும். இதனை தடுக்க கர்பிணிகளுக்கு கொடுக்கும் உணவில் பீற்றூட் அதிகம் சேர்த்துக் கொடுக்கவேண்டும். உற்சாகத்தை அதிகரிக்கும்: இது மனதிற்கு உற்சாகம் தரும் காய்கறி. சற்றே சோம்பலாகவோ, மன அழுத்தம் ஏற்படுவதுபோல உணர்ந்தாலோ பீற்றூட் ஜூஸ் சாப்பிடலாம்.

இது மனதை உற்சாகப்படுத்தும், மகிழ்ச்சி ஏற்படும். இதில் உள்ள பீட்டா கரோட்டின் கண்களை பாதுகாக்கும். குழந்தைகளுக்கு கண்நோய் ஏற்படாமல் தடுக்கும். கர்ப்பிணிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். எனவே கர்ப்பிணிகளுக்கு சாலட், ஜூஸ், சூப் போன்றவைகளை செய்தும் கொடுக்கலாம்.

அழகுக் குறிப்புகள்

- கூந்தல் பளபளப்புடன் இருக்க ஒலிவ் எண்ணெயைக் கொதிக்க வைத்து வாரம் ஒரு தடவை தலையில் நன்றாகத் தேய்க்க வேண்டும். சுத்தமான ஒலிவ் எண்ணெய் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.
- பெண்கள் பச்சைத் தக்காளியை தினமும் சாப்பிட்டு வந்தால், தோல் அழகு பெறும்
- கோழி முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் ஒரு கோப்பையில் ஊற்ற வேண்டும். இதில் கொஞ்சம் எலுமிச்சம் பழச் சாறைக் கலக்க வேண்டும். கொஞ்சம் பாதாம் பருப்பை அரைத்துச் சேர்க்க வேண்டும். பின்னர் மூன்றையும் கலக்கி, முகத்தில் தடவினால், முகத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கும்.
- தலையில் தடவுவதற்கு எத்தனையோ விதம் விதமான ஹேர் ஒயில்கள் இன்று இருக்கின்றன. இந்த ஹேர் ஒயில்களெல்லாம் தலை முடியின் ஆயுளைக் குறைத்து விடுகின்றன. சுத்தமான நல்லெண்ணெயையும் சுத்தமான தேங்காயெண்ணையும் தவிர ஏனையவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
- முகத்தில் பரு இருக்கிறதா? இருந்தால், பருவை விரலால் கிள்ளாதீர்கள். கிள்ளினால் முகத்தில் விகாரமுள்ள, மாறாத வடுக்கள் விழுந்து விடும். எருமைப் பால் ஆடையை இரவில் பருவின் மேல் தடவுங்கள். காலையில் எழுந்ததும் சோப்புப் போட்டு முகத்தைக் கழுவுங்கள். பரு போய்விடும்.
- பனிக்காலத்தில் சிலருக்குத் தோலில் சில இடங்களில் வெடிப்புத் தோன்றும். வெடிப்புத் தோன்றிய இடங்களில் கொஞ்சம் வாஸ்லைனைத் தடவி வரவேண்டும். அப்படிச் செய்தால் வெடிப்பு மறைந்துவிடும்!
- கண்களுக்கு மை தீட்டிக் கொள்ளும் பழக்கமுள்ள பெண்கள், தூங்கச் செல்லும்து போது சோப்புப்போட்டு முகத்தைக் கழுவிவிட்டு அதன் பின்னரே தூங்க வேண்டும். கண் மையுடன் தூங்கக் கூடாது. கண்மையுடன் தூங்கினால் அது கண்களுக்கு பெரும் பாதிப்பாக அமையும்.
- குளித்தவுடன் உடல் முழுவதும் சிறிது பவுடர் போட்டுக் கொண்டால் புத்துணர்ச்சி அதிகரிக்கும்.
- முகத்தில் தோல் உரிந்தால் அதைப் போக்க சிறிது கிளிசரின், எலுமிச்சம்பழச்சாறு, சர்க்கரை ஆகியவற்றை கலந்து முகத்தில் தடவுங்கள். பிறகு சோப்பு போட்டு முகத்தைக் கழுவுங்கள். உரிந்த தோல் வந்து விடும்.
- தேங்காயை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். தோல் பளபளப்புக் குறையாமலும், கோளாறு ஏற்படாமலும் தேங்காய் பார்த்துக் கொள்கிறது. கொலஸ்ட்ரால் உள்ளவர்களும், இருதயநோய் உள்ளவர்களும் தேங்காயைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

அமெரிக்கா...

பட்டுள்ளது.

"தனது சிறிய தாயாரின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காகச் செல்லமுற்பட்டதாகவும், ஆனால் அந்த நாட்டுக்குள் நுழைவதற்கு அமெரிக்கா தடைவிதித்துள்ளது" என்று நாமல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின், மகனான, நாமல் ராஜபக்ஷ ரஷ்யாவில் நடந்த தேர்தலைக் கண்காணிக்கச் சென்றிருந்தார். அதனை நிறைவுசெய்து விமானத்தில் அமெரிக்காவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார். ஆனால் எமிரேட்ஸ் விமான சேவை அதிகாரிகள், நாமல் விமானத்தில் ஏற அனுமதிக்கவில்லை. விமானத்தில் ஏற்ற வேண்டாம் என்று அமெரிக்க அதிகாரிகள் அறிவுறுத்தினர் என்றும் எமிரேட்ஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். அனுமதி மறுப்புக்கான காரணத்தை அவர்கள் கூறவில்லை என்று நாமல் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரரான டட்லி ராஜபக்ஷவின், மனைவியான யதீந்திர ராஜபக்ஷ கடந்த சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

சிக்கலான...

டைய சிங்கள தேசியவாத அமைப்புகளும் வலியுறுத்தி வந்தன.

எனினும், கடும் எதிர்ப்பையும் மீறி சபாநாயகர் கையொப்பமிட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்டாலும் சபாநாயகர் கையொப்பமிட்ட பின்னரே அது சட்டபூர்வமானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தச் சட்டமானது இலங்கையில் கடந்த காலத்துக்குப் பொருந்தாது என்பதுடன், இலங்கையருக்கும் ஏற்புடையதாகாது என்பதால் தமிழர் தரப்புக்குப் பயனுடையதாக அமையவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

காணாமற்...

-24) ஆகியோரே சென்றிருந்தனர். அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் இரண்டு மகன்களுமாவர். அவர்கள் அன்றையதினம் மதியம் கரை திரும்புவதாகத் தெரிவித்துச் சென்றிருந்தனர். இதுவரை கரைதிரும்பவில்லை. அவர்களைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மீனவர்கள், சுழியோடிகள், விமானப்படையினர், கடற்படையினர் எனப் பலரும் தேடுதல்களில் ஈடுபட்டிருந்தனர். எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. தேடுதல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

இந்தநிலையில் காணாமல் போன மீனவர்கள் பயணித்த படகு நேற்றுமுன்தினம் தமிழகத்தில் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. காணாமல் போயிருந்தனர் என்று கூறப்பட்ட மூவரும் அங்கு உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வடக்கிலுள்ள தமது உறவினர்களுக்கு அலைபேசியில் அதனை உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (4-21,26)

ரணிலின்...

கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது எதிர்வரும் 4ஆம் திகதி சபையில் விவாதம் நடைபெறவுள்ளது.

இதற்காக நாடாளுமன்றம் முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது. தினப்பணிகள் முடிவடைந்த பின்னர் தீர்மானம் மீதான விவாதம் ஆரம்பமாகி இரவு 9.30 மணிவரை நடைபெறும். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

தலைமை அமைச்சருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுப்பதற்குரிய திகதி உள்பட சபை நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் நேற்று பிற்பகல் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, கூட்டு எதிரணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது விவாதத்துக்கு எடுப்பதற்குரிய திகதிகள் முன்மொழியப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரமே எதிர்வரும் 4ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிணைமுறி மோசடி தொடர்பில் 12 குற்றச்சாட்டுகளும், பொருளாதார முகாமைத்துவம், கண்டிக் கலவரம் ஆகியன தொடர்பில் ஒவ்வொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 8 குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டே ஏப்ரல் 4 ஆம் திகதி விவாதம் இடம்பெறவுள்ளது. (5)

4,500...

வகைகளாக 22 கோடி மக்களால் திராவிட மொழிகள் பேசப்படுகின்றன. திராவிட மொழிக் குடும்பம் 4000 முதல் 4500 ஆண்டுகள்வரை பழைமையானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தொல்லியல் ஆதாரங்களும், திராவிட பாரம்பரியம் மற்றும் கலாசார மேம்பாடுகளின் ஆரம்ப கால கட்டமும் ஒத்துப்போகிறது.

தமிழ் மொழிகளில் எதிர்கால இருப்பு என்று பார்க்கையில் தமிழ் பாதுகாப்பாக உள்ளது. பண்டைக்காலத்துக்கும் நவீன யுகத்துக்கும் இடையில் இணைப்பு பாலமாக செய்யுள்கள், கவிதைகள், மதசார்பற்ற மற்றும் பக்திசார்ந்த உரைநடைகள், இலக்கியங்கள், பாடல்கள் ஆகியவை தமிழ் மொழியில் எழுத்து வடிவில் உள்ளமையே தமிழின் எதிர்கால இருப்பு உறுதிப்படுத்தப் பட்டுள்ளமைக்கு முக்கிய காரணம்' என்றுள்ளது.

(ம)

மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா கனகசபாபதி

(கட்டுவன்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கனகசபாபதி நேற்று (22.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - இளையபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபாபதி (ஓய்வுநிலை நெல் சந்தைப்படுத்தும் சபை உத்தியோகத்தர்) இன் மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தர்லிங்கம், பரமலிங்கம் மற்றும் முத்தம்மா (கனடா), கனகம்மா, செல்லம்மா, பாலசிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மநாயகம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் லங்கா சிமெண்ட் லிமிட்டெட்) கனகநாயகம் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சிறிகந்தநாயகம் (முன்னாள் முகாமையாளர் நீடித்த கரும பீடம் மக்கள் வங்கி, திருநெல்வேலி), ஜெயகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறீஸ்கந்தராஜா (கனடா), பூமகள், உமாதேவி, சந்திரலதா ஆகியோரின் அன்பு மாமியும் துஸ்யந்தி - சுதேசன் (லண்டன்), நீரஜா (யாழ். பல்கலைக்கழகம்), துசாயினி - சிந்துயன் (கனடா), சந்தியா (கனடா), சாரங்கன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆதிரனின் (லண்டன்) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சத்தடி, இணுவில். **தகவல்: குடும்பத்தினர். 0771715729**

காலிறுதிக்குச் சென்றது ஸ்கந்தவரோதய அணி

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 26.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பகீரதன் 24 ஓட்டங்களையும், சுஜன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டென்சன் 3 இலக்குகளையும், தனுசன், பிரசன், சோபிகன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் அஜிதன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 14.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. அதிகபட்சமாக பிரசாந் 30 ஓட்டங்களையும், நிகர்ஜன், அஜிந்தன், தனுசன் ஆகியோர் தலா 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுஜன் 2 இலக்குகளையும், தயூரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-422)

வன்னி கால்பந்தாட்டப் போர் அடம்பனில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

'வன்னி கால்பந்தாட்டப் போர்' கிண்ணத்துக்கான தொடர் நாளையும் நாளைமறுதினமும் மன்னார் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் காலை 8 மணிமுதல் இரவு 11 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் 24 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

'ஏ' பிரிவில் மன்னார் சென். ஜோசப் அணி, வவுனியா மருதநிலா அணி, முல்லைத்தீவு சென். யூட் அணி ஆகியனவும், 'பி' பிரிவில் மன்னார் இணையும் கரங்கள் அணி, முல்லைத்தீவு இளம் பறவைகள் அணி, கிளிநொச்சி உதயதாரகை அணி ஆகியனவும், 'சி' பிரிவில் மன்னார் சென். மேரியன்ஸ் அணி, கிளிநொச்சி உருத்திரபுரம் அணி, முல்லைத்தீவு விக்னேஸ்வரா அணி ஆகியனவும், 'டி' பிரிவில் மன்னார் சென். சேவியர் அணி, வவுனியா யங்ஸ்ரார் அணி, முல்லைத்தீவு சுப்பர்ராங் அணி ஆகியனவும், 'இ' பிரிவில் மன்னார் சுடரொளி அணி, கிளிநொச்சி நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி, முல்லைத்தீவு இளம் தென்றல் அணி ஆகியனவும், 'எப்' பிரிவில் மன்னார் யூனியன் அணி, முல்லைத்தீவு முள்ளியவளை வளர்மதி அணி, கிளிநொச்சி இளந்தளிர் அணி ஆகியனவும், 'ஜி' பிரிவில் மன்னார் சென். தோமஸ் அணி, கிளிநொச்சி இரணைமாதா சென். மேரிஸ் அணி, வவுனியா யுனைபைட் அணி ஆகியனவும், 'எச்' பிரிவில் மன்னார் சென்றலைட்ஸ் அணி, வவுனியா ஈஸ்வரன் அணி, மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய அணி ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. (ம-422)

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் சிறப்புத் தேவையுடையவர்களுக்காக அண்மையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது. வவுனியா நகரசபை மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. (ம-110)

கரவைச்சுடர், பாரதி அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், மார்ச் 23

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால் பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கரவைச்சுடர், பொலிகை பாரதி அணிகள் வெற்றிபெற்றன.

யங்கம்பன்ஸ்விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பாரதி அணி.

மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் கரவைச்சுடர் அணி வெற்றிபெற்றது. (ம-23)

இன்றைய மோதல்கள்

யங்கம்பன்ஸின் கால்பந்தாட்டம்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலட்டி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலைவாணியின் கால்பந்தாட்டம்

கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் 40வயதுப் பிரிவினருக்கான கால் பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமொன்று இன்று மாலை 4.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதித்து நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

இறுதிக்குத் தகுதிபெற்றது நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 23

பரபரப்பான ஆட்டத்தில் யங் கம்பன்ஸை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான கால் பந்தாட்டத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் சஞ்சிவன், சங்கர் இருவரும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-108)

வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், மார்ச் 23

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விண்மீன் அணி வெற்றிபெற்றது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் விண்மீன் வெற்றிபெற்றது. (ம-23)

உ.கிண்ணத்துக்கு மே.தீவுகள் தகுதி

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நேற்று முன்தினம் நடை பெற்ற தகுதிச் சுற்று ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை எதிர்த்து ஸ்கொட்லாந்து மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சகல இலக்கு களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லூயிஸ் 66 ஓட்டங்களையும், சாமுவேல்ஸ் 51 ஓட்டங் களையும், பிரீத்வைட் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஷெரிப், வீல் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி 32 பந்துப்பரி மாற்றங் களில் 5 இலக்குகளை இழந்து 125 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக் கிட்டது. டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்று உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. (ம)

58 ஓட்டங்களில் மடிந்தது இங்கி.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத் தின் முதலாவது இன்னிங்ஸில் வெறும் 58 ஓட்ட ளில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் பகலிரவு ஆட்டமாக நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக அலிஸ்டர் குக் மற்றும் ஸ்ரோன்மன். 5 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பி னார் அலிஸ்டர். 11 ஓட்டங்களுடன் ஸ்ரோன்மனின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. அணித் தலைவர் ரூட், மலன் இருவரையும் ஓட்டமெதையும் பெற விடாமலும், ஸ்ரோக்ஸை 8 ஓட்டங்களுடனும் வீழ்த்தி னார் வேகப் பந்து வீச்சாளர் போல்ட். பாிஸ்ரௌவ், மொயின் அலி இருவரும் ஓட்டமெதையும் பெறாது அடுத்தடுத்து சவுத் தியிடம் வீழ்ந்தனர். 23 ஓட்டங்களுக்கு 8 இலக்கு களை இழந்தது இங்கிலாந்து. தடுமாற்றம் தொடரவே செய்தது. போல்ட், சவுத்தி இருவரும் புயல் வேகத்தில் வீசிக்கொண்டிருந்தனர். புரோட், வோக்ஸ் இருவரும் முறையே ஓட்டமெதையும் பெறாமலும் 5 ஓட்டங்களு டனும் வீழ்ந்தனர். 27 ஓட்டங் களுக்கு 9 இலக்குகளை இழந்தது இங்கிலாந்து. ஓவர்டன் கடைசிக்கட்டத்தில் அடித்தாடினார். அவர் 25 பந்துகளில் 33 ஓட்டங்க ளைச் சேர்க்க தட்டித்தடுமாறி 50 ஓட்டங்களைத் தாண் டியது இங்கிலாந்து. 33 ஓட்டங்களுடன் ஓவர்டன் ஆட் டமிழக்க 58 ஓட்டங் களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து.

பந்துவீச்சில் போல்ட் 6 இலக்குகளையும், சவுத்தி 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நாள் முடி

வில் 3 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற் றுள்ளது. அணித் தலைவர் வில்லியம்சன் 91 ஓட்டங் களுடனும், நிக்கொல்ஸ் 24 ஓட்டங்களுடனும் களத் தில் உள்ளனர்.

இங்கிலாந்து அணி 58 ஓட்டங்களுக்குச் சுருண்டமை யானது 6ஆவது குறைந்தபட்ச பெறுதியாகும். இங்கி லாந்து அணி 45 ஓட்டங்களில் 1887ஆம் ஆண்டு சுருண்டதே அந்த அணியில் குறைந்தபட்ச பெறுதியா கும். 131ஆண்டுகால மோசமான நிலைக்கு செல்வதை அந்த அணி கடுமையாகப் போராடித் தவிர்த்தது. நியூ சிலாந்து அணி 26 ஓட்டங்களில் சுருண்டமையே இதுவரை குறைந்தபட்சப் பெறுதியாக உள்ளது. (ம)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் 16 வயதுக்கு உட் பட்ட பிரிவில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணி முதலிடத்தைப் பிடித்து வலயச் சம்பியனாகியது. (ம-9)

ஐ.பி.எல். தொடரில் டி.ஆர்.எஸ்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நடு வரின் முடிவை மறுபரிசீலனை செய் யும் டி.ஆர்.எஸ். முறை பயன்படுத்தப் படும் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறி வித்துள்ளது.

கடந்த ஐ.பி.எல். தொடர்களில் டி.ஆர். எஸ். முறை இல்லாதமையால் சில ஆட் டமிழப்புக்கள் நடுவரின் தவறுகளால் அமைந்திருந்தன. இதனால் இனிவரும் ஐ.பி.எல். தொடர்களில் டி.ஆர்.எஸ். முறை வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்தே இந்த முறைமையை நடப்பு வருடத்தில் நடை முறைக்குக் கொண்டுவருவது தொடர் பில் பரிசிலித்து வந்தது ஐ.பி.எல். நிர்வா கம். பெரும்பாலும் டி.ஆர்.எஸ். நடை முறைப்படுத்தப்படும் என்று கணிக்கப் பட்ட நிலையில், அதை உத்தியோகபூர் வமாக அறிவித்தது ஐ.பி.எல். நிர்வாகம். டி.ஆர்.எஸ், முறைப்படி தொலைக்காட்சி நடுவரை களத்தில் நிற்கும் நடுவர்கள் தொடர்பு கொள்ளும் போது நடக்கும் உரையாடலை தொலைக்காட்சியில் ஆட்டத்தைப் பார்ப்பவர்களும் பவிலிய னில் உட்கார்ந்திருப்பவர்களும் கேட்கக் கூடியவாறும் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. (ம)

புரோட் 400

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் தனது 400ஆவது இலக்கை வீழ்த்தினார் இங் கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சா ளர் ஸ்ருவேர்ட் புரோட்.

நியூசிலாந்துக்கு எதிராக நேற்று ஆரம்ப மான டெஸ்ட் தொடரின் முதலாவது இன்னிங்ஸில் நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லாதமை வீழ்த்தியதை அடுத்தே பன்னாட்டுடெஸ்ட் அரங்கில் தனது 400ஆவது இலக்கை எட்டினார் புரோட். (ம)

மொகமட் சமி குற்றமற்றவர்

பி.சி.சி.ஐ. அறிவிப்பு

இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் சமி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தவறானவை. சமி குற்றமற்றவர். இதனால் அவர் எந்தத் தடையும் இல்லாமல் ஐ.பி.எல். தொடரில் விளையாடலாம் என்று அறிவித்தது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

சமி மீது அண்மைக்காலமாக தொடர்ந்து பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்தார் அவரது மனைவி ஹசின். டுபாய் சென்று அங்கு பாகிஸ்தான் பெண் ஒருவரைத் தொடர்புகொண்டு சமி ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று அவர் தெரிவித்திருந்தார். ஹசினின் முறைப்பாடு தொடர்பில் ஊழல் தடுப்புக் குழு விசாரணை நடத்தியது. இதனால் ஐ.பி.எல். தொடரில் களமிறங்கும் வாய்ப்பு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒப்பந்தம் ஆகியவை சமிக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. விசாரணை நேற்றுக் காலை நிறைவடைந்தது. சமி குற்றமற்றவர் என்று அறிவிக்கப்பட்டது. ஐ.பி.எல். தொடரில் களமிறங்க அனுமதியும் வழங்கப்பட்டது. அத்துடன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் 'பி' பிரிவில் சமி சேர்த்துக்கொள்ளப்பட்டார். (ம)

ஆஸிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்

தென்னாபிரிக்கா சிறந்த ஆரம்பம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி சிறந்த ஆரம்பம் கண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக எல்கர் மற்றும் மார்க்ரம். ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார் மார்க்ரம். 6 ஓட்டங்களில் தனது முதலாவது இலக்கை இழந்தது தென்னாபிரிக்கா. எல்கருடன் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் அம்லா. இணைப்பாட்டமாக 86 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் அம்லா. அரைச்சதம் கடந்தார் எல்கர். எல்கருடன் இணைந்து அற்புதமான ஆட்டத்தை வழங்கி தென்னாபிரிக்காவைப் பலப்படுத்தினார் வில்லியர்ஸ். அளவுக்கு அதிகமாக நிதானிக்காமல் அவ்வப்போது சில பவுண்டரிகளையும் பதிவுசெய்துகொண்டிருந்தார் வில்லியர்ஸ். ஓட்டங்கள் கிடுகிடு வென உயர்ந்தன. 80 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வில்லியர்ஸ். அவர் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வில்லியர்ஸ் ஆட்டமிழந்தபோது தென்னாபிரிக்க அணி 220 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வில்லியர்ஸ் வீழ்த்தப்பட்ட பின்னர் களமிறங்கிய பிளாசிஸ், பவுமா, குயின்டன் டி ஹொக் மூவரும் சிறந்த ஆட்டத்தை வழங்கவில்லை. முறையே 5, 1, 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர் அவர்கள். ஆனால் மறுமுனையில் சதம் கடந்தார் எல்கர். நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி 8 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. எல்கர் 121 ஓட்டங்களுடனும், ரபாடா 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் அடுத்த மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒவ்வொரு அணிகளும் தம்மை மிக விரைவாகத் தயார்ப்படுத்தி வருகின்றன. டெல்லி அணியின் ஜெர்சி அறிமுக நிகழ்வு நேற்று நடைபெற்றது. (ம)

சரீனா அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் மியாமி தொடரில் அமெரிக்க வீராங்கனை சரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்து முதல் சுற்றுடன் வெளியேறினார்.

சரீனா வில்லியம்ஸை எதிர்த்து ஜப்பான் வீராங்கனை ஒசாகா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:0 என்ற செற் கணக்கில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் ஒசாகா. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்

திட்டமிடல் சேவை மட்டுப்படுத்தப்படுத்த பரீட்சைக்கு

சனி (24.03), ஞாயிறு (25.03)
வெள்ளி (30.03), சனி (31.03)
ஞாயிறு (01.04)
9.30 → 3.00

முகாமைத்துவ உதவியாளர், முன்பள்ளி, சாரதி தெரிவு

பிரிவு I
சனி 1.00 → 4.30
பிரிவு II
செவ்வாய், வியாழன்
3.30 → 6.00

076 688 3394

D.M.I
வெலிங்ரன் சந்தி.

விசேட கருத்தரங்குகள்

திட்டமிடல் திறந்த பரீட்சை
ஞாயிறு
9.30 → 3.00

முகாமைத்துவ உதவியாளர்
பிரதி ஞாயிறு
10.00 → 2.00

சட்டமாணி நுழைவு
பிரதி ஞாயிறு
09.00 → 3.00

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். நகர்
021 222 3382

விசேட வகுப்புக்கள்

★ வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்
★ வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்
★ வடமாகாண சாரதி சேவை

பிரதி ஞாயிறு
9.00 am - 2.00 pm
விசேட இறுதிக் கருத்தரங்கு
April 07, 08 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள
SLPS
(OPEN / LIMITED)
March - 24,25,30,31
April - 01ஆம் திகதிகளில்
9.00 - 2.00 pm
புதிய முறையில் அமைந்த முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் கற்று துறைசார் விரிவுரையாளர்களினால் ஆராயப்படும்.
நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி யாழ்.நகர்
077 469 6695

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
hp
புதுவருடத்தை முன்னிட்டு
கணினிகளுக்கு
3% முதல் 5%
வரையிலான விசேட விலைக்கழிவு மற்றும் இலவசப்பரிசுகள்
இச்சலுகை இருப்புள்ள வரை அல்லது ஏப்பிரல் 15 திகதி வரை மட்டுமே.
இலவசப் பரிசுகள்:
1. Pen Driver 16GB ADATA (01 Year Warranty)
2. Mouse Pad
3. K7 Antivirus (01 Year)
4. Free 01 year on-site Services
5. Free Delivery (Around 10 Km in Jaffna City)
HOME DELIVERY SERVICE
மேலதிக பக்கேஜ் விபரங்களுக்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு : 0777 667975, 021 2221121
HP ProDesk 280 G3 Core i3 (7th Gen Kaby Lake)
Intel Core i3-7100 (3.9GHz 3M Cache 2 Cores)
4GB DDR4 RAM Memory
500GB HDD
DVD/RW Drive
HP Monitor 19" Inches LED HD
OS - Free Dos
3 Years Warranty
Rs.69,900/-
No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.